சன்மார்க்க இலகு போத வினா-விடை.

ஆக்கியோன்

க. மீ. மீரான் முஹியித்தீன் ஹக்கீம் மஸ்தான்.

பதிப்பித்தது

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்

திருவல்லிக்கேணி

மதிராஸ்.

இதன் விலை
ரூபா-1 ஸதம்-50. 1-50.

சென்னை:

1915.

போத மென்னப் பொருந்துயர் நாமஞ்
சாற்றிய விதனைச் சன்மதி யுடையீர்
போற்றிய கொண்மின் புன்மைமற் றகற்றிச்
சின்னூ லாயினுஞ் சிறந்தன பொருள்பல
நன்னூ லேற்ப நனிபயன் றருதலா
லகத்தினும் புறத்தினு மகிழ்தெனத் திகழ்தருஞ்
சுகத்திற் செறித்தலால் துணைக்கரத் தெடுமின்
நேர்பெற விதனை நிகழ்பெற வியற்றுமோர்
யாரெனி லருளுவ லருநெறிப் பழன
மருங்கிற் செறியு மன்னிய பொழினனி
யொருங்குசூழ்ந் திலகு முயர்பல நாடக
வளத்திற் சிறந்த வரிசை யாழ்ப் பாணமாந்
தளத்திற் சிறந்த தண்பதி வாழ்வோர்
வியனும் வருத்தக மேவிய தொழிலி
னயினு முஹம்மது நனிமகிழ் தனையர்
தேயாத்தவந்திகழ் செய்யிது பஹுலுபூக்
கோயாச் செழுங்கரங் கொண்டவோர் சீட
ருய்பல கலைகளி னூங்கிய வன்பராம்
செய்ஹுசன் லெப்பையின் செவ்விய விஜாசத்
தேய்ந்தன வணக்கி னியன்முறை புரிவோர்
வேய்ந்தன வாயுள் வேத விதிமுறை
யுண்மையிற் றேர்ந்து முயர்தரத் தெங்குந்
தின்மையிற் பேர்போந் திடுந்திறன் மதியோர்
மிகையிற் றீன்முறை தெருண்மீரான்
முகியித்தீ னென்று முதிருணர் வினரே.

மன்னர் தாராக்குண்டு

அ. க. நே. மதாறு சாகிப் புலவர் அவர்களியற்றிய

சிறப்புப்பாயிரம்.

நேரிசை யாசிரியப்பா.

பூவொடு வானு புனைகடல் மலையும்
மாவொடு மிரவி மதியுடு வனமும்
பொன்னுல கமரர் புரையுறு நிரையம்
மின்னிடி முகிலினம் வியன்குறு சறுஷொடு
மெழுவும்பி முதலா யெறும்பீ றுக
உறும்பல வுயிர்கள் நிறம்பெறு தவசம்
பலவும் படைத்துப் பயன் றிறம்பாது
குலவியக் காக்குங் குதாய்திரு வொளியில்
பிரிந்தொரு மணியாய் பேசுதற் கெவரும்
வரைவதற் கொழியா மாண்பினிற் செறந்து
தக்கதோர் வளந்திகள் மக்கமா புரத்தின்
ஹக்கனின் னருளால் விக்கின மகற்றிய
தின்னிய புயத்து மன்னரப் துல்லா
கண்மணி மகவாய் புண்ணியம் விளங்க
ஆமினு ரீன்ற மூமி னுயகமாய்
ஹாமி தகது ஹாமீ முஹம்மது
எந்நபி மாரினு முன்னபி யாகிப்
பின்னபி யான நன்னபி நெயினர்
மன்னபிக் களித்த வின்னயப் பொறுக்கான்
தன்னைச் சிறுவர் முன்னிலைப் படுத்தி
எழிதின் மார்க்கம் வழுவற வுணரும்
வழியதை யறிந்து தெளிவுற வாய்ந்து

திக்கெல்லாம் புகழும் பிக்ஹுக் கிதாபு
விக்கின மில்லாத் தக்க பல்நூலும்
திரைநிக ரில்லை வரையற மாந்தி
தரைத்தல மதனில் கரைத்தல மறியா
மார்க்க வினவுந் தீர்க்க விடையும்
ஏர்க்கத் திருத்தி பார்க்கப் பொருத்தி
ஆங்காங் காரும் பாங்கா யறிய
தீங்க கலீமா னேங்கிய தௌப்பா
உள்ளறி வோடு தெள்ளறி வாக
வெள்ளி யுருக்கி யள்ளி யெடுத்த
தன்மையா யார்க்கு நன்மையே பெருக
இந்நிலத் திதுவாம் நன்னலத் திசுலாம்
சக்கில்லா தோது திக்கீர் பிக்கீர்
துக்க மகண்டுளி வக்கணை காட்டி
ஆலமறு வாஹு ஆல மிதாலு
ஆலமஜ் ஸாமும் ஆல மின்சனு
லாஹூத் துடனே பாஹூத் ததுவும்
ஹாஹூத் தாகு மாஹூத் தனேகம்
தீட்டிசன் மார்க்க மூட்டிலகு போதம்
நீட்டின னூர்க்கும் வேட்டமுற் றேங்க
பூமலி மரைமலர் புனைந்த பல்வாவி
மாமலி நல்வளம் வயங்கிடு மிலங்கைக்
கோர்மணி யென்ன வுரைத்திட நற்றமி
ழார்பதி யென்றே யணியுறக் கவியில்
கற்றவ ராக்கம் பெற்றவர் முற்றும்
தத்துவ முற்ற சித்திரப் புலவர்
எண்ணிடக் கரிய புண்ணிய ருறைந்த

விண்ணம தகண்ட தண்ணக ராகி
தென்னையுங் கமுகு மூன்குலைக் கன்னி
கன்னல் செஞ்சாலி பன்னுற விளையும்
தாழ்ப்பற வோங்கு யாழ்ப்பாண மதனில்
மீட்புறு முஸ்லீம் நேப்புறு குலத்தின்
சுத்தவ முணர்ந்த வத்தகச் சிரேஷ்டன்
சத்தியந் தவறு துத்தம பூமன்
பொய்புறம் நீத்த நய்னு முஹம்மது
செய்தவத் தாலுறு மெய்தவப் புலவன்
அறபு யூனனி விறற்பெறு கிரந்தம்
கரப்புரு வயித்தியஞ் சிறப்புறு தமிழும்
எல்லா முணர்ந்த வல்ல பண்டிதராய்
பொல்லாப் பிணியி னல்ல லகற்றி
பாய்கொள் ரணங்க ளோய்வுறச் செய்தும்
தாய்தந்தை யொத்து நோய்பல தறுப்போன்
மனக்களி கூர தனக்கொரு ஷெய்கு
வணக்குடை யாரா யிணக்கமா ராய்ந்து
இந்தியா வதனு லந்தருேத் தீவால்
வந்திடுஞ் ஞானர் சுந்தரக் குலத்தார்
மெய்மறை யுணர்ந்த செய்யி து பலுலு
துய்யபூக் கோயா ஐவலக் காத்தை
தொட்டுமெய்த் தீட்சை இட்டமாய் பெற்றோன்
தட்டில்லாத் தௌஹீது யெட்டிய ஷெய்கு
கல்வியிற் பிரியன் கவிசொலத் தீரன்
சொற்செயல் செல்வம் துணிபுறக் கொண்டோன்
நேரார் தவத்தன் மீரா முஹியித்தீன்
பாரோ ரறிய பனுவல் செய்தனனே

யாழ்ப்பாணம்

ஸ்ரீ கி. மரியாம் பிள்ளைப் புலவர் சொல்லிய

நிலைமண்டில ஆசிரியப்பா

தேனலர் வீசும் திருவிலங் காபுரிக்
கானதோர் திலத மாகவே விளங்கும்
வளந்திகழ் யாழெனு மான கரத்தில்
விளங்கிய முஸ்லீம் மிக்கநற் சமைய

வித்துவ சிரோண்மணி மேலான நன்மைக்
குத்தம மானவன் உலகமே வியக்க
அறபுயூனனி ஆங்கிலேய தமிழில்
திரையுடுத் திடுமிச் செகமெலா மகிழ

பண்டித ராகிப் பலபிணி தீர்த்து
அண்டுவோர் தம்மை யாதரித் தன்பாய்த்
தந்தைதாய் போலே தாபரித் திடுவோன்
வந்திடு நோய்களை மாற்றிடு வல்லோன்

ஈந்தியா தேசத் தெழில்பெறு கல்விச்
சாந்தநற் கடலைத் தாண்டியே யுயர்ந்த
செய்யிது முஹம்மது இகழ்பலுல் பூகோயா
எய்து மிபுனு அப்துற் றஹ்மான்

ஷைகு முஹம்மது அசனு லெப்பை
உய்த்திடு மிபுனு சுல்த்தான் முஷிதீன்
என்றுமே புகழு மிருகுர வோரா
லன்றுமே தீட்ஷை யடைந்துமே குருவாய்

கல்விக்கடலிற் களிப்புற நீந்தி
நல்விற்பனராய் நாடெங்கு மதிக்கும்
இஸ்லாம்சமையத் தெய்தியமுறைமை
யசைவிலா திறுத்தி யவரவர் நன்மை

கடைப்பிடித்தென் றும் கைவிடாதல்லா
வுடைப்புகழ்வேண்டி யுத்தமாராக
வேண்டிய நோக்கம் மிக்கவேகொண்டு
ஆண்டகைதன்னை யருமனத் திருத்தி

மூன் னூற்றெருகுத்த முறைமையிற்பிசகா
தென்னுளுமேன்மை யெய்தியே வாழ்வோன்
தொகுத்துரையிலக்கண தொடர்பிழையின்றி
வகுத்துரையாலே வாய்ந்த மூத்தமிழ்க்கும்

பொருந்தவேயெவர்க்கும் புண்ணியமாக
அருந்த மிழினத்தை யமிர்தமாயுண்டு
நற்கதிபெறவே நவிலருகவியோர்
எச்சங்கத்தாரு மினிதெனவேற்க

மஷாயுகுஷைகு மகிழ் சதக்கத்துல்
லாயில்காதிரிய்யி காஷிரிவழியில்
தோன்றிய நயினர் முஹம்மது தவத்தால்
சான்ருயுதித்த தக்க நற்புதல்வன்

புத்தியிற் றீரன் புலவர்சிகாமணி
யுத்தமவாணு யுலகமே மதிக்க
தடைசூனியங்கள் சகலது மறுத்து
அடையவே நலத்தை யகிலத்திலீயும்

மீராமுஷிதீன் விளங்குசன்மார்க்க
நேரான இலகுபோதமாம் நூலை
இயற்றினனெவரு மினியபேரின்ப
நயத்தையேகருத நானிலமீதே.

சிறப்புப்பாயிரம்

முற்றுப்பெற்றது.

பிழை திருத்த அட்டவணை.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
66	24	தக்கபீலு	தக்பீறு
70	6	யெம்படி	யெப்படி
80	21	வஃதா நிய்யா	வஹ்தானிய்யா
98	7	அலமோதி	அலைமோதி
102	11	மைந்து	ளமைந்து
105	16	எண்ணியே	யின்றியே
116	5	எத்தின்	எத்தீம்
118	8	முறிப்து	முறித்து
141	16	தரிக்கும்	தரிசிக்கும்
150	17	மூல்ஹு	மூல்கு
152	9	மீலுகிறது	மீறுகிறது
156	13	வியாயத்து	விலாயத்து
159	9	யுருளா	யுருவா

பிழைதிருத்த அட்டவணை

முற்றிற்று.

இந்நூலின் பாடங்களாவன.

முற்பகுதி பாடங்கள்

முற்பகுதி இருபத்தோன்றும் முற்றிற்று.

பிற்பகுதி பாடங்கள்.

பிற்பகுதி இருபத்தோன்றும் முற்றிற்று.

அட்டவணை முற்றிற்று.

முகவுரை.

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ۝ وَالْعَاقِبَةُ لِلْمُتَّقِيْنَ ۝ وَالصَّلٰوةُ

وَالسَّلَامُ عَلٰى رَسُوْلِهٖ سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ

وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ

எல்லாப் புகழுக்கும் வல்ல பொருளாகிய அல்லா சுபுஹானஹு வத்தஆலாவுக்கு உரியன. கருணையு மீடேற்றமும் நமது நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் பேரிலும், அவர்கள் கிளையார் பேரிலும், தோழன்மார் பேரிலும் உண்டாவதாக.

அல்லாவுடைய ஆதரவுள்ளவனாகிய மிஸ்கீன் மீரான் முஹ்யித்தீனாகிய யான் இச்சிறிய புஸ்தகத்தை அல்லாவுடைய உதவியைக் கொண்டும், அன்பியாக்கள், அவுலியாக்களுடைய பறக்கத்தைக் கொண்டும் எழுத ஆரம்பித்தேன்.

இதில் நாற்பத்தியிரண்டு பாடங்களிடப் பெற்றிருக்கின்றது. ஒவ்வொரு பாடமும் வினாவும் விடையுமாக முடியப்பெற்றது. சாதாரணமாக மனிதர்களுக்கு விளங்கும்பொருட்டு இலகுவான சொற்களினாலும், பொருள்களினாலும் இயற்றி இதற்குச் சன்மார்க்க இலகுபோதமெனப் பெயர் சூட்டியிருக்கிறேன். இதிலேதும் பிழைகளிருந்தால் கற்றவல்லார் குறை கூறாது பொறுத்துத் திருத்திக் கொள்ளுமாறு கோருகின்றேன்.

ஆக்கியோன்.

ந. மீ.

10-வது உண்மையாக ஒருவன் ராஜதனத்துக்கு இருக்கிறவனுக்கு, இல்மும் வறஹுூம் இல்லாமற் போனுல் அவனே ராஜதனத்தை விட்டும் அகற்றி விடுவதினுல் மிகுதி சங்கட முண்டாகுமாகில் அவனே ராஜதனத்திலிருத்துவது சஹீஹுூதான் என்று அறிகிறது.

இன்னுமொருவன் இந்த நாற்பது அஸ்லில் ஒன்றேனும் விடாதபடி இஃதிகாது கொண்டானுகில் அவன் ஈடேற்றம் பெற்ற அஃலுஸ் ஸுூன்னத்து களிலுள்ளவன். இஃதிகாது கொள்ளாதவன் ஹலாக் கான பிதுஹத்துக்காரரிலாக விருப்பான். அவனே விட்டும் அல்லாஹுூத் தஆலா நம்மைக் காப்பாற்று வாஞகவும்.

வினு:—வழிகெட்ட கூட்டங் களெத்தனே ?

விடை:——ஆறு கூட்டம்.

அவைகளில்,

1-வது ருவுஃளிகள்.
2-வது கவாரிஜுூகள்.
3-வது ஜெபரிய்யத்துக்காரர்கள்.
4-வது கதரிய்யத்துக்காரர்கள்.
5-வது முஅத்தலத்துக்காரர்கள்.
6-வது முசப்பஹத்துக்காரர்கள்.

இந்த ஆறுகூட்டத்தில் நின்றும் ஒவ்வொரு கூட்டத்தில் பன்னிரண்டாகப் பிரிந்து எழுபத்திரண்டு கூட்டமாவார்கள். இந்த எழுபத்திரண்டு

கூட்டமும் குல்லுஹூம், பின்னார், அவர்களடங்க
லும் நரகம் புகுதுவார்கள்.

இன்னும் நபி முஹம்மதுன் ஸல்லல்லாஹூ
அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். எனது உம்
மத்துமார்கள் மேலைக்கு எழுபத்திமூன்று கூட்டமா
கப்பிரிவார்கள். அதில் எழுபத்திரண்டு கூட்ட்மும்
நரகத்திலும் ஒரு கூட்டம் சுவர்க்கத்திலுமாவார்க
ளென்று திருவுளமானார்கள் ஆகையால், ஈமானும்,
இஸ்லாமும், தௌஹீதும், மஅரிபாவும், கலப்பறுத
லாகப்பற்றிப் பிடித்தெடுத்து நடந்து நேர்வழி
பெற்று ஹக்குத்தஆலாவின் லிகாவைக்காண ஆசை
வைத்த அஃலுஸ் ஸூன்னத்து வொல்ஜமாஅத்து
களில் நாமாகியிருக்க அல்லாஹூத் தஆலா நற்கிரு
பை றகுமத்துச் செய்வானாக ஆமீன்.

இஸ்லாமில் முதலாம் றுக்கின் முற்றிற்று.

இஸ்லாத்தி னிரண்டாம் றுக்குன்.

வினா:—இஸ்லாமிலமைந்த இரண்டாவது றுக்குன் என்ன?

விடை:—தொழுகை நிலைபடத்தொழுகுதல்

தொழுகையின் விவரமாவன.

ஹதீது.

قَالَ النَّبِيُّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ الصَّلَاةُ عِمَادُ الدِّيْنِ مَنْ

أَقَامَهَا فَقَدْ أَقَامَ الدِّيْنَ وَمَنْ تَرَكَهَا فَقَدْ هَدَمَ

الدِّيْنَ

நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். தொழுகை தீனுக்குத் தூணாகவிருக்கும். எவனொருவன் தொழுகையை நிலைபாடாகத் தொழுதானோ திடனாக அவன் தீனை நிறுத்திவைத்தான். எவனொருவன் தொழுகையை விட்டானோ திடனாக அவன் தீனை இடித்துவிட்டானென்று அறியவும்.

வினா:—தொழுகையின் விபரமென்ன?

விடை:—பருவத்தை எத்திஹைறஹுனிபாஸு இல்லாமல் துப்புரவான ஆணும் பெண்ணும் பிசகாத புத்தியுள்ளவர்களாக விருக்கும் காலமெல்லாம்

நித்தியமும் அல்லாஹுத் தஆலாவைத் தொழு தல் விதியாகும்.

வினு:—ஆணும் பெண்ணும் பாலிகு என்கிற பரு வத்தை யெத்தியென்றது என்ன?

விடை:—இருபாலரும் சிறந்தெழுந்து வளர்ந்து வரும் பதினைந்து பதினாறு வருஷம் நிரப்பமாக விந்து வெளிப்படுதலும் ஹைலு வருதலு மாம்.

வினு:—பிசகாத புத்தி யுள்ளவர்களென்றது என்ன?

விடை:—பிசகாத புத்தியுள்ளவர்களென்றது பைத் திய முதலியவை யில்லாதிருத்தலுமாம். தொழு குதல் விதியென்பது பறுலு சூழ்ந்தபடியால் திடனுக ஆராய்ந்து தொழுகுதல் வேண்டு மென்பதாயிற்று.

வினு:—ஆராய்ந்து தொழுகுதலென்பது என்ன?

விடை:—ஆராய்ந்து தொழுகுதலென்பது பருவத் தை யெத்தியவுடன் ஆண் பெண்ணிருவருக்கும் முழுக்கு விதியாகும். முழுக்கு விதியானவுடன் விதித்தபறுலான முழுக்கையிருக்கும் வகையில் துய்ய நீர்கொண்டு நஜீசை நீக்குதலும், அந்த நீரைப் பேதலிக்கத்தடுக்கக் கூடியவைகளையகற் றுதலும், நிய்யத்தும் உலுவும் வேண்டியதா யிற்று. விதித்தபறுலான தொழுகை நிறைவேறு கிறதற்கென்றறியவும். ஆகையால் முந்தி முழுக் கியல் கூறவேண்டியதாயிற்று.

முழுக்கியல் கூறல்.

வினா:—முழுக்கியலென்பது என்ன ?

விடை:—முழுக்கியலென்பது ஆலத்துக்கெல்லாம் நபியாகிய முஹம்மதுன் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்குரிய அன்புள்ள தீனோர்க்கே யுலகத்தில் எப்பொழுதும் நயத்தைப் பெறும்படி துடக்காகிய நஜீசை நீக்குவதாம்.

வினா:—முழுக்கு விதியாகும் முறைகளெத்தனை ?

விடை:—முழுக்கு விதியாகும் முறை ஆறுவகை கொண்டதாகும்.

அவற்றுள் மூன்றுவகை ஆண் பெண் இருபாலார்க்கும் பொதுவாகும். அவை,

1-வது ஆண்குறியின் வரையளவும் பெண் குறியிற் குள்ளாக மறைந்தாலும்,

2-வது விந்து வெளிப்பட்டாலும்,

3-வது மரணித்தாலும், முழுகுதலிருவருக்கும் விதியாகும் மற்றொரு மூன்று காரணமும் பெண்சாதிக்கே தனதாகும்.

1-வது சூதகமென்னும் ஹைலுவந்தாலும்,

2-வது பிள்ளை பெற்றாலும்,

3-வது ஈரமில்லாமற் பெற்றாலும் இம்மூன்றும் பெண்களுக்கே சொந்தமென்று அறிவீர்களாக.

வினா:—முழுக்கின் பறுலுகள் எத்தனை ?

விடை:—முழுக்கின் பறுலுகள் மூன்று. அவை,

1-வது உடலில் நஜீசுகளிருந்தால் அவற்றைக் கழுவித் துப்புரவு செய்தலும்.

2-வது இம்முழுக்குடையான் விதித்த இப்பறுலான முழுக்கை இறுக்குகிறேனென்று நிய்யத்து வைத்தலும்.

3-வது அந்நிய்யத்துடனே சரீரமுழுவதும் தண்ணீராற் றேய்த்தலுமாகிய இம்மூன்றுமாம்.

வினா:—முழுக்கின் ஷறுத்துகளெத்தனை?

விடை:—முழுக்கின் ஷறுத்துகள் மூன்று. அவை, அந்த ஆறுவகைப்பட்ட முழுக்கிலும் ஷறுத்துகள் மூன்று.

1-வது நீரைப் பேதலிக்கச்செய்யும் சந்தனம் மாலா நீரை மேனியிற் செல்லவிடாத சுண்ணும்பு, கீள், மருதோண்டி, பிசின், தார், கனத்த எண்ணெய் இவைகளைப்போலொத்த தெவைகளையும் சரீரத்திலில்லாமல் நீக்கிக்கொள்ளுதலும்.

2-வது அம்முழுகுதலுடையா னிஸ்லாமை யுடைய வனுதலும்.

3-வது தூய்மை பெற்ற துய்தாகிய தண்ணீரைத் தேடிக்கொள்ளுதலுமாகிய இம்மூன்றுமாம்.

வினா:— முழுக்கின் ஸுன்னத்துகளெத்தனை?

விடை:— முழுக்கின்ஸுன்னத்துகள் பத்து அவை,

1-வது முந்தி பிஸ்மில் செல்லுதலும்.

2-வது முன்கைகளைக் கழுவுதலும்.

3-வது வாய் கொப்பளித்தலும்.

4-வது நீரை நாசியிற் செலுத்தலும்.

5-வது உலுச்செய்தலும்.

6-வது வைத்தநிய்யத்தை நாவினுற் சொல்லுதலும்,

7-வது சரீரத்தைக் கையாற் றேய்த்தலும்.

8-வது கிபுலாவை முன்நோக்குதலும்.

9-வது செய்யும் கருமங்களை வலப்புறம் முந்திக் கொள்ளுதலும்.

10-வது ஒவ்வொன்றின்பின்னென்ருய் உலுவைத் தொடர்ச்சியாய்ச் செய்தலுமாம்.

வினு:—முழுக்காளர் செய்ய ஹறுமான கருமங்களெத்தனே ?

விடை:—முழுக்காளர் செய்ய ஹறுமானவை ஐந்து பெண்களுக்கு மூன்று கூடி எட்டாகுமென்றுணர்க. அவை,

1-வது தொழுகையைத் தொழவும்,

2-வது குறு ஆனே ஓதுதலும்,

3-வது அதனைத் தொடுதலும்,

4-வது தொழுகைக்குரிய பள்ளியினுட் தரிபடுதலும்,

5-வது மக்காவிலுள்ள கஃபாவை தவாபு செய்தலுமாகிய விவ்வைந்தும் ஹறுமாகும்.

இனி பெண்களுக்குக் கூட வென்றதில்,

1-வது ஹைலு, நிபாசுக்காரிகள் நோன்பு பிடித்தலும்.

2-வது புணர்ச்சி செய்தலும்.

3-வது முழந்தாளுக்கும் கொப்பூளுக்கு மிடையில் புருஷன் கையாலேது மிணக்கஞ் செய்தலுமா கிய விம்மூன்றுங் கூடி எட்டுக்கருமங்களும் ஹறுமாகுமென்றறியவும்.

வினு:—முழுக்காளர் செய்ய மக்றூகான கருமங்க ளெத்தனை?

விடை:—முழுக்காளர் செய்ய மக்றூகான கருமங்கள் ஏழாகும். அவை

1-வது பிள்ளைப் பெற்ருலும்,
2-வது ஹைளு வந்தாலும்,
3-வது ஆணும் பெண்ணும் கூடினுலும்,
4-வது விந்து வெளிப்பட்டாலும்,
5-வது ஈரமின்றிப் பிள்ளை பெற்ருலுமுண்டான

முழுக்கின் மக்றூவானவை யேழில்

1-வது நகமறுத்தலும்,
2-வது முடி நீக்குதலும்,
3-வது உடலில் இரத்தம் குத்தியெடுத்தாலும்,
4-வது உலுவில்லாமற் றூங்கினுலும்,
5-வது உலுவில்லாமற் குடித்தாலும்,
6-வது உலுவில்லாம லுண்ணுதலும்,
7-வது உலுவில்லாமல் மறுதரம் புணர்தலுமாகிய இவ்வேழும் மக்றூவாகும். இன்னுமோர் கொடியது அமல்களை யழிக்கக்கூடிய செயலிதை யறிந்து நடப்பீர்களாக. அது ஒக்தைக் கடத்தி

முழுக்கையிருப்பதுவாம் நித்திரையும் மறதியு மன்றி அந்தந்த ஒக்துலே உடனே முழுகுத லாம். பிந்த வைத்து முழுகுவது ஹறுமாகும்.

முழுக்கியல் முற்றிற்று.

உலுவின் ஷறுத்துகளைக்கூறல்.

வினு:—உலுவின் ஷறுத்துகளெத்தனை?

விடை:—உலுவின் ஷறுத்துகள் ஏழாகும். அவை,

1-வது அவ்வுலுவிற்குரியவனிஸ்லாமை யுடையவனுதலும்.

2-வது நன்மை இடறு வகுத்துக்காணும் புத்தி யுடையவனுதலும்.

3-வது அவனவ்வுலுவினைப் பறுலென்றறிதலும்,

4-வது அவன் உலுவினடவெல்லா முற்றறிதலும்.

5-வது துப்புரவான நீரைத்தேடிக்கொள்ளுதலும்.

6-வது உலுவினுறுப்பாகிய, முகம், கை, தலை, கால், மேனியில் நீரினைத் தடுக்கும்பொருட்டுள்ளதையும் பேதலிக்கும் பொருட்டுள்ளதையும் நீக்கிக்கொள்ளுதலும்,

7-வது பெரும்பாட்டுக்காரியும் தொங்குநீர்க்காரனும், ஒக்து வந்த பின்பு உலுச்செய்தலுமாமென்றறியவும்.

உலுவின் ஷறுத்துகள் முற்றிற்று.

உலுவின் பறுலுகளைக் கூறல்.

வினா:—உலுவின் பறுலுகளெத்தனை?

விடை:—உலுவின் பறுலுகள் ஆறு வகையுண்டு. அவை,

1-வது உலுச்செய்கிறேனென்று நிய்யத்து வைத்தலும்,

2-வது அந்த நிய்யத்துடனே முகங்கழுவுதலும்,

3-வது இரண்டு கைகளையும் முழங்கையுட்படக் கழுவுதலும்.

4-வது தலையிற் சிறிதிடத்தை நீரால் நனைத்தலும்.

5-வது இரண்டு கால்களையும் பாடுள்ளாகக் கழுவுதலும்.

6-வது இக்கருமங்கள் முன்பின்னாகாமற் சொல்லி வந்த முறைபோலே செய்தலுமா மென்றறியவும்.

உலுவின் பறுலுகள் முற்றிற்று.

உலுவின் ஸுன்னத்துகளைக் கூறல்.

வினா:—உலுவின் ஸுன்னத்துகளெத்தனை?

விடை:—உலுவின் ஸுன்னத்துகள் முப்பத்தாறுகும். அவை,

1-வது கைகழுவும்போது அஊது பில்லாஹி மினஸ் ஷெய்தானிற் றஜீமென் றோதுதல்,

2-வது பிஸ்மில்லா ஹிர்றகுமா னிர்றஹீ மென்றோதுதல்,

3-வது கிபுலாவை முன்னோக்குதல்,

4-வது முன்கையிரண்டும் மணிக்கட்டு வரையிற் கழுவுதல்,

5-வது அப்போதே உலுவுடைய ஸுன்னத்தை நிய்யத்து வைக்குதல்.

6-வது சாய்த்துக் கழுகும் கலசம்போலொத்ததை இடப்பக்கத்திலும் கையையுள்ளே முங்கிக் கழுவும் சட்டிபோலொத்ததை வலப்பக்கத்திலும் வைக்குதல்,

7-வது மிஸ்வாக்குச் செய்யுதல்,

8-வது பல்லுக்குத்துதல்,

9-வது வாய்கொப்பளிக்கும்போது தலையை நிமிர்த்தித்தொண்டை வரையிலும் கனைத்துக் காறிக் கொப்பளிக்குதல்,

10-வது நாசியில் நீர் செலுத்துதல்,

11-வது இந்த இரண்டு ஸுன்னத்தையும் ஒருமுறை கையிலெடுத்த நீரினுல் செய்யுதல்,

12-வது இந்த இரண்டு ஸுன்னத்திலும் நோன்பாயல்லாதவன் மிகுதமாக்குதல்,

13-வது முகம் கழுவும்போது காதிலும் தலையிலும் நாடி இறக்கத்திலும் சிலதைச் சேர்த்துக்கழுவுதல்,

14-வது முகத்தில் மேற்புறமிருந்தும் கைகளில் முன்கையிலிருந்தும் தலையின் முற்புறமிருந்தும் காலின் விரலிலிருந்தும் துவக்கம் செய்யுதல்,

15-வது முழங்கை கழுவும்போது கொஞ்சம் கூட்டி மேற்படக் கழுவுதல்,

16-வது தலையின் உச்சிநனைய மஸ்கு செய்யுதல்,

17-வது மஸ்கு செய்வதில் ரோமம் மிகுதி யிருந்தால் இருகையின்பெருவிரலும் சென்னியில் வைத்து இருகலிமா விரலையும் தலைப்புறத்திற் சேர்த்து பிடரியளவும் தேய்த்து மடக்கித் துவக்கம் செய்யுதல்,

18-வது இருகாதையும் பெருவிரல்களால் வெளிப் புறம் மஸ்குசெய்யுதல்,

19-வது இருசின்னி விரல்களால் இருகாதின் குளி யையும் மஸ்கு செய்யுதல்,

20-வது இடக்கையின் சின்னிவிரலால் வலக்காலின் சின்னி விரலிலிருந்தும் இடக்காலின் சின்னி விரல் வரையிலும் குடைந்து கழுவுதல்,

21-வது இருகாலையும் குதிவரையிலும் கழுவுதல்,

22-வது ஒவ்வொரு உறுப்பையும் கழுவிய நீர் உலர முன் இன்னொரு உறுப்பைத் துயர்ந்து கழு வுதல்,

23-வது உறுப்புகளைத் தேய்த்துக்கழுவுதல்,

24-வது உறுப்புகளில் வலதை இடதைக் காண முற் படுத்துதல்;

25-வது கண்ணில் நாலு குழிமடிப்புகளையும் தேய்த்துக் கழுவுதல்,

26-வது அடர்ந்த தாடியாக விருந்தால் தேய்த்துக் குடைந்து கழுவுதல்,

27-வது உலுச்செய்யும்போது பிறரோடு பேசாதிருத்தல்,

28-வது கைவிரல்களைக் கோர்த்துக்கழுவுதல்,

29-வது உலுச்செய்யும்போது இன்னொருவரைக் கொண்டு தண்ணீர் ஊற்றுவிருப்பது,

30-வது உலுச்செய்யவேண்டிய உறுப்புகளில் நீரைத் தடுக்கவும் பேதலிக்கவும் செய்யும் வஸ்துகளை நீக்கிக்கொள்ளுதல்,

31-வது ஒவ்வொரு உறுப்புக்கும் ஷஹாதத்துக் கலிமா சொல்லிக் கழுவுதல்,

32-வது கழுவுவதையும் மஸ்கு செய்வதையும் மும்மூன்றுக்குதல்,

33-வது உலுச்செய்த பிறகு அந்நீரில் ஒரு சொட்டேனும் குடித்தல்,

34-வது உலுச்செய்தானபின் உடுமானத்துக்குள்ளே கொஞ்சம் நீர் தெளிக்குதல்,

35-வது இருளாயிருக்கினும் கண்பெட்டையனுயிருக்கிலும் கிபுலாவை நோக்கிப்பார்வையை யுயர்த்திக் கைகளை யேந்தி அல்லாஹும்மஜ்அல்னீதுஆ வோதுதல்,

36-வது சூறத்து இன்னா அன்சல்னாவை மூன்று தரம் ஓதுதலுமாமென்றறியவும்.

உலுவின் ஸுன்னத்துகள் முற்றிற்று.

உலு நீங்கும் காரணம் கூறல்.

வினா:—உலு எத்தனை வகைகொண்டு முறியும்?

விடை:—உலுஐந்து வகைகொண்டு முறியும். அவை:

1-வது பகுத்தறியு மறிவுமாறினாலும்,

2-வது கொள்ள முறையுள்ள பெண்பிள்ளையின் சரீரத்தில் தொட்டலும்,

3-வது சகனப்பரப்பை யொன்றோடொன்று நெருக்கித் தரையிற் பொறுக்கவையாமல் நித்திரை செய்தாலும்,

4-வது ஆண்குறி பெண்குறிகளில் கையினுட்புறம் பட்டாலும்,

5-வது முன்துவாரம் பின்துவாரங்கள் வழியாக விந்தல்லாத வேறேயேது வந்தாலும் உலு நீங்குமென் றறியவும்.

வினா:—விந்தல்லாத வேறேயேதும் வருவதென்பதென்ன?

விடை:—வருவதென்பது மலம், சலம், காற்று, புழு முதலியவற்றைக் கருதும்.

வினு:—துவாரங்களென்பது குறிகளென்பதையொத் ததோ?

விடை:—குறியென்பது பின் துவாரத்தையு முட்படுத் தியொத்து நின்றது. அதனுல் பின் துவாரத் தையும் தொடலாகாதென் றறியவும்.

வினு:—குறியென்பதிலேதும் பிரிவுண்டோ?

விடை:—குறியென்பது சிறுமிகளின் குறிகளையு மொக்குமென் றறியவும்.

உலு நீங்கும் காரணம் முற்றிற்று.

உலுவில்லார் செய்ய ஹறுமான கருமங்களைக் கூறல்.

வினு:—உலுவில்லார் செய்ய ஹறுமான கருமங்க ளெத்தனை?

விடை:—உலுவில்லார் செய்ய ஹறுமான கருமங் கள் மூன்று. அவை,

1-வது வேதமாகிய புறக்காணைத் தொடுதல் செய்ய வும்,

2-வது தொழுகையைத் தொழவும்,

3-வது மக்கத்துக் கருபாவை வலம்செய்து வரவு மாகாரென் றறியவும்.

உலுவியல் முற்றிற்று.

தொழுகைக்கு முந்தின ஷறுத்துகளைக் கூறல்.

வினா:-தொழுகைக்கு முந்தின ஷறுத்துகளெத்தனை?

விடை:—தொழுகைக்கு முந்தின ஷறுத்துகள் பத்தாம். அவை,

1-வது முஸ்லிமாயிருத்தலும்,

2-வது புத்திமானாயிருத்தலும்,

3-வது அவுறத்தை மறைத்தலும்,

4-வது பெரிய சிறிய துடக்குகளை நீக்குதலும்,

5-வது சரீரத்திலும் உடுத்திய உடையிலும் தொழுகுமிடத்திலும் நஜீசை நீக்கிக்கொள்ளுதலும்

6-வது கிபுலாவை முன்னோக்குதல்,

7-வது ஒக்தை யறிதலும்,

8-வது தொழுகையினொழுங்கை யறிகிறதும்,

9-வது தொழுகை தன்மேல்விதி யென்றறிகிறதும்,

10-வது பறுலை ஸுன்னத்தென் றெண்ணாமலிருத்தலுமாம்.

தொழுகைக்கு முந்திய ஷறுத்துகள் பத்தும் முற்றிற்று.

தொழுகையென்னும் பறுலின் தொகையுங் கூறல்.

வினா:—தொழுகையென்னும் பறுலின் றொகையெத்தனை?

விடை:—தொழுகை யென்னும் பறுலின் றொகை பத்தொன்பது. அவை,

1-வது மனத்தாலுன்னிய நிய்யத்தும்,
2-வது மூந்தின தக்பீறும்,
3-வது நிலையும்,
4-வது அந்த நிலையில் ஓதும் பாத்திஹாவும்,
5-வது றுக்கூவும்,
6-வது அதிற்றரிபடுதலும்,
7-வது இகுத்திதாலும்,
8-வது அதிற் றரிபடுதலும்.
9-வது ஸுஜூதும்.
10-வது அதிற் றரிபடுதலும்,
11-வது இடையிருப்பும்,
12-வது அதிற் றரிபடுதலும்,
13-வது இரண்டாம் ஸுஜூதும்,
14-வது அதிற் றரிபடுதலும், ஆகிய இந்தப் பதினான்குமாம். மற்ற ஐந்து பறுலும் பிந்திய அததஷிய்யாத்தில் காணுமென்றறியவும்.

வினா:—மற்றப் பறுலு ஐந்தும் அத்தஷிய்யாத்தில் வரும் வகை யெப்படி ?

விடை:—மற்றப் பறுலைந்தும், இருப்பிலும், ஓதல்களிலும், ஸலவாத்திலும், ஸலாமிலும், ஒழுங்கிலும் ஆகிய இவ்வைந்துமாம். அவை:

1-வது அத்தஷிய்யாத்துக்கென் றுள்ளத்திலுன்னி யிருப்பதும்,

2-வது அவ்விருப்பில் அத்தஷிய்யாத் தோதுவதும்,

3-வது ஸலவாத்தோதுவதும்,

4-வது அஸ்ஸலாமு அலைக்குமென்று ஒரு ஸலாம் சொல்லுவதும்,

5-வது மேற்சொல்லிய பறுலுகளை முறை பிசகாமல் முன்பின்னாகாமற்கொண்டு வருவதுமாம்

பறுலான தொழுகையின் பறுலுபத்தொன்பதும் முற்றிற்று.

இந்தப் பத்தொன்பது பறுலுகளின் ஷறுத்துகளெடுத்துரைக்கும் வகையாவன.

1-வது நிய்யத்து என்னும் பறுலுக்கு ஷறுத்துகள் கூறல்.

வினா:—நிய்யத்து வென்னும் பறுலுக்கு ஷறுத்துகளெத்தனை ?

விடை:—நிய்யத்து என்னும் பறுலுக்கு ஷறுத்து நான்காம். அவை,

1-வது தொழுகிறேனெனக் குறித்துக் கொள்ளுகிறதும்,

2-வது பறுலேப்பறுலென்னுகிறதும்,

3-வது தொழுவதற்கு வகுத்ததொழுகையைத் தொழும்போது அத்தொழுகையை யின்ன தொழுகையென்று எண்ணிக்கொள்ளுகிறதும்,

4-வது அல்லாஹு வென்னுஞ் சொல்லிலுள்ள அலிபுக்கும். அக்பறென்னுஞ் சொல்லிலுள்ள றேக்கு மிடையில் முன்சொன்ன நிய்யத்தைத் தரிபடுத்துகிறது மாகிய இந்நான்குமா மென்றறியவும்.

2-வது அவ்வல் தக்பீறு என்னும் பறுலுக்கு ஷறுத்துகள் கூறல்.

வினு:—தக்பீறு என்னும் பறுலுக்கு ஷறுத்துகளெத்தனை?

விடை:--ஷறுத்துகள் ஒன்பதென் றறியவும். அவை,

1-வது அல்லாஹு அக்பரென்னுஞ் சொல்லை அறபுப்பாஷையாற் சொல்லுதலும்,

2-வது அதன் எழுத்துகளில் ஒன்றையும் விடாமற் சொல்லுதலும்,

3-வது அதிலுள்ள ஷத்தை விடாமற் சொல்லுதலும்,

4-வது இரண்டு அலிபுகளையும் நீட்டாமற் சொல்லுதலும்,

5-வது ஹேயை நீட்டாமற் சொல்லுதலும்,
6-வது பேயை நீட்டாமற் சொல்லுதலும்,
7-வது இரைச்சலில்லா விடத்தில் செவிடில்லாத வன் தன் காது கேட்கச் சொல்லுதலும்,
8-வது அட்சரங்களைத் தொடாடைவாய்ச் சொல்லுதலும்,
9-வது அவ்வாக்கியத்தை நிலையிலே முடிப்பதுமா மென் றறியவும்.

3-வது நிலையென்னும் பறுலின் ஷறுத்து கூறல்.

விஞ:-நிலையென்னும் பறுலுக்கு ஷறுத்து எத்தனை?
விடை:—நிலையென்னும் பறுலுக்கு ஒரு ஷறுத்துண்டும். அது நிற்கும் நிலையில முதுகின் எலும்புகளெல்லாம் நேர்பாடாகவும் ஒன்றுபடவும் வலப்புறம் இடப்புறம் முன்புறம் பின்புறம்களில் சாயாமலும் வளையாமலும் நேரே நிற்பதாம்.

4-வது பாத்திஹாவென்னும் பறுலின் ஷறுத்துகள் கூறல்.

விஞ:—பாத்திஹாவென்ற பறுலுக்கு ஷறுத்துகள் எத்தனை?
விடை:—பாத்திஹாவென்னும் பறுலுக்கு ஷறுத்து எட்டுண்டு. அவை,

1-வது அதிலுள்ள எழுத்துகளை விடாமலோது தலும்,

2-வது அதனிலுள்ள ஷத்தாகிய வொற்றெழுத்தினை யும் விட்டிடாதோதுதலும்,

3-வது அதனிலுள்ள கருத்தைப் பேதகமாக்கும் இஃருபு பிழை வராமலோதுதலும்,

4-வது தொடராகவோதுதலும்,

5-வது ஒழுங்காகவோதுதலும்,

6-வது தன்காதுகேட்கவோதுதலும்,

7-வது வேறு பாஷைகளாலோதாமையும்,

8-வது அதனை அந்த நிலையிலேயோதி முடித்த லுமா மென்றறியவும்.

5-வது றுக்கூவு என்னும் பறுலுக்கும்,

6-வது அதிற் றரிப்பென்னும் பறு லுக்கும் ஷறுத்துகள் கூறல்.

வினா:—றுக்கூவு என்னும் பறுலிலும் அதிற் றரிப் பெனும் பறுலிலும் ஷறுத்துகளெத்தனை ?

விடை:—றுக்கூவிலும் அதிற் றரிப்பிலும் ஷறுத்து கள் மூன்ருகும். அவை,

1-வது இரண்டுள்ளங்கையு மிரண்டு முழங்காலின் முட்டிடத்திற் பதியவைக்குமளவில், தலையுயரா மலுந் தாழாமலுமொப்பக் குனிதல்,

2-வது றுக்கூவுக்குக் குனியுமிடத்தில் வேறொரு கருமத்தை மனதிலெண்ணி அதற்காகக் குனியாமையுமாம். மற்றொன்று அக்குனிவிற் றரிப்டுந் தரிப்பாகிய பறுலில் ஒரேயொரு ஷறத்துண்டும், அது உறுப்புகளெல்லாம் அசைவற்றொடுங்கி நிற்கிறதாமென் றறியவும்.

7-வது இகுதித்தாலெனும் பறுலுக்கும்,

8-வது அதிற் றரிப்பெனும் பறுலுக்கும் ஷறுத்துகள் கூறல்.

வினா:—பறுலாகிய இகுதித்தாலிலும் அதிற் றரிப்பிலும் ஷறுத்துகளெத்தனை?

விடை:—பறுலாகிய இகுதித்தாவிலும் அதிற் றரிப்பிலும் ஷறுத்துகள் நான்காம். அவை,

1-வது றுக்கூவிலிருப்பவன் நிமிரும்போது இகுதித்தாலுக் கென்றுள்ளத்தி லுன்னித் தலையை யுயர்த்துதலும், மற்றொன்றுக்காய்த் தலையை யுயர்த்தாமையும்,

2-வது நிமிர்ந்து நிற்கும் நிலையில் முந்தின நிலை போல் நிற்குதலும்,

3-வது நியமித்த திக்றுக்கு அதிகப்பட பாத்திஹா ஓதுகிற நேரமளவு மந்நிலையிற் றரிபட்டிராமையுமாம். அந்நிலையிற் றரிபடும் பறுலில் ஒரே ஒரு ஷறுத்துண்டென்றுணர்க. அவை,

சரீர முசும்பாம லொடுங்கி நிற்குதலாமென் றறியவும்.

நியமித்த திக்றுவென்பது ஸமியல்லாஹு லிமன்ஹமிதா றப்பனு லகல்ஹம்து என்பதாம்.

9-வது ஸுஜூதெனும் பறுலின் ஷறுத்துகள் கூறல்.

வினு:—ஸுஜூதெனும் பறுலுக்கு ஷறுத்துகளெத்தனை?

விடை:—ஸுஜூதின் பறுலுக்கு ஷறுத்துகளே மூண்டும், அவை,

1-வது நெற்றியைத் தரையிற்பட வைத்தலும்,

2-வது அதைத் திறந்திருத்தலும்,

3-வது இரண்டுள்ளங் கைகளும் முழந்தாட்களும் கால்விரல்களினுட்புறமும் தரையிற் பற்றுதலாய்ப் படவைத்தலும்,

4-வது சிரமும் பிடரியும் கனம் சமமாய்ப் பொறுக்க வைத்தலும்,

5-வது முற்புறந்தாழ்ந்து பிற்புற முயர்ந்துகொள்ள வைத்தலும்,

6-வது ஸுஜுதுக்கன்றி மற்றென்றுக்காய்க் குனியாமையும்,

7-வது அங்கவஸ்திரங்கள் தொங்கினல் அதில் ஸுஜுது செய்யாமையுமாமென் றறியவும். அப்படி அங்கவஸ்திரங்களின்மேல்ஸுஜுது செய்தால் தொழுகை கூடாதென் றுலமாக்களுரைத்தனர்.

10-வது ஸுஜுதின் தரிப்பெனும் பறுலுக்கு ஷறுத்து கூறல்.

வினு:—ஸுஜுதின் தரிப்பெனும் பறுலுக்கு ஷறுத்து எத்தனை?

விடை:—ஸுஜுதின் தரிப்பெனும் பறுலுக்கு ஷறுத்து ஒன்றாம். அது சரீரமுழுவதும் அசையாமலொடுங்கி யிருப்பதாம், இந்த ஒரேயொரு ஷறுத்தென் றுணர்க.

ஸுஜூது செய்யும்போதுள்ள கவனங்களாவன. அவை,

நெற்றியினை யந்நிலத்தில் வைத்தலன்றி தலையினை வைத்தாலும், மூக்கினை வைத்தாலும், கன்னப்புறத்தை வைத்தாலும், , உள்ளங்கையை வைத்தலன்றிப், புறங்கையை வைத்தாலும், கையருகினை வைத்தாலும், விரல் நுனிகளாலூன்றினாலும், அன்றியும், பாதவிரல்களினுட்புறம் வைத்தாலன்றி, விரல் நுனியை வைத்தாலும் புறங்காலை வைத்தாலும், மெய்மையாகிய ஸுஜூது கூடாதென்றறியவும்.

11-வது இடையிருப்பெனும் பறுலுக்கும்,

12-வது அதிற்றரிப்பெனும் பறுலுக்கும் ஷறுத்துகள் கூறல்.

வினு:—இடையிருப்பெனும் பறுலுக்கும் அதிற்றரிப்பெனும் பறுலுக்கும்ஷறுத்துகளெத்தனை?

விடை:—இடையிருப்பெனும் பறுலுக்கும் தரிப்பெனும் பறுலுக்கும் ஷறுத்துகள் நான்காம்.

1-வது சரீரம் முன்பின் வலமிடம் சாயாமல் நேர்படுதலும்,

2-வது மற்றொரு கருமத்தை யெண்ணித் தலையை யுயர்த்தாமையும்,

3-வது அந்தத்தரிப்பைத் திக்றுக்குமேல் அத்தஹிய் யாத்துடைய கதறுக்கு நீட்டாமையுமாம் ஆகிய விம்மூன்றுமாம். மற்றொன்று அதிற் றரிபடும் பறுலுக்கு ஒரேயொரு ஷறுத்துண்டுணர்க. அது சரீரமுழுவதும் அசையாம லொடுங்கி யிருத்தலாம்.

13-வது இரண்டாவது ஸுஜூது தும்.

14-வது அதிற் றரிபடுதலும்.

முந்திய ஸுஜூது இருப்பு, தரிபடுதல்களுக் குள்ள ஷறுத்துகளைப்போலா மென்றறியவும்.

15-வது பறுலாகிய அத்தஹிய்யாத் திருப்பின் ஷறுத்துகள் கூறல்.

வினு:—பதினைந்தாம் பறுலாகிய அத்தஹிய்யாத் திருப்பின் ஷறுத்துக ளெத்தனை?

விடை:—பறுலாகிய அத்தஹிய்யாத் திருப்பின் ஷறுத்துகள் இரண்டாம். அவை,

1-வது வசந்த முதுகினை எலும்புகள் வளையாமல் நேரே யிருப்பதும்,

2-வது பிந்திய ஸுஜூதிற் பொருந்திய தலைதனை யெடுக்கும்போது அந்த அத்தஹிய்யாத்தல் லாததற்கென் றெண்ணித் தலையை யுயர்த்தா மையுமாம்.

16-வது அத்தஹிய்யாத் தோதலென்னும் பறுலுக்கும், 17-வது ஸலவாத்தோதலென்னும் பறுலுக்கும் ஷறுத்துகள் கூறல்.

வினா:—அத்தஹிய்யாத் தோதலென்னும் பறுலுக்கும் ஸலவாத் தோதலென்னும் பறுலுக்கும் ஷறுத்துக ளெத்தனை ?

விடை:—அத்தஹிய்யாத் தோதலுக்கு எழு ஷறுத்துண்டும். ஸலவாத் தோதுதலுக்குரிய ஷறுத்து இவ்வேழுந்தான். அவை,

1-வது அத்தஹிய்யாத்தி லமைந்த எழுத்துகளில் யாதொன்றையும் விடாமலோதலும்.

2-வது ஷத்தாகிய வொற்றெழுத்துகளிலியாதொன் றையும் விடாமலோதலும்,

3-வது அதின் மஃனாவெனும் அர்த்தபேதகமாக் கும் இஃறாபு, பிழைவராமலோதலும்,

4-வது அம்மொழியி னோசையைச் செவிடில்லாத வன் இரைச்சலில்லாவிடத்தில் தன் காதுகேட்க வோதலும்,

5-வது அதின் சொற்களின் றொடர்பு கெடாமற் றொடராயோதலும்,

6-வது அதன் வாக்கியத்தின் வைப்பில் ஒழுங்காக வோதலும்,

7-வது அதினிருப்பிலே யோதி முடித்தலுமாம். இன்னும் பதினேழாம் பறுலாகிய ஸலவாத் தோதுதலுக்குரிய ஷறுத்துகள் இவ்வேழுந் தானென் றறியவும்.

18-வது பறுலாகிய ஸலாமின் ஷறுத்துகள் கூறல்.

வினா:—முந்திய பறுலான ஸலாமின் ஷறுத்துகளெத்தனை?

விடை:—முந்திய பறுலான ஸலாமின் ஷறுத்துகள் ஐந்தாம். அவை,

1-வது எழுத்துப் பிசகாமற் சொல்லுதலும்,
2-வது ஷத்துப்பிசகாமற் சொல்லுதலும்,
3-வது அதின் சொற்றொடர்பாய்ச் சொல்லுதலும்,
4-வது அதினோசை செவிடில்லாதவன் இரைச்சலில்லாவிடத்தில் தன் காது கேட்கச் சொல்லுதலும்,

5-வது அந்த இருப்பிலே யோதிமுடித்தலுமாம்.

—(:o:)—

இன்னும் பத்தொன்பதாம் பறுலாகிய ஒழுங்கில்.

ஒரேயொரு ஷுறுத்துண்டும். அது அந்தந்தப் பறுலுகள் முற்பட்டது பிற்படாமலும், பிற்பட்டது முற்படாமலும் பேணுதலாய், ஒழுங்காய் அந்தந்த நிரையில் அவ்வவ்விடங்களிற் பூரணமாய்க் கொண்டுவருதலை யறிந்திருத்தலே யாமென்றறியவும்.

தொழுகையின் பத்தொன்பது பறுலுகளின்

ஷுறுத்துகள் முற்றிற்று.

அபுஆலு ஸுன்னத்துகள் கூறல்.

வினு:—அல்லாஹுத் தஆலாவைத் தொழும் தொழுகையில் அபுஆலு சுன்னத்துகளெத்தனை?

விடை:—அபுஆலு சுன்னத்துகள் ஆறுகும். அவை

1-வது நடுஅத்தஹிய்யாத்தும்,

2-வது அதற்குரிய விருப்பும்,

3-வது நபிநாயகமவர்களின் பேரிலோதும் ஸலவாத்தும்,

4-வது கடைசி அத்தஹிய்யாத்தில் அவர்கள் கிளையார்பேரிலோதும் ஸலவாத்தும்,

5-வது ஒவ்வொரு சுபுகிலும் றமலான் மாசத்தின் பிற்பாதி வித்றிலும் ஓதும் குனூதும்,

6-வது குனூதோத வென்றுள்ளத்தி லெண்ணிப் பேணிநிற்கு மந்நிலையுமா மென்றறியவும்.

அபுஆலு சுன்னத்துகள் முற்றிற்று.

தொழுகையின் அலங்கார ஸுன்னத்துகள் கூறல்.

வினா:—தொழுகையின் நிய்யத்தின் அலங்கார ஸுன்னத்துகளெத்தனை?

விடை:—நிய்யத்தின் ஸுன்னத்துகள் மூன்றும். அவை,

1-வது நிய்யத்தைத் தனக்குத் தெரிந்த பாஷையில் நாவினால் தக்பீறுக்கு முந்திச் சொல்லுதலும்,

2-வது அதாவினை அதாவென்றும், கலாவினை கலாவென்றும் நினைத்தலும்,

3-வது அல்லாஹுத் தஆலாவுக்குத் தொழுகிறே னென் றுள்ளத்தில் நினைத்து அந்த நினைவை நிய்யத்தோடு சேர்த்தலுமாமென் றறியவும்.

ஆதிதக்பீறின் அலங்கார ஸுன்னத்துகள் கூறல்.

வினு:—தொழுகையின் ஆதிதக்பீறின் அலங்கார ஸுன்னத்துகளெத்தனை ?

விடை:—தக்பீறின் அலங்கார ஸுன்னத்துகள் ஐந்துண்டு. அவை,

1-வது இமாமாயிருந்தால் தக்பீறை உரத்துச்சொல்லுதலும்,

2-வது கையை மூடாமல் கைவிரல்களினுட்புறம் கஃபாவைப் பார்க்க விரித்துக்கொண்டு இருகாதளவும் உயர்த்துதலும்,

3-வது இடது கையை நெஞ்சுக்குக் கீழ்கொப்புளுக்குமேல் வைத்து வலது கையால் இடது கைமணிக்கட்டைப்பற்றிப் பிடித்தலும்,

4-வது அல்லாஹு அக்பர் என்ற ஈற்றின் றேக்கு ஸுக்கூன் வைத்துச் சொல்லுதலும்,

5-வது ஸுஜூது செய்யும் தானத்தைப் பார்த்தலுமென் றறியவும்.

நிலையின் அலங்கார ஸுன்னத்துகள் கூறல்.

வினு:—தொழுகையின் நிலையின் அலங்கார ஸுன்னத்துகளெத்தனை ?

விடை:—நிலையின் ஸுன்னத்துகள் நான்குண்டு. அவை,

1-வது இரண்டுகால்களுக்குமிடையில் ஒரு சாணளவு இடமிருக்கும்படி யகற்றி ஒழுங்காகவும் நேராகவும் இரண்டு காலும் சரியாக வைப்பதும்,

2-வது ஒருகாற் பொறுப்பில் நில்லாமையும்,

3-வது ஒரு வஸ்துவின்மேல் சாயாமையும்,

4-வது தலையைக்கொஞ்சம் தாழ்த்தி நிற்பதுமாமென்றறியவும்.

பாத்திஹாவின் அலங்கார ஸுன்னத்துகள் கூறல்.

விஞ:—தொழுகையின் பாத்திஹாவின் அலங்கார ஸுன்னத்துகளெத்தனை ?

விடை:—பாத்திஹாவின் ஸுன்னத்துகள் ஆறுகும் அவை,

1-வது முதலாம் றக்அத்தில் தக்பீறு கட்டினபின் ஒஜ்ஜஹ்து ஓதுதலும்,

2-வது எல்லா றக்அத்துகளிலும் பாத்திஹாவுக்கு முன் அஊது ஓதுதலும்,

3-வது முந்தின இரண்டு றக்அத்திலும் பாத்திஹாவுக்குப் பின் சூறத்து ஓதுதலும் அல்லது சூறத்தில் ஓர் ஆயத்தாவது ஓதலும்,

4-வது மெல்ல ஓதவேண்டிய இடத்தில் மெல்லவும்,

5-வது குரல்விட்டோதுமிடத்தில் குரல் விட்டு ஓதுதலும்,

6-வது ஆமீனைப் பாத்திஹாவைப்போற் சொல்லு தலுமென் றறியவும். இன்னும் இதிலறிய வேண்டிய,

ஆமாகிய கருமங்களாவன அவை.

சுபுகிலும், மகுரிபிலும், இஷா இவைகளில் முந்தின இரண்டு றக்குஅத்துகளிலும், ஜும்ஆவி லும், பெருநாட் தொழுகையிலும், றமலானுடைய வித்திரிலும், சந்திர கிரகணத்தொழுகையிலும், சூரி யாஸ்தத்திற்குப்பின்னும், தொழும்தொழுகையில் முந்தின இரண்டு றக்அத்திலும், இமாமாவது தனி யே தொழுபவனுவது பாத்திஹா, சூறத்து, ஆமீன் இவைகளைக் குரல்விட்டு ஓதலும், இவையல்லாத மற் றும் தொழுகைகளில் எல்லாரும் மெல்ல ஓதலுமே. இன்னும் பெண்பிள்ளை குரல்விட்டு ஓதுகிறதானுல் அஜ்னபியான ஆண்பிள்ளை அவ்விடத்தில்லாதி ருக்கவேண்டியது என்றறியவும்.

றுக்கூஇன் அலங்கார ஸுன்னத்து கள் கூறல்.

வினு:—தொழுகையில் றுக்கூஇன் அலங்கார ஸுன் னத்துகள் எத்தனை ?

விடை:—றுக்கூஇன் அலங்கார ஸுன்னத்துகள் ஆறுண்டு. அவை,

1-வது முதுகும் தலையும் சமமாக நிற்பதும்,

2-வது உள்ளங்கை விரல்களைச் சரிபடவிரித்து இரண்டு முழந்தாட்களையும் பிரித்தும்,

3-வது கணைக்கால்களை யூன்றுவதும்,

4-வது தஸ்பீஹென்னும் ஸுபுஹான றப்பியல், அலீம், வபிஹம், திஷி என்று மூன்று தாம் சொல்லுதலும்,

5-வ்து கைகளை யுயர்த்தி றுக்கூவுவரையும் தக்பீறை நீட்டுவதும்,

6-வது கொடுங்கைகளை விட்டு இரண்டு விலாவையும் துடைகளை விட்டு வயிற்றையு முயர்த்திக் கொள்வதுமாம். இவ்வாறு ஸுன்னத்துகளும் ஆண்பிள்ளைக்கே தனதாகும். பெண்பிள்ளைகளுக்குப் பிந்திச் சொன்ன விலாவையும், வயிற்றையு முயர்த்தவேண்டியதில்லை யென்று அறியவும்.

இகுத்தித்தாலின் அலங்கார ஸுன்னத்துகள் கூறல்.

வினு:—தொழுகையின் இகுத்தித்தாலின் அலங்கார ஸுன்னத்துகளெத்தனை?

விடை:—இகுத்தித்தாலின் ஸுன்னத்துகள் நான்காம். அவை,

1-வது கைகளை உயர்த்துதலும்,

2-வது ஸமிஅல்லாஹுலிமன்ஹமிதா என்று நிமிரும்போது சொல்லி றப்பனா லகல்ஹம்து என்று நிலையிற் சொல்லுதலும்,

3-வது இமாம் உரத்துச் சொல்லுதலும்,

4-வது மௌமூம்கள் மெதுவாய்ச் சொல்லுதலாமென்றறியவும்.

ஸுஜூதின் அலங்கார ஸுன்னத்துகள் கூறல்.

வினா:—தொழுகையின் ஸுஜூதின் அலங்கார ஸுன்னத்துகளெத்தனை?

விடை:—ஸுஜூதின் அலங்கார ஸுன்னத்துகள் பத்துண்டும். அவை,

1-வது இகுத்தித்தாலில் நின்றும் ஸுஜூதை எத்துமளவும் தக்பீறு சொல்லுவதும்,

2-வது முதல் முழந்தாள்களையும் பின்பு நெற்றியையும் மூக்கையும் வைத்தலும்,

3-வது முன்கைகளையும் மூக்கையும் மறைக்கப்படாதவையாயிருத்தலும்,

4-வது கொடுங்கையைப் பூமியைவிட்டுயர்த்திக்கொள்ளுதலும்,

5-வது முழந்தாள்களையும் பாதங்களையும் ஒரு சாணளவு காணும்படி யகற்றி வைத்தலும்,

6-வது கைவிரல்கள் விரியாமற் பரப்பி புயத்திற்கு நேரும் கிபுலாவுக்கு எதிருமாக வைத்தலும்,

7-வது கால்விரல்களை ஆடவர்கள் மூடாமல் நிறுத்தி வைத்தலும்,

8-வது விலாவை விட்டுக் கைகளையும் துடைகளை விட்டு வயிற்றையு முயர்த்திவைத்தலும்,

9-வது பெண்பிள்ளை இவைகளை யுயர்த்தாமையும்,

10-வது ஸுப்புஹான றப்பியல் அஃலாவபிஹம்திஹி யென்று மூன்றுதரம் சொல்லுதலென்றறியவும்.

இடையிருப்பின் அலங்கார ஸுன்னத்துகள் கூறல்.

வினா:—தொழுகையின் இடையிருப்பின் அலங்கார ஸுன்னத்து களெத்தனை ?

விடை:—இடையிருப்பின் அலங்கார ஸுன்னத்துகள் நான்குண்டு. அவை,

1-வது இதற்காக ஸுஜூதா லெழும்பும்போது தக்பீறு சொல்வதும்,

2-வது வலது கால் படத்தை யூன்றி இடதுகால் பரண்டைமே லிருத்தலும்,

3-வது முழந்தாளுக்கடுக்க இருகைகளை விரல்கள் சற்றே விரிக்கப்பட்டனவாய் கிபுலாவுக்கு நேரிட வைத்தலும்,

4-வது றப்பிஃபிற்லீ, வறுஹப்நி, வஜுபுறுநி, வறுபஃநி, வற்சுக்குநி, வஹ்திநி, வஆபிநி, வஃபுஅன்நி என்று ஓதுவதென் றறியவும்.

சுன்னத்தான இஸ்திருஹத்திருப் பின் வகை.

இன்னும் இஸ்திருஹத்திருப்பென்று மூந்தின றக்குஅத்தின் இரண்டு ஸுஜூதுக்குப் பின்னல் இரண்டாம் றக்குஅத்துக்கு எழும்ப முன்னும் சற்றே யிருப்பதாம். மூன்ரும் றக்குஅத்தின் இரண்டுஸுஜூதுக்குப்பின் இருப்பதுமாமென் றறியவும்.

நடுவத்தஹிய்யாத் திருப்பின் ஸுன்னத்துகள் கூறல்.

வினு:—தொழுகையின் நடுவத்தஹிய்யாத்திருப்பின் அலங்கார ஸுன்னத்துகளெத்தனை?

விடை:—நடுவத்தஹிய்யாத்திருப்பின் ஸுன்னத்துகள் ஏழாம். அவை,

1-வது இவைகளுக்காகச் ஸுஜூதால் எழும்பும் போது தக்பீறு சொல்வதும்,

2-வது நடுவத்தஷிய்யாத்துக்கும் ஸஜ்தாஸஃவு செய்யவேண்டிய கடைசி அத்தஷிய்யாத்துக்கும் வலதுகால் படத்தை யூன்றி இடது காலேக் கீழே படியவைத்து இடது சகனத்தைத் தரையிற் பொறுக்கவைத்து இருப்பதும்,

3-வது இவ்விருப்புகளில் முழந்தாளுக் கடுத்த துடைமேல் இருகைகளேயும் வைத்தலும்,

4-வது இடது கைவிரல்களேச் சற்றேபரப்பி கிபுலாவுக்கு நேரிட வைத்தலும்,

5-வது வலது கலிமாவிரலேக் கொஞ்சம் சரியச் சோருதலாய் நீட்டிப் பெருவிரலே யதனருகில் வைத்து மற்ற விரல்களே மடக்கிக்கொள்வதும்,

6-வது இல்லல்லா வென்று சொல்லும்போது அந்தக் கலிமாவிரலே விரைவாயுயர்த்திக் கொள்வதும்,

7-வது அது துவக்கம் இருப்பு முடியுமளவும் பார்வையை அவ்விரலின் பேரிலாக்கிக்கொள்வதுமாமென் றறியவும்.

கடைசி அத்தஹிய்யாத்தின் ஸுன்னத்துகள் கூறல்.

வினு:—தொழுகையின் கடைசி அத்தஷிய்யாத்தின் அலங்கார ஸுன்னத்துக ளெத்தனே?

விடை:—அத்தஷிய்யாத்தின் ஸுன்னத்துகள் நான்காம். அவை,

1-வது அதன் பறுலான ஓதலாகிய அத்தஷிய்யாத்துலில்லாஹி ஸலாமுன் அலைக்க, அய்யுஹன்னபிய்யு, வறஹ்மத்துல்லாஹி, வபறக்காத்துஹு, ஸலாமுன் அலைனு வஅலாஹி பாத்தில்லாஹிஸ்ஸாலிஹீன், அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹு, வஅஷ்ஹது அன்னமுகம்மதற் றசூலில்லாஹி என்பதில்,

2-வது அத்தஷிய்யத்தென்ற சொல்லுக்குப் பின்னுல் அல்முபாறக்காத்துஸ்ஸலவாதுத் தைய்பாத்து என்பவைகளைச் சேர்ப்பதும்,

3-வது ஸலாமுன் என்ற இரண்டு சொற்களின் துவக்கத்தில் அலிபு, லாமைச் சேர்ப்பதும்,

4-வது வஅன்ன முஹம்மதன் என்றதிலுள்ள வாவுக்குப் பின்னுல் (அஷ்ஹது) என்ற சொல்லைச் சேர்ப்பதாமென் றறியவும்.

ஸலவாத்தோதலின் அலங்கார ஸுன்னத்துகள் கூறல்.

வினு:—தொழுகையின் ஸலவாத்தோதலின் அலங்கார ஸுன்னத்துகளெத்தனை?

விடை:—ஸலவாத் தோதலின் ஸுன்னத்துகள் மூன்று. அவை,

1-வது அர்த்தபேதக மாகாமலும் தற்தீபாக வோதுதலும்,

2 வது குரலெழுப்பாமல் மெல்லவோதுதலும்,

3-வது கமாஸல்லேத்தவென்னும் வாக்கியத்தொடர்
பை முழுதும் ஒதவும். தொடர்வாயோதும்
வகை,

அல்லாஹு-ம்மஸல்லி அலா ஸை
யிதிஞ முஹம்மதின் வஅலா ஆலி.
ஸையிதிஞ முஹம்மதின் கமாஸல்லேத்
த. ஆலா இபுருஹீம வஅலா ஆலி
இப்ருஹீம வபாரிக் அலா ஸையிதிஞ
முஹம்மதின் வஅலா ஆலிஸையிதிஞ
முஹம்மதின் கமாபாறக்த அலா
இபுருஹீம வஅலா ஆலி இபுருஹீம
இன்னக ஹமீதுன் மஜீது. என்று இத்
துடராக ஒதலுமாம்.

பறுலானமுன் ஸலாமினதும், ஸு-ன்
னத்தான இரண்டாம் ஸலாமினதும்,
அலங்கார ஸு-ன்னத்துகள் கூறல்.

வினு:—தொழுகையின் பறுலான முன்ஸலாமின்
ஸு-ன்னத்தும் பின் ஸலாமின் அலங்கார
ஸு-ன்னத்துகளும் எத்தனே?

விடை:—இரண்டு ஸலாமின் ஸு-ன்னத்துகள் எட்
டாகும். அவை,

1-வது நீட்டாமல் சொல்லுதலும்,

2-வது வறஹ்மதுல்லாஹி என்று சொல்லுதலும்,

3-வது இரண்டாம் ஸலாம் சொல்லுதலும்,

4-வது ஸலாம் சொல்ல ஆரம்பிக்கும்போது கிபுலாவை முகங்கொண்டு முன்நோக்கிக்கொள்ளுதலும்,

5-வது முதலாம் ஸலாத்துக்கு வலதுபுறமும் இரண்டாம் ஸலாத்துக்கு இடது புறமும் முகந்திருப்புதலும்,

6-வது இரண்டாம்ஸலாம் சொல்லும்போது கொஞ்சம் நிறுத்திச்சொல்லுதலும்,

7-வது இருபுறமும் ஸலாம் சொல்லும்போது இமாம் மௌமூம்களை நினைத்தும் மௌமூம்கள் இமாமை நினைத்தும் இருபுறமிருக்கும் மலக்குகளுக்கும் முஸ்லிமான மனிதர் ஜின்களுக்குமென்று நினைத்துச் சொல்லுதலும்,

8-வது இமாம் இரண்டாம் ஸலாம் சொல்லுமட்டும் மௌமூம்கள் கொஞ்சஞ் சுணங்கிச் சொல்லுதலுமாமென் றறியவும்.

தொழுகையின் அலங்கார ஸுன்னத்துகள் முற்றிற்று.

இன்னும் தொழுகையில் ஆமான கருமங்களைக் கூறல்.

வினு:—தொழுகையில் அறியவேண்டிய ஆமான கருமங்களுண்டோ?

விடை:—தொழுகையில் அறியவேண்டிய ஆமான கருமங்களனேக முண்டு. அவைகளிலொரு ஆமான கருமம். அதாவது ஒரு நாளைக்கு ஐந் தொகுத்துத்தொழ விதித்த பறுலாயிற்று. இத ற்கு பத்தொன்பது றுக்குனுண்டும். அந்தப் பத்தொன்பது றுக்குனும் மூன்று றுக்குனில் பொதிந்திருக்கும். அவைகளில் 1-வது கல்பிய் யத்து, அது கல்பில் நிறைவேறுகிறது. அதில் ஒரு றுக்குன் அகப்படும். அதாவது, நிய்யத்து. அந்த நிய்யத்துக்கு மூன்று பறுலுண்டும். அவைகளில்,

1-வது கஸ்லுன். தொழுகிறேனென்று கருதுகிறது.

2-வது தஅற்றுலு. பறுலைப் பறுலென்றும், அதா வை அதாவென்றும், கலாவைக் கலாவென் றும், மௌமூமானல் மௌமூமென்றும், இமா மானல் இமாமென்றும் கருதுகிறது,

3-வது தஅய்யுனு. லுஹறென்றும், அஸறென்றும், அந்தந்த ஒக்தைக் கருதுகிறது. இந்த மூன்று பறுலும் கூடினது நிய்யத்து. இந்த நிய்யத்து க்கு தலம் கல்பு அதுக்கு ஒக்து தக்பீறு என்

கிற அலிபு, அந்த அலிபுக்குப் பிந்தினுல் நிய்யத்து துரிஸ்தல்லவென் றறியவும், இன்னும் கௌலிய்யத்து, சொற்கொண்டு, நிறைவேறுகிறது. அதில் ஐந்து றுக்குனுண்டும். அவைகளாவன. 1-வது தக்பீறும், 2-வது பாத்திஹாவும், 3-வது பிந்தின அத்தஷிய்யாத்தும் 4-வதுஸலவாத்தும் 5-வது ஸலாமுமாம்,

இன்னும் பிஃலிய்யத்து, சியல்கொண்டு நிறைவேறுகிறது. அதில்பதிமூன் றுறுக்குனுண்டும், அவைகளாவன, 1-வது கியாமும், 2-வது றுக்கூவும், 3-வது அதிற்தரிப்பும், 4-வது இகுத்தித்தாலும், 5-வது அதிற்தரிப்பும், 6-வது முந்தின ஸுஜூதும், 7-வது அதிற்தரிப்பும் 8-வது இடையிருப்பும், 9-வது அதிற் தரிப்பும், 10-வது பிந்தின ஸுஜூதும், 11-வது அதிற் தரிப்பும், 12-வது பிந்தின அத்தஷிய்யாத்தும், 13-வது அதிற் தரிப்பும் இந்தப்பதிமூன்றும் கூடி தொழுகை நிறைவேற ஆமாகிய கருமங்களாம்.

வினு:—விதித்த பறுலான தொழுகையைத் தொழும் போது ஆமாகிய கருமங்களுண்டோ?

விடை:—தொழுகையைத் தொழும்போது நாலு ஆமாகிய கருமங்கள் வேண்டு மென்றறைந்தனர். அவை,

1-வது கடமையான தொழுகையைத் தொழாவிட்டால் கியாமநாளில் கேள்விக்கு என்ன மறு

மொழி பகர்வோமென்ற பயங்கர முள்ளத்தில் நீங்காமலிருப்பதும்,

2-வது தொழுகையை அல்லாஹுத் தஆலா பறு லாக்கினுன் இறுக்கவேணுமென்ற கடமையான கவலை நீங்காதிருப்பதும்,

3-வது தொழுகை யென்னும் கடமையான பிறலை இறுக்காவிட்டால் அதாபு செய்வானென்ற நீங் காத அச்சமாயிருப்பதும்,

4-வது தொழுகை யென்னும் கடமையை யிறுத்து விட்டால் தவாபு கொடுப்பானென்ற நீங்காத சந்தோஷமாம். இந்த நாலும் பொதுவாக வேண்டியதாயிருக்குமென் றறியவும்,

வினா:—தொழுகையின் நிலையிலாமான கருமங்களைத் தனை ?

விடை:—தொழுகையின் நிலையிலாமான கருமங்கள் நாலுண்டும். அவை,

1-வது தொழுகிறவன் அல்லாஹுத் தஆலாவைக் காண ஆசை வைத்தவனுகவும்,

2-வது தொழுகிறவனை அல்லாஹுத் தஆலா கண் டிருக்கிரு னென்பதாகவும்,

3-வது தொழுகிறவன் அல்லாஹுத் தஆலா முன் பாக நிற்கிறவனுகவும்,

4-வது தொழுகிறவன் இப்படியே ஒரே எண்ணமாய் கல்பில் உள்ளச்சங்கொண்டு வணங்குவதே நிலையிலாமான கருமங்களென் றறியவும்.

வினா:—பாத்திஹாவில் சில விசேஷ கருமங்களுண்டோ?

விடை:—பாத்திஹா வோதலில் விசேஷ கருமங்களுண்டும். அல்ஹம்து துவக்கம் எவ்மித்தீனென்றவரையிலோதி நிறுத்துவதும், அதின் மஅனவைக் கருதுவதும், நஸ்தஈனென்ற வரையிலோதி நிறுத்துவதும் அதின் மஅனவைக் கருதுவதும் வொலல்லாலீன் என்ற வரையிலோதி நிறுத்துவதும் அதின் மஅனவைக் கருதுவதும், ஆமீன் கூறுவதும், அதின் ம்அனவைக் கருதுவதும், விசேஷ கருமங்களாம்.

வினா:—ஸுஜூதில் பிரதானமாகிய விசேஷ கருமங்களுண்டோ?

விடை:—ஸுஜூதில் பிரதானமாகிய கருமமுண்டும் அவை தன் நபுசின் ஊசாட்டத்தை மறந்து ஹக்கன்றி வேறொன்றை நாடாமல் ஸுஜூது செய்வதாம்.

வினா:—அத்தஹிய்யாத்தில் விசேஷ நாட்டமுண்டோ?

விடை:—அத்தஹிய்யாத்தில் அப்படி நாட்ட முண்டும் அது அல்லாஹுத் தஆலாவுடைய சமு

கத்திலிருப்பதாய் ஹக்குடைய குணங்கொண்டு ஒரே நாட்ட மாயிருப்பதாகும்.

தொழுகையிலாகுமாகிய ஆமான கருமங்கள் முற்றிற்று,

—∘∘⋄∘∘—

சஜதாஸகுவு செய்யும் வகை.

வினு:—சஜதாஸகுவு செய்யுமுறையெப்படி ?

விடை:—சஜதாஸகுவு செய்யுமுறை யிப்படி, அதாவது. அபு ஆலு ஸுன்னத்தொன்றில் சிலதை விடுத்தாலும் அந்த ஸுன்னத்தி லொன்றைச் செய்தமோ இல்லையோவென்று சந்தேகித்தாலும் மனமுறண்டால் தொழுகையை முறிக்கும் படியான சியல்களை மறதியினுற் செய்தாலும் றக்கு அத்து ஸுஜூது மற்றப் பறுலுகளிற் சந்தேகித்தாலும் சஜதாஸகுவு செய்வது ஸுன்னத்து. இந்த சஜதாஸகுவு செய்யவேண்டிய முறை ஸலாம் கொடுப்பதற்குச் சற்றுமுன் இரண்டு தரம் ஸுஜூது செய்கிறதாம்.

சஜதாஸகுவு செய்யும்படியான செயல் இமாமுக்கு உண்டுபட்டு அவர் சஜதாஸகுவு செய்யும் போது மௌமூம் கூடச்செய்வது வாஜிபு.

அப்படி இமாம் சஜதாஸகுவு செய்யாமல் விட்டால் மௌமூம் செய்வது ஸுன்னத்து.

அந்த மௌமூழுக்கு சஜதாஸகுவு செய்யும் படியான செயல் நேரிட்டால் சஜதாஸகுவு செய்ய ஆகாது. அப்படிச் செய்தால் தொழுகை கூடாது.

ஸஜதாஸகுவு செய்யப்போகும்போது யாது காரணத்தாற் செய்ய நேரிட்டதோ அந்தக்காணத்தைக்குறித்து நிய்யத்து வைப்பது வாஜிபு. அப்படி நிய்யத்து வையாமற் செய்தால் தொழுகைகூடாது என்றறியவும்.

சஜதாஸகுவு செய்யும்போது ஓதவேண்டிய திக்கிறு.

ஸுபுஹான மன்லாயனுமு
வலாயெஸ்ஹு.

என்று மூன்று தரம் ஓதவும், பின்பு எழுந்திருந்துறப்பிஃபிர்லீ என்ற திக்குறு முழுதுமோதவும். பின்பு மறுஸுஜூது செய்கையிலும் முந்தின ஸுபுஹான மன்லாயனுமு என்ற திக்குறை ஓதவும்.

சஜதாஸகுவு முற்றிற்று.

ஸுன்னத்துத் தொழுகைகள்.

வினா:—பறுலான தொழுகைக்கு முன்பின் ஸுன்னத்தான தொழுகைகளுண்டோ?

விடை:—ஆம் அப்படி ஸுன்னத்தான தொளுகைகளுண்டும் அதின்வகைகள், வுஹறுடைய பறு

லுத்தொழுகைக்கு முன்னும் பின்னும், மகுரிபுடையதும் இஷாவுடையதுமான பறுலுத் தொழுகைக்குப்பின்னும், பஜிறுடைய பறுலுத் தொழுகைக்கு முன்னும், இரண்டிரண்டு றக்அத் துத்தொழும் இவைகளாகும், அன்றியும் இஷா தொழுகைக்குப் பின் விதுறுத் தொழுகையை ஒரு றக்அத்து முதல் பதினொரு றக்அத்து வரையிலும் எத்தனை றக்அத்தாவது ஒற்றைப் படத்தொழுதலும், இதனை றமலான் மாதத்தில் இமாமோடு கூடித்தொழுதலும் ஸுன்னத் தேயாம்.

இதின் நிய்யத்து.

முந்தினதுக்கு கபுலிய்யத்து என்றும்,
பிந்தினதுக்கு பஃதிய்யத்து என்றும் உள்ளத்தில் நினைப்பதுவேயாம்.

தொழுகையை பாத்திலாக்கும் கருமங்கள்.

வினு:—தொழுகை யெத்தனை கருமத்தால் பாத்திலாகும்,

விடை:—தொழுகை பதினெட்டுக் கருமத்தால் பாத்திலாகும். அவை,

1-வது பறுலான வேர்துதலுடைய தங்கடமல்லா மல் இரண்டெழுத்துகள் பிறக்கக் கணைக்காம லும்,

2-வது தும்முதல்,

3-வது சிரித்தல்,

4-வது உறுமுதல்,

5-வது சத்தமிட்டழுதல்,

6-வது இரண்டெழுத்துகளால் அல்லது அர்த்தம் விளங்குமோ ரெழுத்தால் பேசுதலும்,

7-வது பறுலை ஸுன்னத்துகளாக விடுத்தலும்,

8-வது தொழுமிடத்திலும் புடவையிலும் சரீரத் திலும் நஜீசுபடுதலும்,

9-வது பறுலை ஸுன்னத்தென்றெண்ணுதலும்,

10-வது நோன்பை முறிக்கும் செயலைச் செய்தலும்,

11-வது கிபுலாவை நெஞ்சு மாறுதலும்,

12-வது அவ்றத்தை வெளியிற் றெரியவிடுதலும்,

13-வது நீர்முதலானவைகளை மறதியால் அதிகமாக வுட்கொள்ளுதலும்,

14-வது உலுவை முறிக்கும் செயலைச் செய்தலும்,

15-வது முழுக்கு விதித்தலும்,

16-வது நிய்யத்தைச் சந்தேகித்தலும்,

17-வது மூன்று செயல்களைத் தொடர்பாகச் செய்த லும்,

18-வது தொழுகையின் செயல்களை மனமுரண்டாக முற்படுத்தலும், மறதியாலும் பறுலை அதிகப்

படுத்தலும், அதனைக் குறைத்தலும், தொழுகையை விட்டுப் பிரியத் துணிந்து இருமனப் படுதலுமாகிய இவைகளாமென் றறியவும்.

தொழுகையை முறிக்குங் கருமங்கள் முற்றிற்று.

தொழுகையின் மக்றூஹுகள்.

வினா:—தொழுகையின் மக்றூஹுகள் எத்தனை?

விடை:—தொழுகையின் மக்றூஹுகள் முப்பதுண்டு. அவை,

1-வது தொழும்போது முகத்தைத் திரும்புதலும்,

2-வது வேண்டுமான நீர் முதலிய பதார்த்தங்கள் தனக்கு முன்னுயிருக்க அவற்றைக் கார்க்க வைத்தலும்,

3-வது முடுக்கின மலசலங்களை யடக்கிக்கொண்டு தொழுதலும்,

4-வது ஸுன்னத்தான கருமங்களை விடுதலும்,

5-வது ஒற்றைக்காற் பொறுப்பில் நிற்றலும்,

6-வது வலதுபுறம் முற்புறங்களில் துப்புதலும்,

7-வது வானத்தை யண்ணாந்து பார்த்தலும்,

8-வது உடுத்தின புடவை முதலியவைகளைக் கையாலொதுக்குதலும்,

9-வது இடுப்பிற் கையைவைத்துக்கொள்ளுதலும்,

10-வது மிருகங்களைக் கட்டும் துறையிற் றொழுதலும்,

11-வது கோயிலில் தொழுதலும்,

12-வது கபுருஸ்தானிற் ஜெழுதலும்,

13-வது குப்பைகொட்டு மிடங்களிற் தொழுதலும்,

14-வது இருளில் தொழுதலும்,

15-வது றுக்கூவில் அளவிற்கதிகமாகத் தலைகுனிதலும்,

16-வது கொட்டாவி விட்டாலல்லாமல் கையால் வாயைப் பொத்துதலும்,

17-வது மிருகங்களை அறுக்குமிடத்திற்தொழுதலும்,

18-வது தொழும்போது முகத்தைத் துடைத்தலும்,

19-வது விரைவாய்த் தொழுதலும்,

20-வது மிருகங்களைப்போற் குந்தியிருத்தலும்,

21-வது இமாம் இஸ்திருஹத்தென்னும் சிற்றிருப்பிராமலெழுந்தால் மௌமூம்களிருந்தெழும்புதலும்,

22-வது அவயவங்கொண்டு சைக்கினைக் காட்டுதலும்

23-வது மேற்போர்வையின் முன்றானையைத் தொங்கவிடுதலும்,

24-வது பராக்குக்காட்டும் வர்னப்புடவைகளை யுடுத்தி வர்னப்பாயை விரித்துத் தொழுதலும்,

25-வது தலையைத்தோட்களைத்திறந்துதொழுதலும்

26-வது நஜீசருகில் நின்று தொழுதலும்,

27-வது இமாம் தனக்கு மாத்திரம் துஆக்கேட்குதலும்,

28-வது ஸுஜூது செய்யும்போது நெற்றியிலொட்டிய தூசைத் துடைத்தலும்'

29-வது பக்கங்களில் முகத்தையும் நெஞ்சையும் திருப்பாமல் கண்ணைத் திருப்பிப் பார்ப்பதும்,

30-வது தொழுகையில் ஸுன்னத் தாக்கப்பட்டவைகளில் ஒன்றை இலேசாகக் கண்டு மறந்து விடுதலுமாமென் றறியவும்.

இஸ்லாத்தின் இரண்டாம் றுக்குன் முற்றிற்று.

இஸ்லாத்தின்மூன்றும் றுக்குன்.

வினா:—இஸ்லாமி லமைந்த மூன்றுவது றுக்குனென்ன?

விடை:—அல்லாஹுத் தஆலா முஸ்லிம்கள் பேரில் குறுஆனில் விதியாக்கப்பட்ட சகாத்தாயிருக்கும். அவை,

சகாத் துக்கொடுக்கிறது வருஷத்துக் கொரு பறுலு, அதற்கு இரண்டு றுக்குனுண்டும். அவை,

1-வது நிய்யத்து.

2-வது சகாத்துக்குப் பாத்திபவாளருக்குக் கொடுப்பது. அவை,

இருபது களஞ்சிப் பொன்னிருந்தால், அரை களஞ்சிப்பொன்னும், இருநூறு திருக மிருந்தால் ஐந்து திருகமும், ஐந்து ஒட்டகமிருந்தால் ஒரு வயசுப் பருவத்தையுடைய ஒரு செம்மறி ஆடும், முப்பது மாடிருந்தால் ஒரு வயசுப் பருவத்தையுடைய

ஒரு மாடும், நாற்பது ஆடிருந்தால் ஒரு ஆடும், தானியங்களில் முந்திரிகைக்கனி ஈத்தங்கனி இவைகள் ஒவ்வொன்றிலும் ஐந்து ஐந்து கோட்டையிருந்தால் அரைக்கோட்டையும் வருஷம் நிறைந்தவுடன் எடுத்து தானியங்களைத்தவிர மற்றவைகளைப் பிக்ஷில் சொல்லப்பட்ட எட்டுக் கூட்டத்தாருக்கும் கொடுக்கவும். தானியங்களுக்கு விளைபோகத்தில் ஒருதரம் கூடிய அளவு கொடுக்கவும் சகாத்தின் விதி யிவையாயிருக்கும்.

இஸ்லாத்தின் மூன்றும் றுக்குன் முற்றிற்று.

இஸ்லாத்தின் நாலாம் றுக்குன்.

வினா:—இஸ்லாமி லமைந்த நாலாவது றுக்குனென்ன?

விடை:—இஸ்லாமில் நாலாம் றுக்குன் நோன்பு அதாவது றமலான் மாச முழுவதும் நோன்பு பிடிக்குதல். இதுவும் ஒரு வருஷத்துக்கு ஒரு பறுலுதான். அதாவது இதற்கு இரண்டு றுக்குனுண்டும்.

1-வது நிய்யத்து,

2-வது நோன்பை முறிக்கக்கூடிய கருமங்களை விலக்கிக்கொள்ளுகிறதுமாம்.

இஸ்லாத்தின் நாலாம் றுக்குன் முற்றிற்று.

இஸ்லாத்தின் ஐந்தாம் றுக்குன்.

வினு:- இஸ்லாமிலமைந்தஐந்தாவது றுக்குனென்ன?

விடை:—இஸ்லாமில் ஐந்தாம் றுக்குன் ஹஜ்ஜு. அதாவது கஃறபத்துல்லாவில் போய் ஹஜ்ஜு செய்கிறது. இது ஹயாத்தில் ஒருதரம் போய் ஹஜ்ஜு செய்யப் பறுலாயிருக்கும். எப்படிக் கொற்றவர்களுக்கானுல் பைத்துல்லாவுக்குப் போய்வரக்கூடிய மனத்தைரியமும் பணத்தாலும் சரீரபெலத்தாலும் ஏறிப்போகும் வாகனத்தாலும் நிறைந்திருக்கக் கூடியவர்களுக் கென்றறியவும்.

இஸ்லாத்தின் ஐந்தாம் றுக்குன் முற்றிற்று.

3-வது தௌஹீதுடைய பாடம்.

வினு:—தௌஹீ தென்பது என்ன?

விடை:—இலாஹுவை ஒருமைப்படுத்துவது தௌஹீதாயிருக்கும்.

வினு:—இலாஹுவென்பது என்ன?

விடை:—வணங்கப்படுவன இலாஹாயிருக்கும்.

வினு:—இலாஹு எத்தனை வகைப்படும்?

விடை:-இலாஹுல்பாத்தில் இலாஹுல் ஹக்கு இலாஹுல் முத்தலக்கு என்று மூன்று வகைப்படும்.

இதில் இலாஹூல் பாத்தில் இலாஹூல் ஹக்கு ஆகிய இரண்டையும் நபிச்செய்து இலாஹூல் முத்தாக்கு ஆகிய அல்லாவென்னும் இலாஹையே தரிபடுத்துவது தௌஹீதாயிருக்கும்.

வினு:—தௌஹீதின் விபரமென்ன?

விடை:—முஹக்கிகூன்களி லொருவர் சொல்லுகிருர்கள்.

பைத்து.

لِيَ الْمُلْكُ فِي الدَّارَيْنِ وَلَمْ أَرَ فِيهِمَا

سِوَايَ فَأَرْجُو فَضْلَهُ أَوْ فَأَخْشَاهُ

எனக்கு ராஜாங்கமிருக்கிறது இரண்டு வீட்டிலும் இது இரண்டிலும் என்னைத் தவிர நான் காணவில்லை. அதின் வரிசையை நான் ஆதரவு வைக்கிறேன். அல்லது அதைப் பயப்படுகிறேன்.

பைத்து.

وَلَا قَبْلُ مِنْ قَبْلِي فَأَلْحَقُ شَأْنَهُ

وَلَا بَعْدُ مِنْ بَعْدِي فَأَسْبِقُ مَعْنَاهُ

எனக்கு முன்னால் முன்னில்லை ஹக்குத் தஆலா அதினுடைய கருமம். எனக்குப் பின்னால் பின்னில்லை. இதின் மஅனவை விளங்கிக்கொள்.

பைத்து.

وَقَدْ حُزْتُ أَنْوَاعَ الْكَمَالِ وَإِنَّنِي

جَمَالُ جَلَالِ الْكُلِّ مَا أَنَا إِلَّا هُوْ

நான்கமாலுடைய வகைகளைப் பொதிந்து கொண்டேன். நான் எல்லா வஸ்துகளின் வலுப்ப முடைய வடிவாயிருக்கும். நான் அவனேயொழியக் காணமாட்டேன் என்று சொன்னார்கள். இவர்களைப் போல் கல்குகளின் வழிவகையறிந்து, ஹக்கை ஒருமைப்படுத்துவதே தௌஹீது.

இன்னும் கௌதுனு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறுல் ஜெய்லானீ றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள்.

اَللّٰهُ الْمَوْجُوْدُ بِالْوُجُوْدِ

இதன் மஅனவாகிறது உள்ளது கொண்டுள்ளது முனவ்வஹாகிய (புஹ்று தாத்து) இதற்கு ஐந்து சிபத்து உண்டும்.

1-வது கிதம்,
2-வது பகா,
3-வது முகாலபத்துவில்ஹவாதிதி,
4-வது கியாமுஹு பிநப்சிஹி,
5-வது வஃதாநிய்யா,

இந்த ஐந்து ஸிபாத்தும் அல்லாவுக்குள்ள ஸிபாத்தாக விருக்கும். வேறேயொரு வஸ்துவுக்கு

மில்லை. இந்த சிபத்துள்ளது அல்லா உடைய தாத்துல் முதுலக்கு ஆகிய தாத்து, லாத்து, ஜன் என்றும், புஹூது என்றும் சொல்லப்படும்.

இன்னும் வுஜூதொஷிய காமிலாகிய நிரப்பமாகிய தாத்துக்கே யல்லாது வேறே யொன்றுக்குமில்லை. இன்னும்,

இந்த ஐந்து சிபத்தையும் குன்ஹூதாத்தோடே சேர்க்கப்படும். இதற்குக் காமிலாவென்றும், மகாம் ஜம்ஹூத்து என்றும் சொல்லப்படும்.

இன்னும் மேற்சொல்லப்பட்ட சிபத்திலும், ஹக்கின் வுஜூதிலும் இருந்து ஒன்று இரண்டாய் ஆறு சிபத்து உண்டுபட்ட வகையாவன

வுஜூதிலிருந்து மௌஜூதும்,
கிதமிலிருந்து கதீமும்,
பகாவிலிருந்து பாகியும்,
முகாலபத்துலில் ஹவாதிதில்ருந்து லாஷிறும்,
கியாமுஹூ பிநபுசிஷிலிருந்து பாதினும்,
வஹ்ததாநிய்யத்திலிருந்துவாஷிதும் புறப்பட்டன.

இன்னும் மேலெழுதிய முநவ்ஸஹாகிய குன்ஹூ ஏழு பரிசுகொண்டு பிரிந்திருக்கிறது அதில்,

1-வது ஹயாத்து,
2-வது இல்மு,
3-வது இருதத்து,
4-வது குத்றத்து,

5-வது ஸம்உ,
6-வது பஸறு,
7-வது கலாம்,

இந்த ஏழும் ஷிபுஹாᵘதாத்தென்று சொல்லப்படும்.

இதற்கு மகாம்பாஹாᵘத்து என்றும், வஹ்தத்து என்றும், ஹகீகத்து முஹம்மதிய்யா வென்றும் சொல்லப்படும்.

இன்னும் அதேதுபோலானுல்,
அநஅஹாᵘமதுன் பிலாமீமின்,
அநஅறப பிலாஐனின்,

என்று நபி முஹம்மதுன் ஸல்லல்லாஹாᵘ அலைஹி வஸல்லம் திருவுளமானுர்கள் என்று சொல்லப்பட்ட ஏழு சிபத்திலிருந்து ஏழு அஸ்மா புறப்பட்டது. அதாவது,

1-வது பஸற் என்கிற ஸிபத்திலிருந்து பஸீறுன் என்கிற அஸ்மாவும்,

2-வது இருதத்து என்கிற ஸிபத்திலிருந்து முரீதுன் என்கிற அஸ்மாவும்,

3-வது குத்றத்து என்கிற ஸிபத்திலிருந்து காதிறு என்கிற அஸ்மாவும்,

4-வது ஸம்உ என்கிற ஸிபத்திலிருந்து ஸமீஉன் என்கிற அஸ்மாவும்,

5-வது இல்மு என்கிற ஸிபத்திலிருந்து ஆலிமுன் என்கிற அஸ்மாவும்,

6-வது கலாம் என்கிற ஸிபத்திலிருந்து முதகல்லி முன் என்கிற அஸ்மாவும்,

7-வது ஹயாத்து என்கிற ஸிபத்திலிருந்து ஹய்யுன் என்கிற அஸ்மாவும் புறப்பட்டது.

இன்னும் இந்த ஏழையும் நூறு முஹம்மதென்றும், அல்லாவுக்குள்ள அஸ்மாவென்றும், அம்மாகிய பறுஸ்கு என்றும், அதம்மாகிய மலுஹறு என்றும், திபுலுல் மஆனி என்றும், றூஹாூதாத்து என்றும், கமலக்கண்ணடி என்றும், ஷம்ஸூதாத்து என்றும், அன்பியா வென்றும், ஒளலியா வென்றும், குதுபு என்றும், கௌது என்றும், சையிதுஎன்றும், மௌலானு வென்றும், முறப்பியாகிய செய்கு வென்றும், சரிநெறியாகிய உலமாவென்றும், ஆகிறுவாகிய உலமாவென்றும் சொல்லப்படும்.

இன்னும் முரீது வென்றும், ஆலீமென்றும், ஸமீஃஎன்றும், பஸீறுவென்றும், முதகல்லிமென்றும், கதீறு வென்றும், ஹய்யுன் என்றும் சொன்ன இவைகள் இன்சானுக்குள்ள சிற்று. இந்த ஏழைக் கொண்டும் ஏழு ஆகாயமும், ஏழு பூமியும், ஏழு கடலும், ஏழு நரகமும், ஏழு சுவர்க்கமும், ஏழு மலக்கும், ஏழு ஜின்னும், ஏழு சய்யாறத்தாகிய நட்சத்திரங்களும், அந்த ஏழிலுட்பட்ட கல்குகள் அடங்கலையும், இந்த நூறு முஹம்மதால் பதினெண்ணுயிரம் ஆலம்களையும், அல்லாஹூத் தஆலா படைத்தான். இந்த நூறு முஹம்மதால் அல்லாவுக்கு அபுஆலென்றும், இது அல்லாவுக்குள்ள ஸூஊனென்றும் சொல்லப்படும்.

வினு:—கல்பைக்கொண்டும், நாவைக் கொண்டும், சரீரத்தைக்கொண்டும் அல்லாஹுத் தஆலாவை தௌஹீதென்னும் ஒருமைப்படுத்துவதெப்படி?

விடை:—ஆரிபீன்கள் சொல்லுகிருர்கள் அவர்கள் சொல்லைக் கொண்டே ஒருமைப்படுத்துவோம். அவை,

பைத்து.

மிற்ஆது வஜ்ஹித்தீ தஹ்ரவாஹு கல்புகக்குன், லினஹ்ரிஹி நாலிறதுன் துப்ஸிறு முஹையாஹு,

நீ ஆசை கொண்டிருக்கிருயே அந்த ஒருவனுடைய முகம் பார்க்கும்கண்ணுடியாகிறது உன் கல்பு தானுக விருக்கும். அந்தக் கல்புக்கு நேரே பார்க்கிறவனுக விருந்துகொள். அந்தக் கண்ணுடி நீஆசை கொண்டவனுடைய முகத்தைக்காண்பித்துத் தரும் என்றபடி பார்க்கும்போது பார்க்கிறதும், பார்க்கப்பட்டதும் ஒன்ருய் அதில் நின்றும் அறிவு பிறந்து அறியும். இப்படி யொன்றை யொன்று திரும்பிக் கூர்க்கப் பார்க்கப் பார்க்கிறதும், பார்க்கப்பட்டதும் ஒன்ருகி அதில் நின்றும் அறியுமறிவு ஒன்று பிறந்து அறியும். இப்படி விசைக்குவிசை அறிகிற அறிவுமெலிந்து வரும். இப்படி மிஃருஜாக ஏறி

யேறிக்கடைசியில் அறிகிற அறிவு அறிந்தோமென்கிற விபரம் தோற்றாமல் மெலிந்திருக்கும்.

அதை இல்மூல் முதுலக்கென்று சொல்லப்படும். இந்த இல்மூல் முதுலக்குதானுகும். உஜூதுல் முதுலக்கு வெளியாகும் மலுஹறுமாய் முஹம்மதிய்யாவென்கிற அறிவும்அருளுமாயிருக்கும். இது கொண்டும் அல்லாஹுத் தஆலாவை தௌஹீதுவென்னும் ஒருமைப்படுத்தும் வகையைக் காண்பீர்கள்.

வினா:—நாம் தௌஹீதின் புறத்தால் என்ன வகையாயிருந்தோம்?

விடை:—நாம் தௌஹீதின்படிக்கு மேலான ஹூறபென்கிற கலிமாவாகத் திடனுக ஆயிருந்தோம்.

கீளான அஷியான் தாபிதாவில் தரித்து வாஷிது என்கிற மலுஹறு ஆதமிய்யாகியும், றூஹுல் குதுசு என்கிற றூஹு முஹம்மதிய்யாவாகிய அக்லில் அவ்வலென்கிற லஹறாபுல் வஹீ யென்கிற வேதாந்தமேகத்திலும் அஸ்மா இலாஹி யென்கிற இருபத்தேழு அஸ்மாவாகிய மறுபூபிலும், ஆலம், அறுவாஹு, ஆலம்மிதால், ஆலம், அஜ்சாம், ஆலம் இன்சான், சத்துருன் என்கிறவரிகளி லிறங்கினேமென்று முஹ்யித்தீநிபுனு அறபி றலியல்லாஹு அன்ஹு அருளியிருக்கிருர்கள். இது கொண்டும் நாம் என்ன வகையாயிருந்தோம். எங்கேயிருந்தோமென்றுணர்ந்து அல்லாஹுத் தஆலாவைத் தௌஹீது வென்னு மொருமைப்படுத்துவீர்களாக,

வினு:—தௌஹீதின்படி ஈமான், இஸ்லாம், தொழுகை இவைகளின் விபரமென்ன ?

விடை:—தௌஹீதின்படி ஈமானின் விபரமாவது

அல்ஈமானு இபாறதுன் அன்விஜ்தானில்ஹக்கி வதஸ்தீகுன் பில்கல்பி வஇக்ருறுன் பில்லிஸான்.

ஹக்கென்கிற பார்வையாகி கல்பு நிட்ஷயப் படுத்துகிறதும், நாவில் அதைச் சொல்லுகிறதும் இதுவாகும் ஈமானுக இருக்கும், இந்தப்படிக்குக் கலிமா லாஇலாக இல்லல்லாவுக்கு மஅனுவாகிறது

லாவுஜூத இல்லா வுஜூதல் ஹக்கு.

மெய்யான வுஜூதில்லை ஹக்குத் தஆலாவின் வுஜூதே ஒழியப்பார்கிறவனும் பார்க்கப்பட்டவனும் அவனே ஒழிய வேறில்லை.

இநி முஹம்மதுற் றசூலுல்லாவுக்கு மஅனுவாகிறது.

அறுசல நபுஸஹூ றசூலன் மின்னபுஸிஹி இலாநபுஸிஹி

அல்லாஹுத் தஆலா தன்னுடைய நபுஸை (அதாவது றூஹை) தன்னில் நின்றும் தன் நபுஸளவில் (அதாவது றூஹூ அளவில்) முஹம்மது என்

னும் திருநாமங்கொண்டு (தூதாக) யாத்திரையாக்கினன் என்றறியவும்.

வினா:-தௌஹீதின்படி இஸ்லாமின் விபரமென்ன?

விடை:-தௌஹீதின்படி இஸ்லாமின் விபரமாவது:

இன்கியா துன்னபுலி

பி அஹ்காமிற்றப்பி

அல்லாஹுத்தஆலாவின் றகுமான் என்ற இஸ்மில் நின்றும் உண்டான பல அஸ்மாக்களின் துறைகளாகத்தான் வெளியானதால் தன்னைத்தானே தான் றப்பென்கிற ஹுக்கும்களைக்கொண்டு வெளிப்பட்டுக்கொண்டதை இஸ்லாமென்று சொல்லப்படும்.

வினா:—தௌஹீதின்படி தொழுகையின் விபரமென்ன?

விடை:—தௌஹீதின்படி தொழுகையின் விபரமாவது:

நிஸ்யானு மாஸிவா அல்லா

அதாவது அல்லா அல்லாத்தது உண்டென்பதை மறந்து விடுகிறது அவனே ஒழிய வேறில்லை என்று ஒருமைப்படுத்தியந்த யொருமையில் நிலை நிற்பதாம்.

இந்த ஒருமை என்னும் தௌஹீதின்படி தொழுகைக்கு ஒலுச்செய்யும் வகையாவன

ஒலுச்செய்யும்போது வாஷிது என்கிற இஸ்முடைய குணங் கொள்வதற்காக நானென்னும் பெரும் துடக்கும் வேறென்னும் சிறு துடக்கும் நீக்கி ஒலுஉடைய பறுலே யிருக்கிறேனென்று நிய்யத்து வைத்து ஒலுச்செய்யவும்.

தொழுகையின் நிய்யத்து.

தாத்து மலுஹறுகிய கஃபாவுக்கு நேரே நின்று முஹம்மதிய்யா வாஷிது வென்கிற இஸ்முடைய தஜெல்லியைக்காணுகிறதற்காக மிஃருஜாகிய தொழுகையைத் தொழுகிறேனென்று நிய்யத்து வைத்து,

பறுலே, அதாவை, கலாவை, ஒக்தைக் குறித்து உள்ளத்தில் நினைத்து தக்பீறு கட்டவும். இப்படித் தக்பீறு கட்டித்தொழுது கடைசி அத்தஹிய்யாத்தில் அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹு என்கிறபோது உள்ளமையான உஜூது ஆருமில்லே அல்லா ஒழிய என்று கல்பில் நினைத்து வஅஷ்ஹது அன்ன முஹம்மதற் றசூலுல்லாஹி என்று சொல்லுகிறபோது உன்னே மறந்தவனுய் வஹதா நிய்யத்து யென்ற கடலில் அமிர்தம் உண்டவனுய் நிரப்பமான தரிபாடாக நின்று சாட்சி சொல்வாய் அப்போது தௌஹீதின்படி தொழுதவனுக இந்நிலையில் நின்று ஒருமை தௌஹீதுடையவநாகுவாய் என்றறியவும்.

தௌஹீதின் பாடம் முற்றிற்று.

4-வது மஃரிபா உடைய பாடம்.

வினா:—தீனுடைய பறுலு நாலாவது மஃரிபாவென்பது என்ன ?

விடை:—மஃரிபா வென்பது நாயனை யறியுதல் அதாவது.

مَنْ عَرَفَ نَفْسَهُ فَقَدْ عَرَفَ رَبَّهُ

தன்னையறிந்தவன் தன் நாயனை அறிவான் என்பதும், இன்னும் தன்னை யறிந்தவன் தன் நாயனைக் காண்பான் என்பதும் சரிவாக்காகும்.

இன்னும் தன்னையறியும் விபரமாவது அலி றலியல்லாஹுஅன்ஹு திருவுளமானார்கள். அல்லாஹுத் தஆலா கல்குகளைப் படைக்க நாடும்போதில் அவனின் மலக்கூத்தின் தனிமையிலும் அவனின் ஜபறூத்தெனு மொருமையிலு மிருக்கத் தான் படைக்கும் சூறத்துகளை நாடினான். அவனின் வெளிச் சத்தில் ஓர் வெளிச்சம் ஏறிட்டு வெளியாகிப் படைக்க நாடிய சூறத்தின் நடுவில் சேகரமானது. அந்தச்சூறத்து முஹம்மதுன் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமின் சூறத்தானது. அதைக்கண்டு நீர் தெளித்து வடித்துத் திருமணியாக்கப்பட்டவரென்றும் அவர்களைப் புகழ்ந்து பின் அவன் படைக்க நாடிய வஸ்துகளைத் தான் மறைவான இல்மில்

மறைவாய் வைத்திருந்ததடங்கலையும் உலகமனைத்தையும், காற்றையும், தண்ணீரையும், நுரையையும், மலக்குகளையும், மற்றவஸ்துகளனைத்தையும் அவர்களின் நூறு முஹம்மதென்று சொல்லப்பட்ட தன்னெளிவில் படைத்தான். இதையறிந்து வந்த வழியை ஆலோசித்து அமல் செய்து கண்டுன்னை நீ யறிவதே மஅரிபத்தாகும்.

வினு:—மஅரிபா வென்னும் பேரின்பமான காட்சிகளைக்காண வகை யென்ன ?

விடை:—பேரின்பமென்னும் மஅரிபாவின் காட்சிகாண வகை அதாவது,

கல்பு, லதீபு, தாத்து, ஸிபாத்து, இந்த நாலையும் நன்ருய்க் கவனித்துணர்ந்துகொள்.

கல்பு என்றதில் நூறென்னும் ஒளிவு என்றும். லதீபு என்றது சிற்று, சிற்று என்றது தாத்து என்றும், நூறு என்றது ஒளிவு, ஸிபாத்து என்றும் நிட்ஷ்யம் கொண்டு வேற்றுமையகற்றி ஒருமைகொண்ட கண்ணினுல் உற்றுணர்ந்து பார்க்க.

கல்பு, லதீபு, தாத்து, ஸிபாத்தென்னும் ரகசியங்கொண்டுன்நாயனை நீ காணும் வகையை யறிவாயாக. அதாவது,

திரேகத்துக்குக் கிபுலா, கல்பு. கல்புக்குக் கிபுலா றூஹு. றூஹுக்குக் கிபுலா, ஹகீகத்து முஹம்மதிய்யாவான வொளிவு, ஒளிவுக்குக் கிபுலா, சிற்று. சிற்றுக்குக் கிபுலா றஹ்மான் என்று ஷுஹூது செய்து நற்காட்சி காண்பீர்களாக.

வினா:—அனா சிறு வென்னும் பஞ்சாட்சரம் கொண்டு நம்மை யமைத்தவாறென்ன ?

விடை:—ஐந்து வகை யட்சரங் கொண்டமைத்ததாகும். அவை,

1-வது இன்சானில் மண்ணுக்கு உட்தலம். பல்லுக்குத்தி அதின் வாசல் நாக்குபேச்சைச் சேர்ந்திருக்கும். அதின் நிறம் மஞ்சல். அதின் ருசி துவர்ப்பு. அதின் மலக்கு ஜிபுரீலு. அது கலிமாவில் லாவைச்சேர்ந்திருக்கும். இதின் வழி சரீஅத்து இதின் திக்று லாஇலாக இல்லல்லாவை சத்தத்தை யுயர்த்தி அளறிப்பப்பளிக்கையாகச் செய்கிறது. இதின் செயல் பொய்புறம்களவும் இரக்கக்கேடு. இப்படிக் கொத்த தீங்கான கருமங்களை முடித்துக்கொள்ளும்.

2-வது தண்ணீருக்குட் தலம், கருஈரல். அதின் வாசல் கண்பார்வையைச்சேர்ந்ததாக விருக்கும். அதின் நிறம் சிகப்பு. அதின் ருசி கயர்ப்பு. அதின் மலக்கு மீக்காயீலு. அது கலிமாவில் இலாஹவைச் சேர்ந்ததாயிருக்கும். இதின் வழி தரீக்கத்து. இதின் திக்று லாஇலாக இல்லல்லாவைத் தனக்கு மட்டும் கேட்கும்படியாகத் திக்று செய்கிறது. இதின் செயல் சந்தோஷத்தையும் சுவாத்தியத்தையும் முடித்துக்கொள்ளும்.

3-வது காற்றுக்குள் தலம், நுரைஈரல். இதின் வாசல் மூக்கு மூச்சை சேர்ந்ததாக விருக்கும். இதின் நிறம் பச்சை. இதின் ருசி புளிப்பு. இதின் மலக்கு இஸ்ருபீலு. இது கலிமாவில் இல்லா

வைச் சேர்ந்ததாகவிருக்கும். இதின் வழி ஹகீக்கத்து இதின் திக்று லாஇலாக இல்லல்லாஹு வை சுவாசத்தோ டணைத்து திகறு செய்கிறது, இதின் செயல் ஹவாவையும், பெருமைத்தனத்தையும் முடித்துக்கொள்ளும்.

4-வது நெருப்புக்கு உட்தலம் பித்து இதின் வாசல் காதுகேள்வியைச் சேர்ந்ததாக விருக்கும் இதின் நிறம் கறுப்பு இதின் ருசி கசப்பு இதின் மலக்கு இஸ்றாஈலு இதுகலிமாவில் அல்லாவைச்சேர்ந்ததாக விருக்கும். இதின் வழி மஅரிபா. இதின் திக்று லாஇலாக இல்லல்லாஹுவை தனக்கும் கேளாமைபோல் மறைவாய் திக்று செய்கிறது. இதின் செயல் கோபம் சரீரத்தை யொடுக்கி மௌத்தாக்கிக் கொள்ளுகிறது.

5-வது ஆகாயத்துக்குள் தலம் தாமரை மொட்டு. இதின் வாசல் எங்கே நாட்ட மோடுகிறதோ அதுதான் இதைச் சார்ந்தவர்கள் முஹம்மதுன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இதின் வழிதௌஹீது இதின் திக்று சிற்றியென்னும் வாய் உசுப்பாமல் திக்று செய்கிறது இது கலிமாவில் 'ஹுவைச்' சேர்ந்ததாக விருக்கும். இதின்செயல் ஆசையையும் அனுபோகத்தையும் முடித்துக்கொள்ளுகிறது, இதின் ருசி இனிப்பு, இதின் நிறம் சிவந்த வெண்மையாமென் றறியவும்.

மஅரிபாவின் பாடம் முற்றிற்று.

5-வது சரீஅத்துடைய பாடம்.

வினா:—சரீ அத்து என்பது என்ன?

விடை:—சரீ அத்து என்பது மார்க்கச்சட்டம். அதாவது, றசூல் சல்லல்லாஹுー அலைஹிவஸல்லம் அவர்கள் சொல்லாக இருக்கும். அவைகள் கலிமா, தொழுகை, ஸகாத்து, நோன்பு, ஹஜ்ஜு, உம்ரு, கல்வி படிக்கிறது, நிகாஹுー செய்கிறது, முழுக்கு இறுக்கிறது, வட்டி விலக்கிறது, அநியாயம் விலக்குகிறது, பொய்புறம் விலக்குகிறது, போலும், இன்னும் அனேகம் எங்கள் நாயகம் நபி முஹம்மதுன் சல்லல்லாஹுー அலைஹிவஸல்லம் அவர்கள் சொன்னதெல்லாம் உண்மையென்றும், அவர்கள் ஏவினதை யெடுத்தும், விலக்கினதை தவிர்த்து நடப்பதும் அல்லாஹுーத்தஆலாவின் உகப்புத்தங்கிய தீனில் இஸ்லாமென்னும், மார்க்கக்கட்டளைகளைக்கடக்காமல் நடாத்தி வரும்படி எங்கள் நாயகம் சொன்ன சொற்களே சரீஅத்தென்பது றசூலின் சொல்லென்பதாம்.

சரீஅத்தின் பாடம் முற்றிற்று.

6-வது தரீக்கத்துடைய பாடம்.

வினு:—தரீக்கத்து என்பது என்ன ?

விடை:—தரீக்கத்து என்பது மார்க்கபாதை.

அதாவது றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் செயலாகவிருக்கும். அவைகள் தனித்திருப்பது, விழித்திருப்பது, பசித்திருப்பது, வாய்பொத்தியிருப்பது, பெலப்பெருமை, இனப்பெருமை, பொருட்பெருமை, கூறுதிருப்பது, ஸுன்னத்துதொழுகைகளைவிடாமல்எடுப்பது, தஸ்பீஹுசெய்வது, ஔறுது ஓதுகிறது, திக்றுசெய்கிறது, பிக்றுசெய்கிறது, முறுகபாவும், முஸாஹதாவும், இகுலாசும், குலூஉம், குஸூஉம், கௌபும், தம்ஜீதும், தஃலீமும், தக்பீறும், நலவுகளைக்கொண்டேவுறதும், பொருத்தக்கேடான கருமங்களை விலக்கிறதும் ஹக்கைப் பயப்படுவது போலுள்ள கருமங்களான பாதையாக விருக்கும்.

தரிக்கத்துடைய பாடம் முற்றிற்று.

7-வது ஹகீகத்துடைய பாடம்.

வினா:—ஹகீகத்து என்பது என்ன?

விடை:—ஹகீகத்து என்பது திட்டவட்டம். அதாவ்து றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய ஹாலாக விருக்கும். அவை உள்ளமையான திட்டவட்டமான ஹால் என்னவென்றுணருதல். அதாவது, அவ்வலில் முஹம்மது நூறு என்று நாயகம் நபி முஹம்மதுன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள்.

أَنَا مِنْ نُورِ اللّٰهِ وَكُلُّ شَيْءٍ مِنْ نُورِي

இதன் பொருள்.

நான் அல்லாவுடைய நூறில் நின்றுமுள்ளவன் வஸ்துகளடங்கலும் என் நூறில் நின்று முள்ளது வென்றார்கள்.

ஆகிறுல் முஹம்மது றூஹாம் என்று நாயகம் நபி முஹம்மதுன் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள்.

أَنَا أَبُو الْأَرْوَاحِ وَأَبِي آدَمُ أَبُو الْبَشَرِ،

இதன் பொருள்.

நான் எல்லா றூஹுகளின் தகப்பன். என் தகப்பன் ஆதம். எல்லா மனிதர்களின் தகப்பனாயிருக்குமென்றார்கள்.

லாஷிறுல் முஹம்மது இன்சானென்று நாயகம் நபி முஹம்மதுன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானுர்கள்.

أَنَا بَشَرٌ مِثْلُكُمْ

இதன் பொருள்.

நான் உங்களைப்போல் மனிதன் என்ருர்கள்.

பாதினுல் முஹம்மது றப்பானென்று நாயகம் நபி முஹம்மதுன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானுர்கள்.

أَنَا أَحْمَدُ بِلَا مِيمٍ أَنَا عَرَبٌ بِلَا عَيْنٍ

இதன் பொருள்.

நான்மீமில்லாத அஹ்மது.
நான் ஐனில்லாத அறபு என்ருர்கள்.

அதாவது, அஹதியத்தில் ஜம்உல் கதீமுல் அஃமாவெனும் சிற்றுவ்ஸ் சிற்றில் சிற்ருயிருந்தபடியால் அஹதெனும் நிலைமையும் றப்பெனும் தகுமை போன்ற நாயகத்தனமு நிறைந்த எங்கள் நாயகம் முஹம்மதுன் முஸ்தபா அருளிய சொல்லாம்.

விஞ:-இந்த நான்கு சொல்லிலும் நற்கருத்தெப்படி?.

விடை:—இந்த நான்கு சொல்லின் நற்கருத்தாவன:

1-வது அவ்வலில் எங்கள் நாயகம் நபிமுஹம்மதுன் முஸ்தபா உம்மத்துகளுக்கு உயிர்போலாகவும்,

2-வது ஆகிறுல். எங்கள் நாயகம் நபி முஹம்மதுன் முஸ்தபா உம்மத்துகளுக்கு கல்புபோலாகவும்,

3-வது லாகிறுல். எங்கள் நாயகம் நபி முஹம்மதுன் முஸ்தபா உம்மத்துகளுக்கு உறுப்புப்போலாகவும்,

4-வது பாதினுல். எங்கள் நாயகம் நபிமுஹம்மதுன் முஸ்தபா உம்மத்துகளுக்கு வுஜூதுபோலாகவும், அல்லாஹுத் தஆலாவின்பேரின் பவளழ் வெனும் ஆதரவை வைத்து அன்னியத்துகைரியத்து என்னும் இருவினை நீக்கி ஒருமையாகிய உலூஷியெத்தென்னும் நாயகத்தனம் நிறைந்து இலாகியத்தெனும் பண்பைப் பூண்டு ஹகீகத்து வென்னும் திட்டவட்டமாகிய ஒரே ஹாலா இருந்தார்களென்றும், இந்த நாலு சொல்லைக்கொண்டும் அவர்களின் ஹகீகத்தென்னும் ஹாலை யறிந்துகொள்ளுவீர்களாக.

ஹகீகத்துடைய பாடம் முற்றிற்று.

8-வது மஅரிபத்துடைய பாடம்.

வினு:—மஅரிபத்து என்பது என்ன?

விடை:—மஅரிபத்து என்பது நாயனை யுணருதல். அதாவது றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சிற்ருக இருக்கும். எப்

படியெனில் நாயனை யுற்றுணர்ந்து றசூல் சிற்றை அறிவதே சிற்றாக இருக்கும். அவையாவன தாத்தும், ஸிபாத்தும், அஸ்மாவும், அபுஆலும், ஜலாலும், ஜமாலும், கமாலும், நூறும், வுஜூதும், கிதமும், சீமும், நானும், சிற்றாய் எல்லாம் ஜம்உல், ஜம்ஆகி கதீமுல் அஃமாவாக இருந்து ஜலாலும், ஜமாலும் அலமோதிக்கமாலான நூறு வெளியானதாம்.

இந்தச் சிற்றை யுற்றுணர்வதுதான் ஹக்கை யறிந்து காட்சி காண்பதாகும். இதுதான் நாயனை யுணருதல்.

மஅரிபாவுடைய பாடம் முற்றிற்று.

9-வது திக்றுஉடைய பாடம்.

வினா:—திக்று என்பது என்ன?

விடை:—திக்று என்பது நாயனை நினைக்குதல். அதாவது, அல்லா சுபுஹான ஹுவ்வத் தஆலா உன்னை நபுசுக்குல்வில் நின்றும் வெளியாக்கினதால் ஏழு சிபத்தின் கணக்கு ஏழு நபுசுண்டும். அதில்,

1-வது நபுசு அம்மாரு, இதின் குணகுணம் காபிர்களின் குறி குணகுணமாக இருக்கும். அதாவது, கெடுதியாகிய கருமங்களைக் கொண் டேவுகிற

தும், மேலெண்ணம்,கோபம், இச்சை, அவேட்கை, முகத்துதி, பெருமை, தகாமை, வஞ்சகம், சூது, களவு இவைகள் போலொத்ததாக விருக்கும். இந்த நபுசையடக்கி லாஇலாஹ இல்லல்லாஹு என்கிற திக்றைப் பப்பளிக்கையாகச் சத்தத்தை யுயர்த்திச்செய்துகொண்டு வந்தால் அந்த நபுசுமடங்கி, சரீஅத்தையெடுத்து மகாம் நாசூத்தி லாஹுமென வுணர்க.

2-வது நபுசு லெவ்வாமா, இதின் குணகுணம் மூஃமீன்களின் குறிகுணமாக இருக்கும். முந்திய நபுசின் குணங்களைத் தவிர்த்து நடக்கும். ஆனால் வஸ்வாசிய்யத்தான குணங்களிருக்கும். அந்த நபுசை மடக்க லாஇலாஹ இல்லல்லா ஹு வென்கிற திக்றை முன்செய்ததற்குக் கொஞ்சம் பதிவாய், அமைவாய், ஒரே நினைவாய்ச் செய்கிறது. இவ்விதம் செய்தால் அது மடங்கி த்தரீக்கத்தை யெடுத்து மகாம் மலக்கூத்திலா ஹு மென்றுணர்க.

3-வது நபுசு, முல்ஹிமா, இதின் குணகுணம் ஔலியாக்களுடைய குறிகுணமாக விருக்கும். இதற்குச் சகலதும்உதிப்பாகிறதாகவிருக்கும் நலவும் வணக்கமும் விழித்திருப்பதும் பசித்திருப்பதும் நோன்பு பிடிப்பதும் ஸுன்னத்தான வணக்கங்களைக்கொண்டாடி வருவதும், இதைத் துயர்ந்து லாஇலாக இல்லல்லாஹு வென்கிற திக்றைத் தனக்கு மட்டும் கேட்கும்படியாக

திக்று செய்துவந்தால் அப்ப மகாம் ஜபறூத்தி லாகுமென வுணர்க.

4-வது நபுசு முதுமஇன்னா, இதின் குணகுணம் நபிமார்களுடைய குறிகுணமாக விருக்கும். தன்னை மண்ணைப்பொலே காணும். அல்லாஹுத்தஆலாவைத் தவிர மற்றொன்றையும் காணாது. மேற்சொல்லிய நபுசின் அமல்களுடன் கொடை கொடுக்கிறதும், உள்ளதைக்கொண்டு போதுமாக்கிக் கொள்ளுகிறதும், இல்மு மேற்படுகிறதும், தாழ்மையை யெடுப்பதும், தௌபாவுடனிருப்பதும், பலாய்முஸீபத்துவந்தால் பொறுதிசெய்து கொள்ளுகிறதும் இதில் லாஇலாஹ இல்லல்லாஹு என்கிற திக்றை தன் மனத்தில் நடத்திக் கொண்டு வந்தால் மஅரிபத்துடைய அமலுமாகி மகாம் லாகூத்திலாகு மென்றுணர்க.

5-வது நபுசு ருலியா,

6-வது நபுசு மறுலியா,

7-வது நபுசு காமிலா வென்று சொல்லப்படும் இந்த மூன்று நபுசின் குணமும் மேற்சொல்லிய நபுசின் குணங்களில் நின்றும் விசேஷமானதாக விருக்கும். அதாவது,

அல்லாஹுத் தஆலாவின் கட்டளைக்கு அமைந்து பொருந்திக்கொண்டதால், ருலியாவென்றும் அல்லாஹுத் தஆலாவின் பொருத்தத்துக்குப் பாத்திபமாருயிப்பதால் மறுலியாவென்றும், சகல

மகாம்களிலும் ஹால்களிலும், அமலிலும், நிரம்பியிருப்பதால் காமிலாவென்றும் சொல்லப்படும். இந்த நபுசுகவின் உரூலுடைய தலங்கள் மகாம், ஹாஹூத்து மகாம், பாஹூத்து, மகாம், ஜம்ஹூத்து என இவைகளிலாகுமென்றுணர்க. இன்னும் இந்த மகாம்களை யறிகிறதும் காண்கிறதும் கல்பு ஹாளிரானவனுக்கேயொழிய மற்றப்படி காதால் கேட்பவனுக்கும் கண்ணாற்கிதாபைப் பார்ப்பவனுக்கும் இந்த மாகாம்கள் எத்தாது. ஆனால் ஸதுறு என்னும் நெஞ்சினுள் ஸனுபற் என்னும் கல்பு என்னும் பெயருடைய வீட்டில் மனமென்னும் எண்ணங்களைத் தௌஹீதென்னும் ஒருமையாகிய வொரே வழியாய்த் திருப்பி அவ்வீட்டின் நேரில் உன்ஹக்கைக்காணும். மஹ்மூதாவென்னும்கண்ணாடியைவைத்துஒன்றுமல்லாமலிரண்டு மல்லாமல் அதமாயொரே பார்வையாய்ப் பார்ப்பாயானால் அந்தக் கண்ணாடியினுள் இணையில்லாதொருவனின் ஒளி தோற்றும். அதைக் காண்பீர்களென்றுணர்க.

திக்றுடைய பாடம் முற்றிற்று.

10-வது பிக்றுடைய பாடம்.

வினா:—பிக்று என்பது என்ன?

விடை:—யோசிக்குதல். அதாவது, ஆமாகிய யோசிப்பினால் அனேக தவாபுண்டு. அவைகளாவன:

அல்லாஹுத் தஆலா எவ்விதமானவனென்றும் நபி முஹம்மதுன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் எவ்விதமானவர்களென்றும் அல்லாஹுத் தஆலா எப்படி வெளியாகினானென்றும் நாங்களெப்படி யுண்டானோமென்றும், அவன் என்ன தன்மையாயிருக்கிறானென்றும், நாம் என்ன அழகாயிருக்கிறோமென்றும், அல்லாஹுத் தஆலா ஏன் நபி முஹம்மதுன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப் படைக்க நாடினானென்றும், நாம் ஏன் அவர்களைத் துயர்ந்து அவர்கள் கட்டளைக்குள் மைந்து நடக்கவேண்டுமென்றும், அவர்களை எப்படி படைக்கப்பட்டது என்றும், நம்மைஎப்படிப்படைக்கப்பட்டது வென்றும் ஆலங்கள் எப்படி யுண்டாக்கப்பட்டதென்றும் யோசிப்பாய்.

இன்னும் மிந்த பிக்று வென்னும் யோசனையால் மனதை மருளவிடாமல் உன்னிலே நீயுணர்ந்து ஹக்குத்தஆலாவின் தாத்து மஹுறறைக் கவனிப்பாயாக. அதாவது,

நபிமுஹம்மதுன் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் நிழல் ஏன் பூமியில் விழவில்லையென்றும், நம்அனைவருக்குமேன் நிழல் விழுவதென்றும், அல்லாஉடைய வுஜூதென்ன, நபி முஹம்மதுன் முஸ்தபா அவர்களின் வுஜூதென்ன நமக்கு வுஜூதென்ன, வுஜூது வென்பது என்ன, உள்ளமையென்பது வென்னவென்று யோசிப்பாயாக.

இன்னும் ஆலமறுவாஹு ஆலமிதால், ஆலமஜ்சாம், ஆலமின்சான் என்றவிந்த நாலு ஆல

மும் என்னவென்றும், நாங்கள்முன்னெந்த ஆலத்தி லிருந்தோமென்றும் இப்போ எந்த ஆலத்திலிருக் கிருேமென்றும், இனிமேலெந்த ஆலத்திற் செல் வோமென்றும் யோசிப்போமாக.

இன்னும் நீ தாய் தகப்பனென்பது என்ன, உன்னைத் தாய் தகப்பனென்று உன் சேய்கள் சொல் வதுமென்ன, இது இரண்டுமில்லாமையுமுண்டா னதுமென்ன, நீ இலட்சணமாகவும், மற்றவன் அவலெட்சணமாகவும், வந்த தென்ன, ஒருவன் இராஜாவாகவும், மற்றவன் பிரஜையாகவும் வந்த தென்ன, ஒருவன் செல்வனுகவும், மற்றவன் வறியவ னுகவும், வந்ததென்ன, ஒரு கனி சிகப்பாகவும் மறு கனி கறுப்பாகவும் வந்த தென்ன, மனுமுகமெல்லா மொருமுகமாகியும், பல விகற்பம் வந்த தென்ன வென்றும், எல்லாவஸ்துக்களையும் படைத்து அவரவர் தராதரப்படி இரண மரண மிடுபவனுகிய அல் லாஹுத் தஆதா வஸ்துகளனைத்தின் கடைசியை யறியும் குத்றத்தையுடையவன் அவன் எப்படித் தகு முடைய றப்பில் ஆலமீன் எனயோசிப்போமாக.

இன்னும் நஸீஹத்து என்பதுவென்ன, சைகு வென்பது வென்ன, முரீது வென்பது வென்ன, சைகுகொடுக்கும் பாலென்பது வென்ன, முரீது குடிக் கும் விதியென்ன, சைகும், முரீதும் இருக்கும் முசல்லா வென்னும் விரிப்பென்ன, சைகு முரீதை யறிவதெப் படி, முரீது சைகை யறிவதெப்படி, சைகை முரீது காண்பதெப்படி, முரீதை சைகு காண்ப தெப்படி யென்று யோசிப்போமாக.

இன்னும் ஹக்கின்னது, பாத்திலின்னது, தாத்தென்ன, சிபாத்தென்ன, ஹயாத்தென்ன, வுஜூதென்ன, உடலென்ன, உயிரென்ன, திரையென்ன, ஒளியென்ன, ஜன் என்ன, அலிபென்ன, லாமென்ன, காமிலென்ன, ஹகீகியென்ன வென்று உண்மையாக யோசித்து ஹக்குத் தஆலாவின் பேரில் தியானிப்போமாக.

பிக்றுடைய பாடம் முற்றிற்று.

11-வது முஷாஹதாவுடைய பாடம்.

விஞ:—முஷாஹதா வென்பது என்ன?

விடை:—முஷாஹதா வென்பது தெரிசிக்குதல், அதாவது,

முஷாஹதாவில் இரண்டுவகையுண்டும். அவை

முதலாவது

ஷுஹூதுல் கதுறதி பில்வஹ்ததி.

பல தஐயுனுத் தென்னும் குறிப்புகளையும், ஒரு வுஜூதில் தெரிசிக்கிறது. சகல மௌஜூதாதும், ஹக்குத் தஆலாவுடைய வுஜூதில் மறைந்திருந்தபடியால் பலது ஒன்றென்று காண்கிறது. அதற்கு உவமையாகிறது மரத்தையும் கொப்புக்குளைகளையும் வித்தில் தெரிசிக்கிறது போலாயிருக்கும்.

இரண்டாவது

ஷஃஹுதத்தில் வஹ்தத்தி பில்கத்துறத்தி

முன் சொன்னதற்கு ஒரு வுஜூது பல தஐயுனத்திலும், வெளியாயிருக்குதென்று தெரிசிக்கிறது. அதாவது,

பலதிலும் ஹக்குத்தஆலாவுடைய வுஜூது சென்றிருக்கிறபடியால் ஒன்று பலதென்று காண்கிறது. அதற்கு உவமையாகிறது மரத்திலும் கொப்புக் குளைகளிலும் வித்தைத் தெரிசிக்கிறதுபோலாயிருக்கும்.

இன்னுமோர் ஏற்றமான வகை.

தாத்துக்கு இஸ்மாகிய அல்லாவென்கிற ஜாமி ஆன இஸ்மை கல்புலே தெரிசனை பண்ணுகிறது. இதுவும் அல்லாஹுத் தஆலாவுடைய மஹுறுலே நின்றும் ஒரு மஹுறுதான். இந்த மஹுறிலே ஹக்குத் தஆலா ஹுலூலும், இத்திஹாதும் எண்ணியே தஜெல்லியாகிறான் என்றும் இந்தப்படி தெரிசனை பண்ணவிட்டால் முனபீக்கென்றும், இதைத் தானே நாயனென்று கண்டால் காபிரென்றும், இன்னும் நாயன்வேறே அடிமைவேறே யென்று கண்டால் முசிரீக்கென்றும், நமது நபி முஹம்மதுன் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள். இன்னும்,

இந்த ஜாமி ஆனஇஸ்ம் தனக்கு ஹயாத்தாகவும், தான் மௌத்தாகவும் காண்கிறது. அது எப்

படி யென்ருல் மண், தண்ணீர், காற்று, நெருப்பு இது நாலுகொண்டும் தான் ரூபமாயிருக்கிருனென்றும். ஆனுல் மண்ணுக்குத் தண்ணீரில்லாமற் சேர்மையாகாது. அதுபோல் பாலில் நெய் கலந்தாற்போல் ஜிசுமில் இஸ்ம் கலந்து இருக்கிறது. ஜிசுமாவது தானென்றும் தான் மௌத்தென்றும், இஸ்மாவது அல்லாவென்றும், அவன் ஹயாத்தென்றும், ஹயாத்தானது உயிரென்றும், மௌத்தானது உடலென்றும் கல்புலே நிறுத்திக் காண்பாயாக. ஆனல் தன் உடலையாவது தன் உஸ்தாதுடைய உடலையாவது றப்பென்று எண்ணிவிடாதே யென்றறியவும்.

முஸாஹதாவுடைய பாடம் முற்றிற்று.

12-வது முருகபாஉடைய பாடம்.

விஞ:—முருகபாவென்பது என்ன?

விடை:—முருகபா வென்பது கூர்கப்பார்க்குதல்.

அதாவது எல்லா ஹாலிலும் ஹக்குத் தஆலா அடிமைபேரில் உதயமாகிப் பார்த்துக்கொண்டிருக்கிருன் என்ற அறிவை அடிமை யெப்போது நேமமாக்கிக்கொண்டிருக்கிறது.

இன்னும் அல்லாஹுத் தஆலா உங்கள் பேரில் நோட்டமிட்டவஞக இருக்கிரு னென்று குறுஆனில் திருவுளம் பற்றி யிருக்கிருன். ஆகை

யால் இவ்வித மொருவன் முருகபாச் செய்தானுகில் அவனுடைய வுறப்புகளில் பாவம் வராமல் அவனை அல்லாஹுத் தஆலா கார்த்துக்கொள்வான்.

இன்னும் முருகபாவில் ஒரு வகையாவது தாத்துடைய இஸ்மாகிய அல்லாவென்னும் நாமத்தை ஒரு மினிட்டு நேரமாவது அதை விட்டும் மறக்காமல் கல்பில் அந்த நாமத்தைப்பூட்டிக்கொண்டே யிருக்கிறதாகும்.

இன்னும் மொருவகை முருகபாவுடைய மஅனுவாகிறது தன்னுடைய அந்நிய்யத்தை நபிச்செய்து அவன் தன்னுடைய ஹுவியத்தை இதுபாத்துச் செய்கிறதுதான் முருகபா வென்றது. அந்நிய்யதை நபிச்செய்து கொள்ளுகிற விதமெப்படி யெனில் தாத்து, ஸிபாத்து, அஸ்மா, அபுஆலாக இருக்கும்.

அதாவது தாத்து என்றது தன்னுடைய உள்ளமை, ஸிபாத்து என்றது தன்னுடைய ஹயாத்து, அறிவு, நாட்டம், தத்துவம், கேள்வி, பார்வை, பேச்சு இப்போலொத்ததாக விருக்கும். அஸ்மா வென்றது தன்னுடைய தத்துவமாக விருக்கும். அபுஆலென்றது தன்னுடைய எல்லாச் செயலுமாயிருக்கும். இது எல்லாத்திலும் தன்னை இல்லாமையாக்கி அவனென்கிறதைத் தரிபடுத்தி தன்ஐம்புலனையொடுக்கிக் கண்ணை மூடிக் கல்பைத் திறந்து நானில்லை அவன்தானென்று காண்கிறது தான் முருகபாவாக விருக்கும். நிலைதவருமல் ஹருமைப் பொசிக்காமல்

ஹவாவையொடுக்கி அவன் ஹலறத்தை நாடி அமல் செய்தால் இந்த முருகபா மெத்த அழகாகிய காட்சிகளைக் காண வைக்குமென்றுணர்க.

முருகபாவுடைய பாடம் முற்றிற்று.

13-வது தக்வாஉடைய பாடம்.

விஞ:—தக்வா வென்பது என்ன?

விடை:—தக்வாவென்பது உள்ளச்சப்படுதல், அதாவது, ஏவலை எடுத்து விலக்கலைத் தவிர்ப்பது,

மூன்றுவகைப்படும். முதலாவது பாவத்தைத் தவிர்ந்து கொள்ளுகிறது. அதாவது, பறுலுகளை விடுகிறதுபோலுள்ள பாவமும், விலக்கலை எடுக்கிறதுபோலுள்ள பாவமும்.

இரண்டாவது சாலிகு வென்னும் அல்லா அளவில் நடக்கிறவன். அவனுடைய நினைவைவிட்டும் மாருதிருக்கிறது. மூன்ருவது ஆரிபுவென்னும் அல்லாவை யறிந்தவன் நலவுவரும் துறையில் நாயனை யாக்கிக்கொள்ளுதல். இடறு வரும் துறையில் தன் நபுசை யாக்கிக்கொள்ளுகிறது. இன்னும் தக்வாவினிலுள்ள பலாபலன் பனிரெண்டு என்று குறுஆனில் வந்ததை யெடுத்து கஸ்ஸாலி இமாம் கூறுகிருர்கள். அதில்,

1-வது தக்குவாவை யுடையவனைப் புழ்ந்திருக்கிறேன் என்று சொல்லி யிருக்கிறுன்.

2-வது தக்வாவை யுடையவனுக்குப் பகைவருடைய திங்கை விட்டும் கார்மானமுண்டென்று சொல்லியிருக்கிறுன்.

3-வது எக்கருமத்திலும் தக்குவாவை யுடையவனைக் கெட்டியுண்டாக்கி இருக்கிறது என்று சொல்லியிருக்கிறுன்.

4-வது தேடாப் புறத்தினுல் ஹலாலான ரிஷ்கு இவனுக்குக் கிடைக்குமென்று சொல்லி இருக்கிறுன்.

5-வது அவனுடைய அமல் முழுவதும் இணக்கமாயிருக்கிறது என்று சொல்லி இருக்கிறுன்.

6-வது இவனுடைய பாவங்களைப் பிழைபொறுக்கப் பட்டிருக்குமென்று சொல்லி யிருக்கிறுன்,

7-வது இவன்பேரில் அல்லாவுடைய முஹப்பத் துண்டுமென்று சொல்லியிருக்கிறுன்,

8-வது இவனுடைய சொல், செயல், நிர்ணயம் முழுவதும் ஒப்புக்கொள்ளப்படுமென்று சொல்லி யிருக்கிறுன்,

9-வது இவனைச் சிறப்பாகவும் சங்கையாகவும் வைத்திருப்பேனென்று சொல்லி யிருக்கிறுன்,

10-வது மௌத்தினிடத்தில் இவனுக்கு நல்மாராயம் உண்டென்று சொல்லி யிருக்கிறுன்,

11-வது நரகத்தை விட்டு இவனுக்கு ஈடேற்றமென்று சொல்லியிருக்கிறுன்,

12-வது சொர்க்கத்தில் இவன் நீடூழி காலம் தரிபடு வது உண்டென்று சொல்லி யிருக்கிருன்,

ஆகையால் அல்லாஹுதஆலாவுடைய சொல்லைக்கொண்டும் தக்குவாவை யெடுத்து நடந்து நல்வழி பெறுவீர்களாக.

தக்குவாவுடைய பாடம் முற்றிற்று.

14-வது வஸீலாவுடைய பாடம்.

வினு:—வஸீலா வென்பது என்ன ?

விடை:—வஸீலா வென்பது காணிக்கை வைப்பது வஸீலா இரண்டு வகைப்படும், அவை,

முதலாவது அழகான அமல்களைச் செய்து வைத்திருக்கிறது. இரண்டாவது தாலிபு தன் நபுசுக்கு நேர்வழியான காமிலான ஒரு செய்கைத்தோழனுக எடுத்துக்கொள்வது.

இன்னும் வஸீலாவென்பது ஒருவரைப் பொறுப்பாக ஆக்கி, தன் குற்றத்தைப்பொறுக்க அல்லது தன் தறஜாவையுயர்த்த அல்லது தனக்குள்ள ஆமான ஹாஜத்துகளை நிறைவேற்ற தானதைப் பற்றிக் கேட்கப் பாத்திய மற்றவனென்று தானெண்ணி ஒருவரைப் பொறுப்பாக ஆக்கி அல்லா இடத்தில் கேட்கிறது. அதாவது,

நபி நாயகம் முஹம்மதுன் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அல்லது அப்துல் காதிறுல் ஜெய்லாநிய்யி அவர்களைத் பொறுப்பாக வைத்துக் கேட்குமப்போலே யுள்ளது தான் வஸீலா வென்று சொல்லப்படும். இன்னும்,

காமிலான செய்கைத் தோழனுக்கிக் கொள்ளென்பது ஒரு காமிலான செய்கைத் தேடியவர்கள் ஏவின கட்டளைக்கு மாறில்லாமல் நடப்பதும் அவர்களை யதிகமாயுகப்பதும் அவர்கள் செய்து வரும் அவுறாது திக்று பிக்று போலொத்த தெல்லாம் செய்து வருகிறதும்தான் வஸீலாவுக்குரியன.

வஸீலாவுடைய பாடம் முற்றிற்று.

15-வது முஜாஹதாவுடைய பாடம்.

வினா:—முஜாஹதா வென்பது என்ன?

விடை:—முஜாஹதா வென்பது யுத்தம் செய்யுதல். அதாவது இரண்டு வகைப்படும். அவை,

1-வது தீனுடைய பகைவருடன் சண்டை செய்கிறது.

2-வது நபுசுக்கு விகற்பஞ் செய்து நபுசின் இச்சைகளை யுகப்பதை விட்டு விடுகிறது. (அதாவது) தனித்திருப்பது, விழித்திருப்பது, பசித்திருப்

பது, நின்று வணங்குவது, நபுசுகெட்ட வெண்ணங்கொண்டு பாவங்களைச் செய்ய வெத்தனிக்கும் நேரத்தில் கத்திகொண்டு வெட்டுவது போல், தக்வாவைக்கொண்டும், தெளபாவைக் கொண்டும், ஹிம்மத்தைக் கொண்டும், வெட்டி நேர்வழிபிலெடுப்பது, அது எப்படியானல்,

எங்கள் நாயகம் நபி முஹம்மதுன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன் நபுசை வசப்படுத்தி ஹக்குத்த ஆலாவின் உகப்பைப்பெறுகிற தற்காகத் தங்கள் இருபாதமும் வீங்குமளவும் நின்று வணங்கவில்லையோ. அது போலும்,

இன்னும் எங்கள் ஆண்டவர்கள் கௌது முஹ்யிதின் அப்துல் காதிறுல் ஜெய்லானியவர்கள் நின்று வணங்கின கடுமையால் இஷாவுடைய ஒலுவைக்கொண்டு சுபுகு தொழவில்லையோ.

இன்னும் அவர்கள் பல வருஷங்களிலும் ஒரே ஹாலில் ஒரே நிலையாக நின்று வணங்கவில்லையோ. இன்னும்,

பெரியோர்கள் அனேக வகையாய் நபுசுடன் யுத்தஞ் செய்திருக்கிறூர்கள் நீயும் உன் நபுசோடு யுத்தஞ்செய்து உன் நபுசை நேர்வழிப்படுத்தி நற்பதவி பெறு வழியில் நிலைப்படுவாயாக.

முஜாஹதாவுடைய பாடம் முற்றிற்று

16-வது அகாஇதுஉடைய பாடம்.

வினு:—அகாஇது வென்பது என்ன?

விடை:—அகாஇது வென்பது நிர்ணயங்கள் அதாவது, நிர்ணயம் கொள்ளவேண்டியது. அல்லாஹுத்ஆலாவுக்கு இருபது சிபத்து வாஜிபு. அதாவது,

உஜூது என்னும் உள்ளமையும், இதற்கு நபுசிய்யா வென்று பெயர்.

இன்னும் கிதமென்னும் பூர்வீகமும், பகாவென்னும் தரிபாடும், முகாலபத்து லில்ஹவாதிதி, என்னும் படைப்புகளுக்கு ஒவ்வாவண்ணமும், கியாமு ஹூபி நபுசிஹி, என்னும் தன்னிற்தானே நிலைநிற்பதும், வுஹதா நிய்யத்து வென்னும் ஒருவனுயிருத்தலும், இந்த ஐந்தையும் ஸல்பிய்யாவென்று சொல்லப்படும்.

இன்னும், ஹயாத்து வென்னும் சீவனும், இல்மு என்னும் அறிவும், இருதத்து என்னும் நாட்டமும், குத்றத்து என்னும் தத்துவமும், ஸம்உ என்னும் கேள்வியும், பஸற் என்னும் பார்வையும், கலாம்என்னும் பேச்சும் இதற்கு மஆநிய்யாவென்று சொல்லப்படும்.

இன்னும் ஹையுன் என்னும் சீவனுள்ளவன் ஆலீமென்னும் அறிவுள்ளவன், முரீது என்னும் நாட்டமுள்ளவன், காதிறு வென்னும் தத்துவமுள்ளவன், ஸமீஉன் என்னும் கேள்வியுள்ளவன், பஸீறு என்னும் பார்வையுள்ளவன், கலாம் என்னும் பேச்சுள்ளவன் இதற்கு மஅநவிய்யா, வென்று சொல்லப் படும்.

இன்னும் அல்லாஹுத் தஆலாவுக்கு மூஸ்த ஹீலான சிபத்து இருபதுண்டும். அதாவது,

வாஜிபான சிபத்துக்கு மாற்றமான சிபத்து. அவை இல்லாமை, அபூர்வம், அவனுக்கு உண்டென்று சொல்வதுபோலும், தன்னில்தானே நிலையற்று இருக்கிருனென்று சொல்வதுபோலும், ஹயாத்துள்ளவன் என்றதற்கு மௌத்தாகிறவனென்றது போலும். மாற்றமான இருபது சிபத்துகளை நாம் நினையாவிதமாயும் நாவினுற் சொல்லாவிதமாயும், காதினுற் கேட்காவிதமாயு மிருக்கவேண்டியது இன்னும் அல்லாஹுத் தஆலாவுக்கு இல்லாத சிபத்தை ஒப்பிட்டவனுக்குரைத்த பாவிகளில் நாம் ஆகாதபடி நம்மை அல்லாஹுத் தஆலா காத்து நல்லருள் சொரிவானுக.

அகாஇதுவுடைய பாடம் முற்றிற்று.

17-வது இஸியானுடைய பாடம்.

வினு:—இஸியான் என்பது என்ன?

விடை:—இஸியானென்பது பாவ வகைகள். அதாவது, கலிமா, ஷஹாதத்து, தொழுகை, சகாதத்து, நோன்பு, ஹஜ்ஜு இவ்வைந்து கடமையிலாகாத பாவிகள் ஊழிகாலமும், நரகவாதனையிற்றரிபடுவார்கள். நஊது பில்லாஹி மின்ஹா.

வினு:—வேறு என்ன பாவங்களுண்டு?

விடை:—பெரும் பாவங்கள் ஐம்பத்திரண்டு வகைகளுண்டு. அவையாவன,

1-வது அநியாயம்,
2-வது பொய்,
3-வது புறம்,
4-வது சதிமானம்,
5-வது பெருமை,
6-வது பொருமை,
7-வது ஹஸது,
8-வது கோபம்,
9-வது குபாடம்,
10-வது கோள் சொல்லுதல்,
11-வது முகத்தாட்சி,
12-வது படிதூறு,

13-வது முனியுதல்,
14-வது சினச்செய்வது,
15-வது லிவாத்துச் செய்வது,
16-வது வட்டி யெடுப்பது,
17-வது எத்தின் பணமெடுப்பது,
18-வது களவெடுப்பது,
19-வது அளவிற் குறைப்பது,
20-வது மதுபானங்களை யருந்துவது,
21-வது சாஸ்திரம் கேட்பது,
22-வது கூத்து விளையாடுவது,
23-வது சூது விளையாடுவது,
24-வது தந்தை தாய் மனதை நோகப்பண்ணுவது,
25-வது மற்றவர்கள் மனதை நோகப்பண்ணுவது,
26-வது ஒஸ்தாதுமார்கள் ஹக்கை இறுக்கராமல் விடுவது,
27-வது அயல்பாகக் காரர் மனத்தை நோவிப்பது,
28-வது சுல்தான்களுடைய ஹக்கை இறுக்காதது,
29-வது ஹக்கில்லாமல் கொலை செய்வது,
30-வது கூட்டிக்கொடுப்பது,
31-வது வஞ்சனை செய்வது,
32-வது நஞ்சை யிடுவது,
33-வது மூஸ்லீமை வெறுப்பது,
34-வது முசிரிக்கை யுகப்பது,
35-வது பொய் சொல்லுவிப்பது,
36-வது அல்லாவுக்கு சுக்கூறு செய்யாதிருப்பது,
37-வது பொல்லார்க்குதவி செய்வது,
38-வது நல்லாரை நகைப்பது,

39-வது எவரையும் பரிகாசம் செய்வது,
40-வது ஒப்பாரி சொல்லுவது,
41-வது வீண்வார்த்தை பேசுவது,
42-வது ஐயம் கேட்போரை அடித்துத் துரத்துவது,
43-வது கண்ணிஞலே பிறர் ஐபைப் பார்ப்பது,
44-வது கூலிக்காரனுடைய கூலியை யெடுப்பது,
45-வது உறவினரை வெறுத்து நடப்பது,
46-வது கண்டெடுத்த பிறர் பொருளை மறைப்பது,
47-வது நபிமார்கள் அற்புதத்தை நம்பாதிருப்பது,
48-வது ஒலிமார்கள் காட்சியைகுறைவாய்க்கூறுதல்
49-வது நபிகிளையாரை நகைப்பது,

ஐம்பதாவது தௌபாவை விடுவதும் துஞ்யாவை யுகப்பதும் ஐம்பத்தோராவது ஆகிருவிலே வரும் ஹால்களை மறப்பதும் ஐம்பத்திரண்டாவது உகப்பான பேர்களை இடையிற் பிரிப்பதும் பெரும் பாவங்களாகும் இந்தப் பாவங்களிற் புகுதாமல் அல்லாஹுத் தஆலா நம்மைக் கார்த்து நல்லருள் சொரிவானுகவும்.

இஸியானுடைய பாடம் முற்றிற்று.

18-வது கௌபுஉடைய பாடம்.

வினு:—கௌபு என்பது என்ன ?

விடை:—கௌபு என்பது பயங்கரமாம். அதாவது, அல்லாஹுத் தஆலாவுக்காய்ப் பயப்படுவது,

மௌத்துடைய கஷ்டங்களையும் மௌத்துக்குப் பின்ஞல் கபுறுடைய கஷ்டங்களையும், பின்ஞல் மஹ்றஷறுடையகஷ்டங்களையும் நரகத்தின் அதாபுகளையும் நினைத்துப் பயப்படுவது.

அதாவது, மௌத்தின் வருத்தத்தில் ஆகத்தாழ்ந்தது, ஒரு ஜீவனுள்ள உயிரை ஒரு கத்திகொண்டு தோலையுரித்து சதையைவார்ந்து உறுப்புகளைப் பிளந்து எலும்பு நரம்புகளை முறிப்து வதை செய்தாலெப்படி யிருக்குமோ அப்படி நமக்கு மௌத்தின் வருத்த மிருக்குமென்றெண்ணிப் பயப்படுவது போலும். கபுறில் நாம் பாவியாக விருந்தால் இருட்டறையில் முங்கற் நகிறுடைய கேள்விக்கு ஜவாபு கொடுக்க வேலாமல் தட்டழியும் நேரம் அவர்களின் சுக்குமாறு கொண்டு நம்மை யடிக்க நாமவ்வடியைப் பொறுக்க வேலாது நம் உறுப்புப் பிரியும்.

இன்னும் நம்முடைய கெட்ட அமல்கள் கெட்ட சூறத்துப்போல் வந்து நம்மைப் பயங்காட்டும். நமக்குப்பாம்பு தேள் போலொத்த விஷஜெந்துக்கள் தீண்டுவது கொண்டும் நமது சடலத்தில் நஞ்சு மீறிக் கொதித்துக்கொண்டிருக்கும் நரகத்தின் நெருப்பு அனலாய் வீசிக்கொண்டே யிருக்கும். அது நமக்குத் தாங்கேலா வேதனையா யிருக்குமென்று பயந்து அல்லாவுடைய ஏவலை யெடுத்து விலக்கலைத் தவிர்த்து நடப்பதுவே கௌபு என்னும் பயங்கர மென்றும் இன்னும் மஹ்றஷறில் உடுமான மில்லாமலும் காலுக்கு உடுப்பில்லாமலும், சூட்டி

ஞல் அவதிப்படுவதும், சூரியனின் காந்தி நமக்கு முடுகி நிற்பதும், ஒடியொளிக்க இடமில்லா வெளியில் நிழலில்லா திருப்பதும் உதவிக்காரராற்று அவதிப் படுவதும், இன்னும் நெருப்பினுலுள்ள உடுப்பைக் காலிலிட்டால் அச்சூட்டினுல் மூளையுருகிக்கொதித்து வடியும் போலொத்த பல வேதனைகளை நினைத்து ணர்ந்து ஹக்குக்காகப் பயந்து ஒடுங்குவதுவேயாம்.

கௌபுடைய பாடம் முற்றிற்று.

19-வது றஜாவுடைய பாடம்.

வினு:—றஜாவென்பது என்ன?

விடை:—ஆதரவு வைக்கிறது அதாவது,

அல்லாஹுதஆலா, அவனைக்கொண்டு இணைவைக்கிறதைப் பிழை பொறுக்க மாட்டான். அதல்லாத பாவங்களை பவன் நாடிய பெயருக்குப் பிழை பொறுப்பான் என்பதுபோலுள்ள ஆதரவாக விருக்கும்.

இன்னும் அல்லாஹுதஆலா பிழைபொறுக்கிறவன் தௌபாவை கபூல் செய்கிறவன், அய்பை மறைக்கிறவன், சுவாத்திய மாக்கிறவன், றிசுக்குக் கொடுக்கிறவன் கிருபை செய்கிறவன் என்னும் ஆதரவைக்கொண்டும் அல்லாஹுதஆலாவைப் புகழ்வதுவேயாம்.

றஜாவுடைய பாடம் முற்றிற்று.

20-வது தௌபாவுடைய பாடம்.

வினா:—தௌபா வென்பது என்ன?

விடை:—தௌபா வென்பது பிழைபொருக்கத் தேடுதல் அதாவது,

அல்லாஹுத் தஆலா திருவுளமாயிருக்கிறுன். ஈமான் கொண்டவர்களே அல்லா அளவில் கலப்பற்ற தௌபாவாகத் தௌபாச் செய்யுங்களென்று எங்கள் நாயகம் நபி முஹம்மதுன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானுர்கள். நான் ஒரு நாளைக்கு நூறு விடுத்தம் தௌபாச் செய்கிறேன். நீங்களும் அதிகமாய்த் தௌபாச் செய்யுங்களென்றும், இன்னும் திருவுளமாயிருக்கிறுர்கள். தௌபாவாகிறது தண்ணீர்போல் ஒருவன் தௌபாச் செய்கிறது அவனுடைய வூத்தையை அந்தத் தண்ணீரால் கழுவப் படுவதுபோலும் அவனுடைய பாவத்தைக் கழுவப்படும் இன்னும் திருவுளமானுர்கள்.

நான் மிஹ்ருஜுடைய இரவில் கண்டேன் நரகத்துடையவர்களில் மிகுதியாகப் பெண்பிள்ளைகளை சுவர்க்கத்துடையவர்களில் ஆண் பிள்ளைகளை இந்த ஆண் பிள்ளைகளில் நரகத்துடையவர்களில் மிகுதியாக வாலிபர்களை சுவர்கத்துடையவர்களில்

மிகுதியாய்க் கிழவர்களை ஆனதால் ஆண்பிள்ளை களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் மிகுதியாகத் தௌபாச்செய்வது வேண்டியதாக இருக்குமென்றூர்கள்.

இன்னும் திருவுளமானுர்கள் ஒரு அடியான் கலப்பற்ற தௌபாவாகத் தௌபாச் செய்தால் அவனுடைய தௌபாவைத் திட்டமாக வேற்றுக்கொள்வான். அல்லாஹுத் தஆலா அடியார்களின் தௌபாவைக் கபூல் செய்கிறவனுக இருப்பதால் அடியார்கள் கலப்பற்ற தௌபாவாகத் தௌபாச் செய்தால் அந்தத் தௌபாவை அல்லாஹுத் தஆலா வேற்றுக்கொள்வான்.

வினு:-கலப்பற்ற தௌபாவென்றுரைப்பது என்ன?

விடை:-கலப்பற்ற தௌபாவென்றுரைப்பது ஐந்து பறுலு நிறைவேறும்படி தௌபாச் செய்வதாம். அதில்,

1-வது தான் செய்த பாவத்தை நினைத்துச் சலிப்பதும்,

2-வது இனிமேல் பாவம் செய்ய மாட்டேனென்று நற்கருத்து வைப்பதும்,

3-வது தௌபாச் செய்யு மந்த நேரம் பாவத்தை விட்டுக் கழன்றிருப்பதும்,

4-வது அல்லாவுடைய ஹக்கை யிறுப்பதும். இதற்கு மிதால், கலாவான தொழுகையை யிறுப்பது போல்,

5-வது மனிதர்களுடைய ஹக்கையிறுப்பதும், இதற்கு மிதால், களவெடுத்த பொருளை அப்பொருளுடையானுக்குக் கொடுப்பது போலும். இன்னும் மிதால் நாம் ஒருவனுக் கடித்தால் அவ்வடிபோ லவனைக்கொண்டு நமக்கு அடிக்கச் செய்வதுபோலவே இந்த ஐந்து பறுலுகளும் அமையவேணுமென் றுணர்க.

தௌபாவுடைய பாடம் முற்றிற்று.

21-வது பொதுப்பட முத்தலங்காரப் பாடம்.

வினு:—பொதுப்பட மூத்தலங்கார மென்ன ?

விடை:—முத்தொளிவான முஹம்மதுற் றசூல் சிற்ரும். அதாவது, அல்லாஹுத் தஆலா தன்னைக்கொண்டும் தன்னளவில் தன்பேரில் தன் நாட்டத்தில்தான் நாடித் தெளித்து வடித்துத் திருமணியாத் தன்னொளி யெவைக்கு முன்னொளியாய் முத்தினழகை வென்றதோரொளி முஹம்மதுற் றசூலழகை வெளியாக்கினுன்.

வினு:—முத்தொளிவான முஸ்தபா சையிதுல் முத்தகீன் சூறத்தென்ன, அதின் நிறமென்ன, அதின் சிரமெங்கே, அதின் பாதமெங்கே, அதின் உடலெங்கே அதின் உயிரென்ன ?

விடை:—அதின் சூறந்து முஹம்மதிய்யா, அதின் நிறம் சிவந்த வெண்மை, அதின் சிரம் அர்ஷின்மேல், அதின்பாதம் தஹ்தஸ்ஸருவின் கீழ், அதின் உடல் ஆலமனைத்திலும் காணப்பட்டவை அடங்கலும், அதின் உயிர் இஸ்ம் அல்லா, அல்லாஉடைய வுஜூதாயிருக்கும்.

வினு:—மூத்தொளிவான மூஸ்தபா சைய்யிதுல் மூத்தகீன் காட்சி என்ன ?

விடை:—தாத்தைக்கொண்டும், ஸிபாத்தைக்கொண்டும், அஸ்மாவைக்கொண்டும், அஃபாலைக் கொண்டும், வுஜூதைக் கொண்டும், இல்மைக் கொண்டும், நூறைக்கொண்டும், ஷுஹூதென்னும் காட்சியில் சைய்யிதுல் அவ்வலீன், சைய்யிதுல் ஆகிரீன் சைய்யிதுல்,மூத்தகீன் என்னும் மூத்தொளிவான முகம்மதுற் றசூல் அழகை நத்துவோர் காண்பார் காட்சி.

வினு:—ஈமானின் தலையென்ன, அதின் கல்பு என்ன, அதின் உடலென்ன, அதின் உயிரென்ன அதின் ஒளியென்ன, அதின் இருளென்ன, அதின்இன்பமென்ன, அதின்வளர்த்தியென்ன, அதின் கட்டளை யென்ன, அதின்உகப்பென்ன, அதின் பழமென்ன, அதின் இலையென்ன, அதின் தொலியென்ன, அதின் மூளை என்ன, அதின்வேரென்ன, அதின் வீடென்ன, அதின் தரிபாடென்ன ?

விடை:—தலை கலிமா தையிபு, கல்பு குறு ஆனேதல் உடல் திக்றுசெய்வது, உயிர் ஹக்கை வாஹூ து செய்வது, ஒளி உண்மை சொல்வது, இருள் பொய் சொல்வது, இன்பம் துப்புரவு வளர்த்தி சகாத்து கட்டளை ஹலாலை ஹலாலாக்குவது, ஹறுமை ஹறுமாக்குவது, உகப்பு, இல்மு, பழம் நோன்பு இலை தக்வா, தொலி வெட்கம், மூளை துஆவோதல், வேர் இஃலாஸு, வீடு மூஃமீனுடைய கல்பு, தரிபாடு தொழுகை.

வினு:—இந்த ஈமானென்னும் ஒளியாகிய வித்து எதுகொண்டு தழுக்கும், எதுகொண்டு பூர்க்கும், எதுகொண்டு காய்க்கும், எதுகொண்டு பழுக்கும், இதை யார் புசிப்பார்கள், இதை யார் புசியார்கள்

விடை:—இல்மு கொண்டு தழுக்கும், அமல் கொண்டு பூர்க்கும். இஸ்மும், அஸ்மாவும், முருகபாவும், முஷாஹதாவும், திக்றுங் கொண்டு காய்க்கும். மஅரிபா, சூபியா, உறூஜு நுசூல் காட்சி கொண்டு பழுக்கும். காமிலாகிய ஹகீகியாகிய இன்சான்கள் புசிப்பார்கள். மஜாசியாகிய ஹயவானுகிய காபிராகிய இன்சான்கள் புசியார்கள். இன்னும் புசிப்பவர்கள் நிஹுமத்தாகிய சுவர்க்க வீட்டிலும் புசிக்கார்கள். லஃநத்தாகிய நரக வீட்டிலும் தரிபடுவார்கள். புசிப்பவர்களே நிஹுமத்தாகிய சுவர்க்க வீட்டில் வீற்றிருந்து சதாகால சங்கை பெறுவார்கள்.

வினு:—புசிப்ப தென்பதென்ன ?

விடை:—புசிப்பதென்பது ஈமானென்னும் பேரின்பப் பந்த ஒளி முஃமீனுடைய கல்பென்னும் வீட்டில் ஆர்ப்பழவாகுதல் முளேத்துச் சரீர மென்னுமால முழுவதும் நிறைந்து வழிந்து முன்னல் வருகையில் அவ்வொளியின் சூறத்தைக் கண்டு முகமலர்ந்து அச்சந் தீர்ந்தாறுவதே புசிப்பதென்பது.

வினு:—ஈமானென்னும் பேரின்பப் பந்த வொளி எதுகொண்டு தழுக்காது. எதுகொண்டு பூர்க்காது, எதுகொண்டு காய்க்காது, எதுகொண்டு பழுக்காது.

விடை:—பூமி என்னும் கல்பில் ஒளியாலுண்டாகிய வித்தை இருளாகிய குபிரென்னும் உப்புநீர் ஊறக் சறளாகிய மேகமென்னும் நபுசு ஹவா வந்து மூடக் கரிகிப்போம் தழுக்காது.

திக்கிறு இல்லா, மூச்சினுலும், பிக்கிறு, இல்லாத பேச்சினுலும், ஹறுமான வுணவு புசிப்பதாலும், கண்ணுர நித்திரை கொள்வதாலும் பூர்க்காது.

இச்சை யென்னும் நபுசெழுந்து பட்சமென்னும் பூமியை நாடி மிச்சமில்லாப் பொருளேத் தேடி அச்சமாகிய மரணத்தை மறப்பதால் காய்க்காது.

மீளாவழி யென்னும் ஆகிரு லோகத்தையும் வாழாவழி யென்னும் நரகலோகத்தையும் சூருவழி

யென்னும் கியாமலோகத்தையும் நோாவழி யென்னும்சுவர்க்கலோகத்தையும் மறப்பதால் பழுக்காது

இன்னும் ஒளியால் வெளியாகிய ஹபீபு முஹம்மது முஸ்தபா அவர்களின் திருமுக தரிசனையைக் காண நாடாத பாவிகளும் றப்பாகிய ஹக்கு சுபுஹானஹூவத் தஆலாவுடைய திருலிகாவைக் காண நாடாத பாவிகளும் ஈமானிழந்து குபிரால் நிறைந்து அதாபில் புகுந்து அவதிபெறுவார்கள் ஓர் ஆர்ப்பளவாகுதல் ஈமானிருந்து அமலால் நிறைந்து ஹக்கின் கிருபையை யுகந்தவர்கள் நல்மாராயம் பெறுவார்கள்.

ஆமீனுமீன், யாறப்பில் ஆலமீன்.

போது முத்தலங்காரம் முற்றிற்று.

முற்பகுதி பாடம் இருபத்தோன்றும் முற்றிற்று.

1-வது அஹதிய்யத்துடைய பாடம்.

விஞ:—அஹதிய்யத்து வென்பது என்ன?

விடை:—அஹதிய்யத்து வென்பது ஒரு வனுயிருத்தல், லா துஐயின், அதாவது,

ஹக்குடைய மறுத்தபாவில் முந்தினதாக விருக்கும் அதற்கு அல்லாவுடைய ஹகீகத்து என்று பெயர் அவ்விடத்தில் கல்கு இல்லை ஹக்கு தன்னிலே தானுக விருந்தது இதற்கு குன்குதாத்து வென்றும், மஹ்லுதாத்து வென்றும், புகுத்து தாத்துவென்றும்,

தாத்துல் முதுலக்த வென்றும், மஸ்கூத்து அன் ஹூல் கதீமுல் அஃமாவென்றும் சொல்லப்படும்.

இதின் உள்ளமையை ஒரு காமிலான சைகை யடுத்து அவரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்வீராக ஏனென்ருல் இது வாய் மூடும் தலம் இரகசியமான விடமானபடியாலென்றது.

அஹதியத்துடைய பாடம் முற்றிற்று

2-வது வஹ்தத்துடைய பாடம்.

வினு:—வஹ்தத்து வென்பது என்ன?

விடை:—ஒருவன் தனித்திருத்தல், தஐய்யிநுல் அவ்வ்வல். அதாவது,

இரண்டாவது மறுத்தபா அவ்விடத்தில் முஹம்மதுன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுடைய ஹகீகத்து உள்ளமை பிரிந்தது இவ்விடம் அஃஸீனுல் அஷியான் தாபிது வென்றும் சொல்லப்படும். இதின் உள்ளமையை ஒரு சயிக்கனையால் சொல்லவேண்டியது. அச்சயிக்கனை என்னவென்று ஒரு காமிலான இன்சானைக்கண்டு கேட்டுப்பெறுவீர்களாக, ஏனென்ருல் இது வாய்மூடும் தலம் புதையலானவிடம் இதை சயிக்கனையால் கண்டு கொள்ளக் கூடிய ஒக்கான தலமென்றுணர்க.

வஹ்தத்துடைய பாடம் முற்றிற்று.

3-வது வாஹிதிய்யத்துடைய பாடம்.

வினு:—வாஹிதிய்யத் தென்பது என்ன?

விடை:—வாஹிதிய்யத் தென்பது ஒருவன் சேர்ந்திருத்தல் தஜய்யிநுத்தாநீ. அதாவது,

இது மூன்ருவது மறுத்தபா. இவ்விடத்தில் ஆதமுடைய ஹகீகத்து உள்ளமை பிரிந்தது. இவ்விடத்தில் ஹக்குத் தஆலா தன்னுடைய தாத்தையும் ஸிபாத்தையும், மௌஜூதாத் துவனைத்தையும் தன்னுடைய இல்மெனும் அறிவில் வெவ்வேருய்ப் பிரித்தறிந்ததாயிருக்கும். இவ்விடத்தில், அன்நூநுல் அஷியான் காரிஜாவென்றும் சொல்லப்படும். இவ்விடத்தில் மட்டில்லாமல் தொட்டுக்காட்டுவது வேண்டியதாயிருக்குமென்று அறியவும். ஆகையால் ஒரு காமிலான சைகைத் தேடியவரிடம் மட்டில்லாமல் தொட்டுக் காட்டுமென்று கேட்டறிவீர்களாக: ஏனென்ருல் இது வாய் மூடும் தானமும் சயிக்கனையாற் கேளாமல் பேசு மிடமும் மட்டிலடங்காமல் தொட்டுக் காட்டும் தலமுமாக விருப்பதுடன் றகுமானின் கிருபையால் நிறைந்திருக்குதென உணர்க.

வாஹிதிய்யத்துடைய பாடம் முற்றிற்று.

4-வது ஆலம் அறுவாஹுடைய பாடம்.

வினா:— ஆலம் அறுவாஹு வென்பது என்ன?

விடை:— ஆலம் அறுவாஹு வென்பது றூஹு களுடைய ஆலம மறைவாய் றூஹுகளாயிருந்த கோலம் அதாவது

றூஹுகளைப் படைத்த ஆலம் அதுவது வான ரூபமாயிருக்கும். அது பதிமூன்று வடிவு கொண்டதாயிருக்கும். அதில்,

1-வது உலுல் அஸ்மிகளுடைய அறுவாஹு ஆகவிருக்கும்,
2-வது முறுசலீன்களுடைய அறுவாஹு,
3-வது அன்பியாக்ககளுடைய அறுவாஹு,
4-வது அக்தாபுகளுடைய அறுவாஹு,
5-வது ஔலியாக்களுடை அறுவாஹு,
6-வது உலமாக்களுடைய அறுவாஹு,
7-வது ஸாலிஹீன்களுடைய அறுவாஹு,
8-வது பாஸிக்கீன்களுடைய அறுவாஹு,
9-வது காபிரீன்களுடைய அறுவாஹு,
10-வது ஹைவான்களுடைய அறுவாஹு,
11-வது நபாத்துகளுடைய அறுவாஹு,
12-வது ஜமாத்துகளுடைய அறுவாஹு,
13-வது துற்றத்துல் பைலாவாக இருக்குமென்று உணர்க,

ஆலம் அறுவாஹுடைய பாடம் முற்றிற்று.

5-வது ஆலம்மிதாலுடைய பாடம்.

வினு:—ஆலம் மிதால் என்றது என்ன?

விடை:—தோற்றுதலுடைய கியாலியான சூறத்துடைய ஆலம். அதாவது,

வானமும், மலக்குகளும், சுவர்க்கமும், அதின் நிஃமத்துகளும், இன்னும் பதிமூன்று வடிவுடைய அறுவாஹுக்கெல்லாம் மாதிரியான ஆலம். அதாவது கண்டிப்பைக் கண்டிப்பாகவும், மிருதுவை மிருதுவாகவும் காண்பிக்கிறது.

ஆலம்மிதாலுடைய பாடம் முற்றிற்று.

6-வது ஆலம் அஜ்சாமுடைய பாடம்.

வினு:—ஆலம் அஜ்சா மென்பது என்ன?

விடை:—ஆலம் அஜ்சா மென்பது கண்டிப்புகளுடைய ஆலம். அதாவது,

மரமட்டைகளும் மற்றும் தோற்றுகிற வஸ்துக்களனைத்தும் அர்ஷுமுதல் தருத்தஸ்ஸருஅளவிலும் உள்ள கண்டிப்பான ஆலம். அது பதிமூன்று வகையுண்டும்.

1-வது அர்ஷு,

2-வது குர்ஷு,

3-வது பலக்குஸ்ஸுஹல் என்கிற ஏழாம் வானம்,
4-வது பலக்குல் முஷ்தரியென்கிற ஆரும் வானம்,
5-வது பலக்குல் மிற்றீகு வென்கிற ஐந்தாம் வானம்,
6-வது பலக்குஸ் ஷம்ஷு என்கிற நாலாம் வானம்,
7-வது பலக்குஸ்ஸுஹறு வென்கிற மூன்ரும் வானம்,
8-வது பலக்குல் அதாரிது வென்கிற இரண்டாம் வானம்;
9-வது பலக்குல் கமரியென்கிற முதலாம் வானம்,
10-வது நெருப்பு மண்டலம்,
11-வது காற்று மண்டலம்,
12-வது தண்ணீர் மண்டலம்,
13-வது மண் மண்டல மென்றுணர்க.

ஆலம் ஆஜ்சாமுடைய பாடம் முற்றிற்று.

7-வது ஆலமின் சானுடைய பாடம்.

வினு:—ஆலமின்சா னென்பது என்ன?

விடை:—ஆலமின்சா னென்பது ஆலமனைத்திலும் நிறைவாகிய இன்சான்களாகும். அதாவது,

இன்சானைப் படைத்த ஆலம் அது கண்டிப்பையும் மிருதுவையும் காண்பிக்கிற ரூபம். அது வொன்ருய்க் கூடிய மறுதபா நாற்பதாக விருக்கும். இப்போது சொல்லப்பட்ட நாலு ஆலமும் கியாநிய்யத்தாகிய புதுமையாகிய மறுத்தபாவாயிருக்கும்.

முந்தின மூன்று மறுத்தபாவும் இலாஷியத்தாகிய பூர்வமான மறுத்தபாவாக விருக்கும்.

இன்னும் மறுத்தபா இன்சானுல் காமில் என்றும், இன்சான் காமிலுடைய மறுத்தபா இந்த மறுத்தபாதானாகுமென்றும் மேற்சென்ன மறுத்தபாவில் மறுத்தபா அஹதிய்யத்துத் தவிர மற்றுள்ள ஐந்து மறுத்தபாவும் கூடியிருக்குமென்னத் தக்கதாகிய மறுத்தபாவாகுமென் றறியவும்.

ஆலமின்சானுடைய பாடம் முற்றிற்று.

8-வது இகுதிபா றுஸ்ஸஹாதுடைய பாடம்.

வின:—இகுதிபா றுஸ்ஸஹாது என்பது என்ன?

விடை:—இகுதிபாறுஸ் ஸஹாது வென்பது தரிசிக்கும் கவனிப்பு. அதாவது,

வுஜூது, இல்மு, நூறு ஸஹாது என்று நாலு இகுதிபாறு உண்டும். அதில் வுஜூது வென்கிற ஹக்கு, அறிவென்கிற அஷியான், தாபிதாவென்னும் தஅய்யுனாத் தென்கிற இன்சானுடைய சிற்றுலே வெளியானது கொண்டு நூறு முஹம்மதுன்ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுடைய ஒளிவு பிரிந்தது.

இன்னும் கவனிப்பு.

அந்த ஒளிவில் ஜலாலும் ஜமாலுமுண்டு. அந்த ஜலாலும் ஜமாலும் கூடி ஸாஹறிது என்னும் தரிசனையில் ஆலம் அறுவாஹறு, ஆலம் மிதால், ஆலம் அஜ்சாம். ஆலம் இன்சான் பிரிந்தது.

கவனிப்பு இன்னுமொரு மஅனுவின்படி இந்த நாலும் நெருப்பு, காற்று, மண், தண்ணீரென்றும், நாலு அனுசிரு யிருக்குமென்றும், இந்த நாலும் மேற்சொன்ன வுஜூது, இல்மு, நூறு ஸாஹறிது, என்னும் பாத்திஞகிய உள்ரங்கத்துக்கு லாகிறு வென்னும் வெளியரங்கமாயிருக்கும். இந்த லாகிறு வென்னும் வெளியரங்கத்துக்கு இன்சானென்றும் அந்த பாத்திரனுகிய உள்ரங்கத்துக்கு றஹ்மானென்றும் சொல்லப்படும்.

இந்த றகுமானென்ற வுஜூது இன்சானுடைய சிற்ருகிய தன்னுடைய இல்மென்கிற கண்ணுடியில் வெளியானது கொண்டு முஹம்மதுன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய சூறத்து ஆகிய ஒளிவு பிரிந்தது. அந்த ஒளிவில் தன்னை ஸாஹறிதென்னும் தரிசனை செய்தது கொண்டு அறிந்த ஸூறத்துக்கு ஜிசுமு, நபுசு, அக்லு, றூஹு, கல்பு, லதீபு பிரிந்தது.

கவனிப்பு.

ஜிசும் என்றது மண். நபுசென்றது தண்ணீர், அக்லு என்றது காற்று, றூஹு என்றது நெருப்பு,

கல்பு என்றது நாறு என்னும் ஒளிவு, லதீபு என்றது சிற்று, இந்த சிற்று என்றது தாத்து, நாறு என்றது ஒளிவு, ஸிபாத்து இந்த இரண்டும் உட்கோலம்.

கவனிப்பு.

நெருப்பு, காற்று, மண், தண்ணீர், என்றது றாஹு, அக்லு, ஜிசுமு, நபுசு ஆக இருக்குமென்றுணர்ந்து கவனித்து ஸுலூஹு து செய்வீர்களாக.

இகுதிபாறுஸ் ஸுலூஹு துடைய பாடம் முற்றிற்று.

9-வது சனன்ஹம்துடைய பாடம்.

வினா:—சனன்ஹம்து வென்றது என்ன ?

விடை:—சனன்ஹம்து வென்றது படைப்புகளின் அமைப்பு. அதாவது,

ஸீன், நூன், நூன், ஹே, மீம், தே. என்ற இந்த ஆறு ஹறுபினால் வெளியாகினது.

1-வது ஜிசுமாவது துருபு,
2-வது நபுசாவது மாஉ,
3-வது அக்லாவது ஹவாஉ,
4-வது றாஹாவது நாறு,
5-வது கல்பாவது நூறு,
6-வது லதீபாவது சிற்று,

ஆகையால் துருபு, மாஉ, ஹவாஉ, நாறு, நூறு, சிற்று என்ற இந்த ஆறையும் ஆரிபீன்கள் சனன்ஹம்து என்ற ஆறுஹறுபாக்கினார்கள். இதில்,

சிற்று என்னும் தாத்தும், நாறு என்னும் ஸிபாத்தும், இது இரண்டும், லதீபாகிய உட்கோலம், மற்ற நாறு, ஹவாஉ, மாஉ, துருபு, என்றது றூஹூ, அகுல், நபுசு, ஜிசும், இது நாலும் தபிஅத்தாகிய வெளிக்கோல மென்றறிந்துணர்வீர்களாக.

இன்னும் இந்த சனன்ஹம்து என்கிற றம்சை உறூஜூ, நசூல் உடைய ஹாலாக்கினார்கள். அதெப்படியெனில் இந்தத் தரிசனையில் மண் என்கிற ஆலம் இன்சானை விட்டும், தண்ணீரென்கிற ஆலம் அஜ்சாமை விட்டும் காற்று என்கிற ஆலம் மிதாலை விட்டும், நெருப்பு என்கிற ஆலம் அறுவாஹை விட்டும், ஒளிவு என்கிற ஆலம் மலக்கூத்தில் அதுனாவைவிட்டும், சிற்று என்கிற ஆலம் மலக்கூத்தில் அஃலாவிலேறினால் ஜிசுமு, நபுசு, அக்லு, றூஹூ, கல்பு, லதிபு, நாசூத்து, மலக்கூத்து, ஜபறூத்து, லாஹூத்து, மனம், புத்தி, அகங்காரம், சித்தம்இந்த நாலும் பனாவாகி, லதீபாவென்னும் இல்மிலே தன்னையறிந்து உஜூதென்கிற றப்பை அறிந்தால், ஜிசுமென்கிற அனாநிய்யத்திலே ஹூவியத்து பொதிந்த மகாமெல்லாம் தரிசனையாகுமெனக் காண்பீர்கள்.

சனன்ஹம்துடைய பாடம் முற்றிற்று.

10-வது மகாமாத்துகளுடைய பாடம்.

வினா:—மகாமாத்துகளென்பது என்ன?

விடை:—மகாமாத்துகளென்பது நிற்குந் தானங்கள் அதாவது,

ஏழு நபுசுண்டும், ஏழு மகா மூண்டும், ஒவ்வொரு மகாம்களிலும் ஒவ்வொரு நபுசின் குணமூண்டும், ஒன்ருென்ருய்க் கண்டு சென்றேறிக் காட்சிகளைக் கண்டுணர்ந்து மகிழ்வீர்களாக. அந்த மகாம்களாவது:

1-வது அம்மாரு நபுசுடையவனுக்கு நிற்குந்தானம் நாசூத்துமகாம்,

2-வது லெவ்வாமா நபுசுடையவனுக்கு நிற்குந்தானம் மலக்கூத்துமகாம்,

3-வது முல்ஹிமா நபுசுடையவனுக்கு நிற்குந்தானம் ஜபறூத்து மகாம்,

4-வது முதுமஇன்ஞ நபுசுடையவனுக்கு நிற்குந்தானம் லாஹூத்து மகாம்,

5-வது ருலிய்ய நபுசுடையவனுக்கு நிற்குந் தானம் ஹாஹூத்து மகாம்,

6-வது மறுலிய்யா நபுசுடையவனுக்கு நிற்குந்தானம் பாஹூத்துமகாம்,

7-வது காமிலா நபுசுடையவனுக்கு நிற்குந்தானம் ஜம்ஹூத்து மகாம் என்றுணர்க.

இப்படியே படிப்படியாய்ச் சென்றேறி யந்தந்த மகாம்களிலாகி இலாஹிய்யத்தாகிய பண்புடைய காட்சிகளைக் கண்டு அப்படியே நீங்காத நிலை நின்று காமிலாகி ஹக்கின் மூஹப்பத்தைப் பெறுவீர்களானல் நீங்காத அன்பும் சதாகால சங்கையும் நீடூழி வாழ்வும் பெறுவீர்களாக. ஆமீன்.

மகாமாத்துகளுடைய பாடம் முற்றிற்று.

11-வது அதுக்காறுகளுடைய பாடம்.

விஞ:—அதுக்காறுகளென்பது என்ன?

விடை:—அதுக்காறுக ளென்பது திக்றுகளாம். அதாவது,

ஏழுவைகயுண்டும். அதில் ஐந்துவகை பிரிவுகளாகவும், இரண்டுவகை மொத்தமாகவும், பிரிவில்லாமலும் வருமென்றுணர்க.

1-வது நாசூத்து அதற்கு மகாம், நாவு அதற்கு அஸ்ல், மண், அதாகிறது ஆதம் மலக்கு ஜிபுரீலு, திக்று, ஜெல்லி, லாஇலாஹ இல்லல்லாவென்று இஷாவுக்குப் பின்னுலும் சுபுஹுக்குப் பின்னுலும் நூற்றியறுபத்தாறு தரம் செய்யவும்

2-வது மலக்கூத்து, அதற்கு மகாம் கல்பு, அஸ்ல், தண்ணீர், அதாகிறது ஹயாத்து, அதாகிறது முஹம்மதிய்யா, மலக்கு, மீக்காயில், திக்று, கல்பி அல்லாவென்று இஷாவுடைய நேரத்தில் நூறு தொடக்கம் ஆயிரமளவும் செய்யவும்.

3-வது ஜபறூத்து தலம் இரண்டு மார்புக்கிடையில் அஸ்ல்காற்றுமலக்குஇஸ்ருபீல்திக்றுறூஹு அதாகிறது அல்லா அல்லா வென்று நூறு தரம் அல்லது ஆயிரமளவும் இஷாவுக்குப் பின்னுல் அல்லது தஹஜ்ஜத்துடைய ஒக்தில் செய்யவும்.

4-வது லாஹூத்து, தலம், கருஈால், அஸால், நெருப்பு, மலக்கு, இஸ்ருஈல், திக்று, சிற்றி, ஹூ, ஹூ, என்று நாறுதரம் தஹஜ்ஜத் துடைய ஒக்தில் செய்யவும்.

5-வது ஹாஹூத்து தலம் இரண்டு புருவத்திடை யில் அது ஹாஹூடைய தலம், அஸால்தஜெ ல்லியுடையபிரகாசம், திக்று, கல்பு, ஹூ, ஹூ என்று ஒவ்வொரு மூச்சிலும் விடாமல் தஹஜ் ஜத்துடைய ஒக்தில் செய்யவும்.

6-வது மகாம், பாஹூத்து இடம், மறைவாகியதலம், அமைவாகிய இடம் ஒளிவாகிய அஸால், வாய் மூடிப்பேச வேண்டிய தானம், இது ஹகீகத்து முஹம்மதிய்யா, திக்று, யாகையூம், ஒக்து அந்த நாட்டமே யெந்த ஒக்திலும் தஹஜ்ஜத்திலும்,

7-வது ஜம்ஹூத்து, மகாம், இவ்விடம் தம்ஷீம், என்னும் ஒருமையாய்ச்சேர்மானமாகிய ஜம்உ, இதை ஆராலும் எத்திக்கொள்ள ஏலாத இடம், வாயால் நவிலக்கூடாத சிற்று ஹகீகத்து அல் லா, திக்கிறு, யாகஃஹாற், ஒக்து எந்த நேர மும் அந்த ஹாலிலே தஹஜ்ஜத்திலும்.

ஆனுல் இந்த அதுக்காறுகளென்னும் திக்று களையும், மகாம்களையும், இதின் சிற்றுகளையும், ஒரு நிரப்பமான கல்பு ஹாலிருன சைகிடத்தில் இதின் மஅனுக்களைப் பிரித்தறிவீர்களாக.

அதுக்காறுவுடைய பாடம் முற்றிற்று.

12-வது தன்ஸீஹுடைய பாடம்.

வினு:—தன்ஸீஹு என்பது என்ன ?

விடை:—தன்ஸீஹென்பது துய்தாக்குதல். அதாவது,

அல்லாஹுத் தஆலாவுக்குத்தொடக்கம் முடிவு, ஆண்மை, பெண்மை, நசல், மிடை., ஊண், உறக்கம், அக்கம், பக்கம், கீழ், மேல், திசை, நிறம், ஒப்பு, உவமை இவைபோலொத்த தெவைகளிலும் நிகர் சொல்லப்படாத அரூபமென் றறியவும் இன்னும், அல்லாஹுத் தஆலாவை யகப்பார்வையும் வெளிப் பார்வையும், எத்திக்கொள்ளமாட்டாது. அவைகளை யவனெத்திக்கொள்ளுவான் என்று, குறுஆனில் வந்தபடி தாத்துடைய பிறத்தினுலே அவனுக்குக் கோலமும், மட்டும், ஊணும், குடிப்பும் இவைபோலொத்த தெவைகளும் அவனுக்கு இல்லையென்றும், இன்னும் அவனுக்கு, மாதா, பிதா, இல்லை, இச்சையில்லை, கண்டிப்பில்லை, இவைகள்போலொத்ததெவைகளும் அவனுக்கு இல்லை யென்று துய்தானவனென்றும், தன்ஸீஹைத் தரிபடுத்த வேண்டியதாயிருக்குமென்றறிக.

தன்ஸீஹின் பாடம் முற்றிற்று.

13-வது தஸ்பீஹுடைய பாடம்.

வினு:—தஸ்பீஹு வென்பது என்ன?

விடை:—தஸ்பீஹு வென்பது ஒப்பாக்குதல். அதாவது,

எங்கள் ஆண்டவனில் நின்றும் ஒன்ருகிய திரிசனைகள் உங்களிடத்தில் வந்து விட்டது. அதையொருவன் தரிசித்தால் அவனுக்கு இருலோகத்திலும் பாக்கியம். அல்லாவிட்டா லவன்பேரில் கேடாகும். குறுஆனில் வந்ததுபோல் ஸிபாத்துடைய பிறத்தினுல் அவனுக்குள்ளமையான மட்டு முதலியவையுண்டும். இதைத் தரிசிக்க வேண்டுமானுல் அவனுடைய பார்வையைக் கொண்டு பார்க்கிறவனுகவும் அவனுடைய கேள்வியைக் கொண்டு கேட்கிறவனுகவும் அவனுடைய பேச்சைக்கொண்டு பேசுகிறவனுகவும் இதல்லாது எல்லாம் உனக்கில்லை யென்று நபிச் செய்வது உனக்கு வேண்டியதாயிருக்கும். இது தான் தஸ்பீஹு வென்று நிர்ணயம் கொள்வதுவாயிருக்கும் இதின் வகை அல்லாஹுத் தஆலாவுக்கு இணைவையாமலும் அவன் தஸ்பீஹாகி வந்து விட்டானென்று நாடாமலும் தஸ்பீஹு ஆக்க வேண்டியது இவ்விடம் மனதில் அகப்படாத இல்முடைய தலம் ஹால் சறுகுமிடமுமா யிருப்பதால் அப்படி ஹால் சறுகாமல் அல்லாஹுத் தஆலாகார்த்துக்கொள்வானுகவும். இன்னும் ஷிம்மத்தால் ஈமா

னைக் கட்டிப்பிடித்தும், ஒருமையாய் நிற்கவேண்டிய நிலையுமாமென்றுணர்க.

அதெப்படியென்னில் அல்லாஹு தஆலா தன்னுடைய குத்றத்தினுல் வெளியாகினுன். இன்னுமவன் தன்னுடைய குத்றத்தினுலே ஸிபாத்தை வெளிப்படுத்தினுனென்றும் நிர்ணயம் கொள்வாயாக

இன்னும் குறுஆனில் வந்ததுபோல் ஸிபாத்துடைய புறத்தினுல் அவனுக்குள்ளமையான மட்டு முதலியவையுண்டும் என்றது. ஸிபாத்துடைய புறத்தினுலே யுண்டுமென்று நிர்ணயம் கொள்வாயாக.

இன்னும் அவன் தன் குத்றத்தினுல் வெளிப்படுத்திய ஸிபாத்திலொன்றை அவன்தானென்று மட்டு முதலியவை யிட்டு நிர்ணயம் வையாதே.

ஏனென்ருல் குறுஆனில் மட்டு முதலியவை உண்டென்றது. அல்லாஹு தஆலாவுக்கு தஜெல்லியுடைய புறத்தினுலே தரிக்கும் தானங்களில் வெளியாகிய மட்டு முதலியவை யொழிய அவனல்ல, வென்று நிர்ணயம் வைப்பாயாக.

இன்னும் குறுஆனில் மட்டு முதலியவை யவனுக்குண்டென்று வந்துவிட்டதே. அதை அவன் தானென்று நிர்ணயம் வைத்தால் தின்பது, குடிப்பது எல்லாம் அவனுகவே யாகும்.

அப்படி நிர்ணயம் கொண்டால் அகாயிது, என்ற அல்லாஹு தஆலாவுக்கு வாஜிபான இரு

பது சிபத்துக்கும் மாற்றமான முஷ்தஷீலான சிபத்தை ஒப்பிட்டவனுகுவான். ஆகையால் இல்லாமை, அபூர்வம், குடிப்பு, மட்டு, திட்டம், மௌத்து இது போலொத்த தெவையுமில்லையென் றுணர்கவும்.

தஸ்பீஹுடைய பாடம் முற்றிற்று.

✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

14-வது தன்ஸீஹு மஃலுடைய பாடம்.

வினு:—தன்ஸீஹு மஃலு என்பது என்ன?

விடை:—தன்ஸீஹு, மஃலு வென்பது கலப்பற்ற தன்ஸீஹு. அதாவது,

தன்ஸீஹு வென்பது அரூபம். தஸ்பீஹு வென்பது ரூபம். தன்ஸீஹு மஃலு வென்பது ரூபா அரூபம் எனக் கருதவும். இது ஹகீகத்து முஹம்மதுயாவில் வெளியான பிறத்தினுலாயிருக்கும்.

ஹகீகத்து முஹம்மதிய்யாவில் வெளியான பிறத்தினுலாயிருக்கு மென்றது. அல்லாவுக்கும் கல்குகளுக்கும் நடுவாய் நாயகம் நபி முஹம்மதுன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய ஒளிவு. அவன் இல்மிலே மறைந்திருந்தது பின்பு எல்லா வஸ்துக்களையும் படைக்க முதலே அல்லாஹுத் தஆலா நபி முஹம்மதுன் ஸல்லெல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஒளிவை படைத்தான்.

பின்பு அந்த ஒளிவைக்கொண்டு எல்லாவஸ்துக்களே யும் படைத்தான் கவனிப்போம் இதைக் கொண்டும் நபி முஹம்மதவர்கள் கல்குகளுக்கும் ஹக்குக்கும், நடுவாகி விட்டார்களென்ருயிற்று. அவ்வகை எப்படி யெனில் ஹக்குடைய இல்மில் மறைவாயிருந்த படியால் அரூபியில் ரூபியாகவும் இன்னும் ஹக்குடைய இல்மில் வெளியாகிய ஹகீகத்து முஹம்மதிய்யா வென்ற ஒளிவைக் கொண்டனைத்தையும் படைத்தபடியால் ரூபியில், அரூபியாகவும்; ஆயிற்று ஆனதால் அரூபா ரூபமென்ற தன்ஸீஹு மஃலாஹு மென்றறிவோம் ஆகையால் முன் சொன்ன தன்ஸீஹும் தஸ்பீஹும் ஹக்குத் தஆலாவுக்கு லாயக்காண பிறத்திஞல் ஒன்று சேர்ந்தது தன்ஸீஹுமஃலு வென்ருகும்.

வினு:—இது மூன்று எப்படி யொத்தது?

விடை:—முந்தினது அரூபம், உபயோக மற்றது, பிந்தினது ரூபம், மோசமானது, மூன்ருவது ரூபா அரூபம், வேண்டியது ஆகிய விப்படி யொத்தது.

வினு:—இதை யெப்படிக்காண்போம்?

விடை:—முந்தினதையும் பிந்தினதையும், விடாமல். வேண்டியதாக்கி மூன்ருவதைத் தரிபடுத்திக் காண்போம். அதாவது,

நம்முடைய றூஹும் நம்முடைய ஹயாத்தும் நம்முடைய சடலமும் அல்லாஹுத் தஆலாவுடைய இல்மில் மறைவாயிருந்தபடியால் இது நம்

மூடைய தல்ல அல்லாவுடையது என்றும் ஒருமை தௌஹீதைக்கொண்டு பற்றுதலாய் நத்துதலாயுற்று ணர்ந்து காண்போம். அதாவது,

லைஸ கமிதிலிஹி ஷைஉன்.

கண்ணிகள் ஞான நிலை.

காபுதான் லாயிசாய் கலந்திருக்கும் வேளைதனில்
மாபீஹீ தஸ்பீஹாய் வணங்குநா ளென்னாளோ.

(பொருள்) காபுக்கு மஅனா இல்லாதிருந்தால் தன் ஸீஹாதாத்து.

மின்னொளிரும் காபதற்கு விதுவும் மஅனாவெடுத்து
தன்னொளிவில் தஸ்பீகைத் தரிக்கும்நாளென்னாளோ।

(பொருள்) காபுக்கு மஅனாவைத்தால் தஸ்பீஹா ஸிபாத்து.

தன்ஸீஹாம் தஸ்பீஹாப்தன் ஸீஹா மஃலதுவும்
இன்சானில் நின்று இலங்கும் நாளென்னாளோ

(பொருள்) தன்ஸீஹைக் கொண்டும் தஸ்பீஹைக் கொண்டும் தன்ஸீஹா மஃலாய் தன் கல்பில் தரிப்படுத்தி வைத்திலங்குவதே யென்னாளென்றவாறு.

இப்படியே யெங்க ளிருதயத்திலே நினைந்து
இப்புவியிலிம் மஃலிலிருந்து மறைந்திடுவோம்,

(பொருள்) மேற் கண்டபடி தன்ஸீஹா மஃலைகல்பில் தரிபடுத்தி அம்மஃலில் சொக்கிடு வோமென்றவாறு.

தன்ஸீஹாமஃலுடைய பாடம் முற்றிற்று.

15-வது தஜெல்லியாத்துடைய பாடம்.

வினு:—தஜெல்லியாத்து வென்பது என்ன?

விடை:—தஜெல்லியாத் தென்பது வெளியாகும் வகை, அதாவது,

நாசூத்து மகாமுடையவனுக்கு இருளியத்தாகிய திரைகள் தோற்றும். அது பூமியும் பூமியிலுண்டான வஸ்துகளனைத்தும் போலும். மலக்கூத்து மகாமுடையவனுக்கு நூறிய்யத்தாகிய திரைகள் தோற்றும். அது வானமும், வானத்திலுண்டாகிய வஸ்துகளனைத்தும் போலும். ஜபறூத்து மகாமுடையவனுக்கு நபிமார்கள், ஒலிமார்கள், செய்குமார்களுடைய றூஹுகள் தோற்றும், அது றூஹுல் அமீன் றூஹு சுல்தானைப் போலும்.

இனி லாஹூத்து மகாமுடையவனுக்கு அஷியான் காரிஜா வென்கிற ஹகீகத்தாகிய இன்சானின் சிற்று தோற்றும் அது நாம் அன்னிய்யத்து கைரிய்யத்தை விட்டிழந்து ஹுவியத்து பகாவாகவெளியாகிறது. இனி, ஹாஹூத்து, பாஹூத்து, ஜம்ஹூத்து என்னும் மகாம்களில் அஷியான் தாபிதாவின் வகைகள் தோற்றுமென்றறிவீர்களாக. இது,

வாய்மூடும் தலமும், வாய்மூடும் இல்மும், கண்ணுற் சையிக்கனை காட்டிய இல்மும் நாவால் இன்னதென மொழியாமல் கல்பால் உற்றுணரும். இல்மு

மாக விருப்பதால் தக்க குருவைத்தேடி தகுமாய் விளங்கு வீர்கள். மிக்க சிறியோர்க்கும் மெல்லியர்க்கும் வீணர்க்கும் கல்வியற்ற கசடருக்கும் குருவற்ற கூதறைக்கும இதின் மஅனுவை விளக்காதே.

ஏனென்ருல் பொற்பதியிலின்மை இப்புவியில் லேசாகக் காண்பார்கள். தக்க முஃஸ்லீம்கள் தகுமென வே யிவ்வறிவை மிக்க புவிமீது வேண்டி யமல் செய்வார்கள்.

ஏழைக்குமோர் துஆ ஏந்துமென வேண்டினேன்.

தஜெல்லியாத்துடைய பாடம் முற்றிற்று.

16-வது பஸுலுல் அதுக்காறுடைய பாடம்.

வினு:—பஸுலுல் அதுக்காறுக ளென்பது என்ன ?

விடை:—பஸுலுல் அதுக்காறுக ளென்பது திக்று களின் வரிசைகளாகும், அதாவது,

அல்லாஹுத் தஆலா திருவுளமாயிருக்கிருன். ஈமான் கொண்டவர்களே அல்லாஹுத் தஆலாவை அதிகமாய்த் திக்று செய்து கொள்ளுங்கள் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானுர்கள்.

ஜௌத்திதா ஈமானுக்கும் பிதிக்ரில்லா

என்று உங்களின் ஈமானை அல்லாஹுத் தஆலா வைத் திக்று செய்வது கொண்டும் புதிதாக்கிக்கொள் ளுங்கள் என்று.

ஷிக்காயதுஸ்ஸாலிகீனில் ஒருவர் பேசி வரு கிறார். தான் கேள்விப்பட்டதாக ஹதீதுகள் வந்தி ருக்கிறது ஒருவன் (70,000) தரம் லாஇலாக இல்லல் லாஹு வென்று திக்று செய்து வைத்திருப்பானே யானால் அவனை நரகத்தைவிட்டும் உரிமையாக்கப் படுமென்றும், அதைச் சோதிக்கிறதற்காக அவர் தனக்கு எழுபதினாயிரம் தரம் திக்று செய்து வைத் துக்கொண்டு தன் இனபந்துகளுக்காக (70000) தரம் செய்து வைத்திருந்தார்.

இப்படியிருக்கையில் அவரை யொருவர் விரு ந்துக்கழைத்தார் அவர் அங்கே போனார் அந்த மஜ் லிசில் ஒரு மனிதன் கஸ்பு கருமாத்துடையவர் இருந்தார் அவர் தன் தாய் நரகத்திற் கிடந்து அவ திப் படுகிறாளென்று கஸ்பால் கண்டு கத்தி அழு தார். அதை யிவர் கண்டு தான் செய்துவைத்திருக் கும் (70,000) திக்றையும் அம்மனிதனின் தாய்க்கு உடனே ஹதியாச் செய்தார். அந்த வுடனே அழுத மனிதன் சந்தோஷமாகி என் தாயார் சுவர்க்த்தி லிருக்கிறா ளென்று கூறி முகமலர்ந்தார். இதினால் அறியலாயிற்று ஒருவன் (70000) தரம் திக்று செய்து வைத்திருப்பானே யானால் அவனை நரகத்தை விட் டும் கலாஸாகப்படுமென்ற அடையாள மாயிற்று.

இன்னும் இறுசாதில் வருகுது கஸ்ஸாலி இமாம் கூறினார்கள் ஔலியாக்களுடைய மறுத்தபா எத்துறது எல்லாம், எந்நேரமும் திக்று செய்துகொண்டு வருவதா லென்ருர்கள். ஆனல் திக்று செய்வதால் எத்துகிற தறஜாக்கள் எவ்வளவென்று சொல்ல முடியாது. ஆகையால் இயன்ற மட்டும் திக்றை அதிகப்படச் செய்வீர்களாக.

பலுலுல் அதுக்காறுடைய பாடம் முற்றிற்று.

17-வது இறுபானுல் அறுவா ஹூஹுடைய பாடம்.

வினு:-இறுபானுல் அறுவாஹூஹு வென்பது என்ன?

விடை:-இறுபானுல் அறுவாஹூஹு என்பது றூஹூகளை யறிவது. அதாவது,

இன்சானுடைய ஜடத்தில் ஐந்து றூஹூஹுண்டும். அதில்,

1-வது றூஹூஹுல் குதுசி, அதை றூஹூஹுல் அஃளம் என்றும், அல்லாவுடைய அஸ்மாவென்றும், முகம்மது வென்றும் சொல்லப்படும் இதை எத்தினவர்களுக்கு சுவர்க்கமும் லிகாவும், விலாயத்தும் எத்திவிக்கும்

2-வது றூஹூஹு சுல்தான் அது அல்லாஹுத் தஆலா குறுஆனிலே சொன்னதுபோலே 'அது

றூஹுல் குதுசிக்குண்டான தரம். அது பாதிஞகிய ஹயாத்து அதுக்கு மகாம் லாஹூத்து

3-வது றூஹுல் அமீம் அது எதுபோலவானுல் அல்லாஹுத் தஆலா குறுஆனிலே சொன்னதுபோல் றூஹு சுல்தானுக்குள் தரம் அதுடைய மகாம்ஜபறூது என்று சொல்லுவார்கள்,

4-வது றூஹு நாமிய்யாது அதை றூஹுற்றவானென்றும் சொல்லப்படும். அது றூஹுல் அமீனுக்குள்ள தரம் அது எதுபோலானுல் அல்லாஹுத் தஆலா குறுஆனிலே சொன்னதுபோலும் இதற்கு மகாம்மலக்கூத்து.

5-வது றூஹுல் ஜிசுமானிய்யா றூஹுல் ஜவானிய்யா வென்றும் றூஹுல் ஜவாரிய்யா வென்றும் நபுசு வென்றும் சொல்லப்படும் அல்லாஹுத் தஆலா குறுஆனிலே சொன்னதுபோல் றூஹுல் ஹயவானுக்குள்ள தரமாயிருக்கும். இதற்கு மகாம் நாசூத்து.

இதை அஞசிறுவாகிய தபஆகிய நாறும்,ஹவாவும், மாஉம். துருபும், ஆகும். இதை ஆலமுல்கு என்றும் சொல்லப்படும். இவைகளைச் சேர்ந்த கீழ் தரமான நபுசுக்குத்தான் அம்மாரு வென்றும் சொல்லப்படும். இன்னும்,

மேலெழுதின றூஹு சுல்தானென்றது இன்சானுக்குள்ள அஸ்ல். அது வேறேயொரு படைப்புகளுக்கு மில்லை. இந்த றூஹைக்கொண்டு தான் றூஹுல் குதுசை எத்துகிறது. மற்றுமுள்ள றூஹுகள் எல்லா ஹயவானுக்கு முண்டு மெனவறிக. அதிற் சிலதுக்கு 1-ம் சிலதுக்கு 2-ம் சிலதுக்கு 3-ம் சிலதுக்கு 4-ம் ஆக இருக்கும்.

இந்த நாலு றூஹுக்கும் ஒவ்வொரு ஜடலமும் ஒஜீவனமும் குடிப்பும் உண்டும். அதாவது,

றூஹு சுல்தானுக்குள்ள ஜடலம் முதும இன்னுவாக விருக்கும். அது ஒளிவாக விருக்கும் அதற்கு ஒஜீவனம் திக்றும் பிக்றும் முறுகபாவும் முஷாகதாவும்ஷௌகும், அதற்குகுடிப்பு இகுலாசும், ஹுலுஉம், ஹுஷுஉம், கௌபும், ஜஃதும், றஜாவும், றுபூபிய்யத்தும் அமானத்தும், ஆகிய இவைகளாயிருக்கும். இதை றஹுமானிய்யா வென்றும் மூல்கு வென்றும் சொல்லப்படும்.

இனி இதற்குள்ள தரமாகிய றூஹுல் அமீன் ஒன்றேடொன்று மாருகிய பல கோலங்கொண்டு கோலமாய் வருவதற்கும் கூடும். இதற்குள்ள ஒஜீவனம் தஸ்பீகும், தஃலீலும், தக்தீசும், தம்ஜீதும் தஹ்லீமும், தக்பீறும், இஅக்குக் குடிப்பு அல்லாஹுத் தஆலாவைப் புகழுகிறதாயிருக்கும். இனி,

றூஹுற்றவானுக்குள்ள ஒஜீவனமாகிறது தக்வாவும், தௌபாவும், வுலுவும், குழிப்பும், தொழு

கையும், இஸ்திக்பாறும், குறு ஆனோதுகிறதும், து ஆ ஓதுகிறதும், இல்மைப்படிக்கிறதும், சுபுகுடைய ஸுன்னத்துத்தொழுகிறதும்,விதுறுதொழுகிறதும் நோன்பு பிடிக்கிறதும். சகாத்துக் கொடுக்கிறதும், ஹஜ்ஜு செய்கிறதும், சதகாவும், நற்குணமும், ஸபூறும், ஸுகூறும், தவுக்கலும், ஷுஜுதும், எகீனும், கிருபையும், பிரியமும், இனத்தாரைச் சேர்க்கிறதும், அயல்காரருக்குக் கிருபைசெய்கிறதும், பசித்திருக்கிறவர்களுக்கு ஒஜீவனம் கொடுப்பதும், தாகமான பேர்களுக்கு, தாகம் தீர்க்கிறதும், மூடவர், செவிடர், குருடர், நசலாளர் எளியோர் இவாகள் மீதுகிருபையாயிருக்கிறதும், றசூலுல்லாவுடைய வம்ஸத்தாரில் கிருபை வைப்பதும், ஆலீம்கள் பேரில் கிருபையாயிருப்பதும், இதை மலக்கு என்றும், லெவ்வாமாவென்றும் சொல்லப்படும். இனி,

றூஹுல் · ஹயவானிய்யாவுக்குள்ள ஜடலம் காற்முகிய றூஹுல் ஜிசுமானிய்யத்திலே யிருந்ததாக விருக்கும். இந்த நாலு அனுசிறுங் கூடி ஜடலமாகி ஜசதாய் புறப்பட்டு வந்திருக்கிறது. அது எப்படியெனில் அல்லாஹுத் தஆலா குறுஆனில் திருவுளமானது போல் மண்ணில் நின்று முங்களைப் படைத்தோம். இன்னும் அதுபோல வுங்களை மீளுவிப்போம். இன்னுமதில் நின்று முங்களை யின்னுமொரு விடுத்தம் புறப்படுத்திவைப்போம் என்று ஹக்குடைய சொல்லை யோசித்துப்பாருங்கள்.

ஆனதாலிந்த ஜடலத்துக்குள்ள ஆதாரம் ஒஜீவனம்தான். இந்த ஒஜீபனத்துக்குள்ள குடிப்

பும் பரிசும் தானென்றவாறை யுற்றுணர்வீர்கள். அதாவது,

குபிர்த்தனமும், இணையும், அகப்பெருமையும், பெலப்பெருமையும், முகத்தாட்சியும், ஹக்கில்லாமல் கொலை செய்வதும், ஹசதும், ஷிக்தும், சதிமானமும், பகீலும், சினவும், களவும், சிறுக்கும், புறம்பேசுகிறதும், பறளை விடுகிறதும், ஹறுமான கருமங்களைச் செய்கிறதும், ஆங்காரம் காட்டுகிறதும், பொய்ச் சாட்சி சொல்கிறதும், ஸூர் கொண்டு மீலுகிறதும், மௌத்தானல் ஒப்பாரி சொல்லி அழுகிறதும், வலிமைத்தனம் காட்டுகிறதும், கோள் சொல்லுகிறதும், வட்டிவாங்குகிறதும் இதுவெல்லாம் நெருப்பாலும், காற்றாலும் உள்ளது, இதை அம்மாறு வென்று சொல்லப்படும் இபுலிசு வென்றும் சொல்லப்படும். இதளவிலே இழுக்கிறது நபுசு ஹவாவென்று சொல்லப்படும் அதை ஹயவானென்றும் சொல்லப்படும். பெரும் பாவமான ஹறுமான தலத்தளவில் நின்றவர்களெல்லாம் இருளிய்யத்தான அதாபுடைய நரகத்திலே ஹலாக்காகிப் போவார்கள் இனி ஹலாலான ஒளியான தலத்தளவிலே திரும்பினவர்களெல்லாம் நிஹ்மத்தான சுவர்க்கத்திலே தரித்திருப்பார்களென்பது நிச்சயம்.

இருபானல் அறுவாஹுடைய பாடம் முற்றிற்று.

18-வது இறுபானுல் உசூலியுடைய பாடம்.

வினு:—இறுபானுல் உசூலியென்பது என்ன?

விடை:—இறுபானுல் உசூலி யென்பது அக்லகளை யறிதல். அதாவது, அக்ல் நாலு வகைப்படும்.

1-வது அக்லும ஆசி,
2-வது அக்லும ஆனி,
3-வது அக்லுற்றூ ஹானி,
4-வது அக்லுல் இன்சானி என்றறிக. அதாவது,

அக்லுல் மஆனி யென்பது தாபரவஸ்துகளுக்குள்ள அக்ல். அக்லுல் மஆசி யென்பது ஹயவான்களுக்குள்ள அக்ல், அக்லுள்றூஹானி யென்பது மலக்கு ஜின்களுக்குள்ள அக்ல். அக்லுல் இன்சானி யென்பது மனிதர்களுக்குள்ள அக்ல். அக்லென்பது புத்தி பூராய மென்றுணர்க.

இறுபானுல் உசூலியுடைய பாடம் முற்றிற்று.

19-வது இறுபானுல் நாஸியுடைய பாடம்.

வினு:—இறுபானுல் நாஸி யென்பது என்ன?

விடை:—இறுபானுல் நாஸியென்பது மனிதர்களை யறிதல். அதாவது,

இன்சான் நாலு வகையுண்டென்று முணர்க.

1-வது இன்சானுல் ஹகீகி,
2-வது இன்சானுல் காமிலி,
3-வது இன்சானுல் மஜாசி,
4-வது இன்சானுல் ஹயவானி என்றறிக. அதாவது

1-வது உள்ளமையான இன்சான்கள்,
2-வது நிரப்பமான காமிலான இன்சான்கள்,
3-வது கானலைப்போற் கண்டழிந்து போகிற இன்சான்கள்,
4-வது இன்சானுடைய ஸூறத்திலாகிய ஹயவான்களாம், ஹயவான்களென்பது மிருக இனங்களாகும்.

வினா:—இவ்வகை இன்சான்களின் குணமென்ன?

விடை:—இவ்வகை இன்சான்களின் குணம் நாலு வகைப்படும். அதாவது,

ஹகீகியாகிய இன்சான்களுக்கு மேலான அக்லுண்டு. அதாவது,

அதுதான் உள்ளமையான மனிதருக்குள்ள புத்தி அது.

இல்மெனு மறிவும், பகுமெனும் ஆராய்ந்து அறிந்து கொள்வதும், அக்லென்னும் புத்தியும், இப்புத்தி கலப்பற்ற வணக்கமும், நீங்காத முஹப்பற்றும், காணாத காட்சி யென்னும் ஹக்குத் தஆலாவின் திருச்சமுகத்திலிருந்து உறவாடுவதே. ஹகீகிய்யாகிய இன்சான்களுக்குள்ள குணமும், புத்தியும், இன்னும் காமிலாகிய இன்சான்களுக்கு நிரப்பமான அக்லுண்டு அதாவது.

அதுதான் காட்சி கண்ட மனிதருக்குள்ள புத்தி. இப்புத்தி ஹக்குத் தஆலாவின் திருச்சமுகத்தை நாடி தனித்து, விழித்து, பசித்து, முருகபா முஷாஹதா உறூஜூ நுசூலாஷி, ஒன்றுமல்லாமல் இரண்டுமல்லாமல் ஒரே பார்வையாக அதமாய்க் கண்டறிந்தார்களே அப்படி யொத்த காமிலான புண்ணிய வாளர்களின் குணமும் புத்தியும், இன்னும்,

மஜாசிய்யான இன்சான்களுக்குத் தரும்புதலாகிய அக்லுண்டு. அதாவது உண்மையான கருமங்களில் நம்பிக்கைக்கேடும் வழிபட வேண்டிய கருமங்களில் உணர்ச்சிகேடும், உண்மையான அபேட்சைகளில் வெறுப்பும் கெட்ட அபேட்சைகளிலாசை வைத்து இவைகளேயே யுகப்பென்று நாடிமறுமையின் நித்திய பாக்கியத்தை சிந்தியாமலிருந்து வருங்காலத்தில் காத்திராப் பிரகாரமாக இஸ்ருயீல் கையிலகப்பட்டு கடலிலுடைந்த கப்பலைப்போலும் மண்ணிலழிவுகொண்ட கெட்ட புத்தியால் அல்லாஹூத் தஆலாவின் தண்டனைக்குட் பட்டு நித்திய கேட்டுக்குள்ளாவார்கள். அப்படி யாகாமல் அல்லாஹூத் தஆலா காத்தருள் புரிவானாகவும். ஆமீன்.

இன்னும் இன்சானில் ஹயவானிகளுக்குக் கீழான அக்லுண்டு. அதாவது, மிருகங்களுக்குள்ள புத்திபோல் முட்டுவதும், கால்களாலெறிவதும், தனையீன்றதாயையும், தானீன்ற சேயையும், சகோதர முறையையுமறியாமற் கலைத்துப் புணர்வதும், வழிமுரவுண்டதும், மனமாரத் துயில்வதுமாகிய மிருகத்

தை நிகர்த்த அறிவற்ற மனிதர்களுக்குத் தான் ஹயவான்களின் குணமும், புத்தியுமென்று சொல்வதென்றறியவும்.

இவ்விதமான மிருகத்தை நிகர்த்த அக்ல்உண்டுபடாமல்அல்லாஹுத்தஆலா அடியேனையும் முஃமீன் முஸ்லீமாகிய எனது சகோதரர்களையும் தற்காத்து, மேலான ஹகீகியாகிய காமிலாகிய சீதேவித் தனமுள்ள நாயகம்களின்புத்தியும், குணமும், ஆராய்வும் நல்லறிவும், நல்லெண்ணமு மீய்ந்து எங்களுக்கு என்றென்றும் நல்லருள் புரிவானுகவும். ஆமீன், ஆமீன், யாறப்பில் ஆலமீன்.

இருபானுல் நாஸியுடைய பாடம் முற்றிற்று.

20-வது நுபுவ்வத்து வியாயத்துடைய பாடம்.

வினு:—நுபுவ்வத்து விலாயத்து என்பது என்ன ?

விடை:—நுபுவ்வத்து விலாயத்து வென்பது நபித்தனமும் ஒலித்தனமு மென்க அதாவது,

றூஹுல் குதுசாகிய முஹம்மது முஸ்தபா அவர்களுக்கு இரண்டு உடுப்பிருக்கிறது.

1-வது நுபுவ்வத்து வென்கிற உடுப்பு,
2-வது விலாயத்து வென்கிற உடுப்பு.

நுபுவ்வத்து வென்கிற உடுப்புக்கு நாலு பரிமாண முண்டு.

1-வது ஜீபுரிலூ,
2-வது மீக்காயீலு,
3-வது இஸ்ருபீலு,
4-வ்து இஸ்ருயீலு வென்று சொல்லப்படும்.

இன்னும் நாலு பரிமாண முண்டு:

1-வது இபுருஷீம்,
2-வது மூசா,
3-வது ஈசா,
4-வது நூஹூ,

என்றும் மற்றுமுண்டான மலாயிக்கத்துகள், மூறுசலீன்கள், ஔலியாக்கள், அன்பியாக்கள், அவர்களெல்லாம் இதற்குக் கீழான பரிமாணமென்றறியவும்.

இனி விலாயத்தென்கிற உடுப்புக்கு நாலு பரிமாணருண்டு. அவர்களாவன,
1-வது அபூபக்கர் சித்தீகு,
2-வது உமறுல் பாறூகு,
3-வது உதுமான தின்னூறைன்,
4-வது அலிய்யினில் முறுத்தலா,

இன்னும் நாலு பரிமாணருண்டும்.

1-வது ஹனபீ,
2-வது மாலிக்கி,

3-வது சாபிஈ,
4-வது ஹன்பலீ,

என்றும், மற்றுமுண்டான குதுவுமார்கள் அடங்கலும் இதற்குக் கீழான பரிமாணரென் றறியவும்.

இந்த முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் உள்ளமையாகிய றூஹு கொண்டுதான் பதினெண்ணாயிரம் ஆலங்களையு முண்டாக்கப்பட்ட பரிமாண மென்றுணர்க.

இன்னும் விலாயத்தென்கிற தடங்கலும் மஃறூபு ஸுபுஹானி மஃறஹுகு ரஹ்மானி குதுபு றப்பானி கௌது, முஹ்யித்தீன், அப்துல்காதிறு, வென்று சொல்லப்படும்.

இன்னும் நுபுவத்தென்கிற தடங்கலும், முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களாயிருக்கு மென்றுணர்க.

நுபுவ்வத்து விலாயத்துடைய பாடம் முற்றிற்று.

21-வது மஅரிபா முத்தலங்கார முடைய பாடம்.

வினா:—மஅரிபா முத்தலங்காரமென்றது என்ன?

விடை:—மஅரிபா முத்தலங்கார மென்பது மஅரிபாவென்னும் முத்தின் அழகைக் கூறுதல். அதாவது,

வஜம்உல் பறுகிதஷ்றகீகு,
வடறுகுல் ஜம்இ விஜ்தானு,
பிரிந்ததைச் சேர்க்கிறது ஹாலாகிறதாக இருக்கும்.

சேர்ந்ததைப் பிரிக்கிறது காணுகிறதற்காக விருக்கும்.

தோற்றுதிருந்து வெளியிற் தோற்றிய முத்தின் அழகே நூறின் அழகு.

வினா:—அஹதியத்திலே நூறு எப்படி யிருந்தது?

விடை:—பல குறிப்புகளும் மறைவாயடங்கி யுருளா யிருந்தது.

வினா:—வுஹதத்திலே நூறு எப்படி யிருந்தது?

விடை:—பல குறிப்புகளும் வெளியாயடங்கிய துப் பரவான ஒளியாய் வெளியானது.

வினா:—சமதியத்திலே நூறு எப்படி யிருந்தது?

விடை:—நிரப்பமான குணமுள்ளதாயிருந்தது.

வினா:—அறுவாஹத்லே நூறு எப்படி யிருந்தது?

விடை:—இறக்கத்துலே அஹதிய்யத்துக்குச் சமான மானது வெளிப்படையில்.

வினா:—மிதாலிலே நூறு எப்படி யிருந்தது?

விடை:—இறக்கமாகிய வெளிப்டையில் வுஹத்தத் துக்கு சமானமானது.

வினா:—அஜ்சாமிலே நூறு எப்படி யிருந்தது?

விடை:—இறக்கமாகிய வெளிப்படையில் வாஹிதிய் யாவுக்குச் சமானமானது.

வினா:—இன்சானிலே நூறு எப்படி யிருந்தது?

விடை:—மனுரூபம் தோற்றியிருந்தது.

வினா:—பைலு அக்தசாக வெளியானது என்ன?

விடை—:அஹதிய்யத்துத் துப்புரவான ஒளியாய் வெளியானது.

வினா:—பைலு முகத்தசாக வெளியானது என்ன்?

விடை:—அஹதியத்துத் துப்புரவாகிய ஒளியாய் வெளியானது.

வினா:—இது இரண்டும் ஒன்றோ இரண்டோ?

விடை:—ஒன்றாகினும் இரண்டுக்குள்ள குறிப்புள்ளது.

வினா:—மகாமன் மஹ்மூதா என்பது என்ன?

விடை:—அது வுஹதத்துடைய மகாம் இந்தப் பன்னிரெண்டு வினாவும், யாதெனக் கருதுவீர்கள். இவை மங்கூசு, மஃகூசுடையதென ஆகிவிடும்.

மஅரிபா முத்தலங்காரத்துடைய பாடம் முற்றிற்று.

பிற்பகுதி பாடம் இருபத்தோன்றும் முற்றிற்று.

Printed at the Shahul Hameethia Press, Triplicane, Madras.